
Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்


விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 04 | 18 - 24 - மார்ச் - 2005



## முள்ளியவளை முஸ்லிம் மக்கள்



## முறியடிப்புப் புலனாய்வு...



## எப்போது நிற்கும்..?




## நெருப்பேந்தி தெருவினிலே...

## படித்ததில் பிடித்தது

# மலைப்புகள்

இந்த மலைகள்
தன்னுடல் வளைவுகளை
மெல்லத்திருப்பிக் காட்டுகிறது
எனக்காக.
ஏதோ ஆணழகுப் போட்டியினைப்
போல்.

சில சமயம்
பஸ்ஸிற்குள் நகரும்
என் கண்களுக்கு
இது நகராத ஒட்டகம்.

உச்சி வெயிலில்
ஒரு கேடி அரைமுகங்களைக்
கல்லாக்கி வாரிக்குவித்துப்
பின் இரைத்து
எவனோ செய்த
பிரமாண்டமான நையாண்டி.

நிலத்திற்கு ஏன் இந்த
சாஸ்வதக் கொப்பளங்கள்
இறங்கி வந்து நினைத்துப்பார்க்கிறேன்
நெடுந்தூர மலை நிழலில்
அந்தச் செம்மண் வயலில்
ஒரு சின்னப் பையன்
அடிக்கும் சுகமான சீட்டிக்கு
மறு சீட்டியடிக்கிறது
கிழட்டு மலைகள்.

ஆங்கிலத்தில்:- நபி
தமிழில்:-இ.றஜீத்

# இலகுவான பயணம்

புளியங்குளத்தில் நந்து அந்தக்கார் புறப்படத்தயாரானது.

ஆறுபேர் நின்றோம். ஆனால் ஏழு பேர் சேர்ந்தால் தான் கார் புறப்படும் என்றார் சாரதி.

சரி ஒருவாறு இன்னுமொருவர் வந்து சேர கார் ஏ-9 வீதியில் உருளத்தொடங்கியது.

நிச்சயமாக அந்த பழையகாரை தயாரித்த நாடு அல்லது கம்பனிக்காரன் மட்டும் கண்டால் சிலவேளைகளில் சில ஆயிரங்களே பெறுமதியான அந்தக்காரை பல இலட்சங்கள் கொடுத்து வாங்கினாலும் வாங்கக்கூடும்.

காரணம் இவ்வளவு நீண்ட கால பாவனையால் அந்தக். கார் இருக்கிறது என அவனே நம்பமாட்டான்.

சரி அதைவிடுத்து நாங்கள் விசயத்துக்கு வருவோம். ஏழுபேருடன் புறப்பட்ட காருக்குள் இருந்த எங்களுக்கு ..னவெக்கையும் போதாத காற்றும் ஏதோவெல்லாம் செய்யத் தொடங்கியது.

கொஞ்சம் பொறுமை இழந்த ஒரு வயோதிபர் தம்பி றைவர் என்ன.. உம்மட காரில பாட்டுப்பெட்டி இல்லையா... என்றார்..

அதற்கு றைவர் நான் ஐயா பாட்டுப்பெட்டி காரில் வைத்திருப்பதில்லை. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது என்றார்..

என்ன காரணம் என்றார் ஐயா...!

இப்ப பாருங்கோ ஐயா காருக்குள்ள ஏழுபேர் இருக்கிறியள் நீங்கள் ஏழுபேரும் ஒவ்வொருவரா ஒரு பாட்டு வீதம் பாட வெளிக்கிட்டா நல்ல பாட்டு கேட்ட மாதிரியும் இருக்கும் நாங்கள் ஒரு சுற்றுலாவுக்குப் போற மாதிரிப் பயணமும் இலகுவாக இருக்கும். அதோட நான் உள்ளூர் கலைஞர்களை ஊக்குவித்த மாதிரியும் இருக்கும் என்றார் பாருங்கள்.

கார் எனக்கு. அசுர வேகத்தில் போற மாதிரி இருந்தது.

# காரசாரம்

மனித மனம் ஆசைகள் நிரம்பியது. இது பற்றி ஒருகதை சொல்வதுண்டு. ஆசைகளுக்கெல்லாம் பெரிய ஆசை பணத்தாசை. பணம் ஒன்றுதான் உலகில் சகல இடங்களிலும் வெல்லக் கூடியது. ஒரு பிச்சைக்காரன் நடந்து போனான். அவனுக்கு முன்னால் சைக்கிளில் போனவனைப் பார்த்து இவன் எனக்கொரு சைக்கிள் இருந்தால்..என்று ஆசைப் பட்டானாம். சைக்கிளில் சென்றவனோ.. எனக்கொரு மோட்டார் சைக்கிள் இருந்தால் என்று ஆசைப்பட்டானாம். மோட்டார் சைக்கிளில் அடிப்படையில்தான் திரைகட லோடியும் திரவியம் தேடச் சிலர் போனார்கள். இந்த திரவியமெல்லாம், திரட்டி ஊருக்கு அனுப்புவதிலும், நாட்டுக்குச் செலவிடுவதிலும் தீராத ஆசையோடுதான் உழைக்கின்றார்கள். ஆனால் இங்குள்ள உறவுகளின் மனமும் எண்ணமும் ஆசைகளை வளர்த்துக் கொண்டு, பணத்திலேயே குறியாக இருப்பது. பாவம் அங்கு கஷ்டப்படும் உறவு களுக்கு பேரவலமாக இருக்கிறது. பத்து வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டில் உழைக்கும் ஒரு இவன் விட்டிட்டு வந்தாக் குழம்பிப்போம். என்ன பழஞ்சோறு அமிர்தமான சாப்பாடே. இஞ்ச நாடுகுழம்பும் போல கிடக்குது வராத எண்டு எழுதிப்போட்டன் “பணமில்லா தவன் பிணம்” என்றொரு மொழியுண்டு. பணம் உழைக்கிறவன் நடமாடும் பிணம். பதினான்கு வருடம் கழித்து வந்து தாயைப் பார்க்கக்கூட உரிமை யில்லாத உழைப்பாளி வெளிநாட்டு வாசி.

நாம் ஏன் இப்படியானோம். இந்த காசோலைக் கலாச்சாரத்தில் வீடு கட்டி மாடிகட்டி முற்றத்து மண்ணைக்கூட மூடிச் சாந்து போட்டு நிலத்திலிருந்த புல்பூண்டுகள் முளைத்து வருவதைக்கூட மறுக் கிறோம். இளைஞர்கள் எந்த வித தொழிலும் செய்ய முடியாதவர்களாக நாள்முழுதும் புதுப்புது

## பணத்துக்கு அப்பால் மனித உறவுகள் முக்கியம்

போனவனோ காருக்கு ஆசைப்பட்டான் என்னிடம் ஒரு கார் இருந்தால் குடும்பம் முழுவதையும் கூட்டிச்செல்லலாமே என்று. அப்படி குடும்பத்தோடு காரில் சென்றவனின் முன் படகுபோன்ற பெரிய காரில் ஒருவர் தனித்துப்பயணம் செய்வதைப்பார்த்து ஆகா எனக்கு இது போல் பெரிய காரில் தனியப்போகும் பாக்கியமில்லையே என்று சலித்தாராம். இப்போது விசயத்துக்கு வருவோம். நாம் முதலில் சந்தித்த பிச் சைக்காரர் ஒரு வைத்தியர் வீட்டுக்குப் பிச்சைக்கு வருகிறார். அதே வீட்டுக்குப் படகுக்கார் வந்தது. அந்தப்பணக்காரர் வைத்தியரிடம் ‘ஐயா எனக்கு குளுக்கோசும் செமிக் குதில்லை. மருந்து தாருங்கோ” என்றார். அப்போது அவர் பார்வை அடுக்களை வாசலில் நின்ற வைத்தியரின் மனைவி செய்யும் வேலையில் பதிந்தது. அந்த அம்மா பழைய சோற்றை ஒரு சட்டியில் போட்டா அதில் மீதமிருந்த பழைய கறிவகை களைக் கொட்டிக் குழைத்தார். ச்சா பழைய சோற்றுக் குழையலைப்பார்க்க பணக்காரருக்கு வாயூறியது. அவருக்குத்தான் செமிக்காதே. அம்மா அந்தக்குழையலைப் பிச்சைக் காரனின் பாத்திரத்தில் கொட்டினார். அவன் அவுக் அவுக்கென்று சாப்பிட்டான். “ச்சா.. நானிந்த பிச்சைக் காரனாக இருக்கக்கூடாதா..” என்று ஏங்கினான் பணக்காரன். இதுதான் உலகம் என்ன இருந்தாலும் திருப்தியின்மை என்பது உடனிருக்கும்.

ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின் என்று சித்தர்களும் சொன்னார்கள். ஆனால் ஆசை யாரைத்தான் விட்டது. இந்த ஆசையின்



வாலிபன் தன் மூன்று தங்கைகளுக்கும் ஒரு தம்பிக்கும் சீதனத்துடன் திருமணம் செய்து கொடுத்து விட்டு நாற்பது வயதுக்கு மேல் சீதனமில்லாமலே ஒரு பெண்ணை திருமணம் செய்யத் தேடினாலும் முன் வழுக்கை அவனுக்கு இடையூறு. ஆனால் பெற்றெடுத்து பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாய் மனித உறவுக ளிலெல்லாம் புனிதமானது எனப் போற்றப்படும் தாய். எப்படிப் பணப் பேயானாள் என்பதுதான் புதிர். எனக்கு நன்கு அறிமுகமான ஒருதாய் தன் மகனிடமிருந்து வந்த கடிதத்தை காட்டிப்பெரு மூச்செறிந்தார். மகன் வெளிநாடு சென்று பதினான்கு வருடம் இன்னும் திருமணமாக வில்லை. வீட்டுக்கு வர விரும்பி அவன் எழுதிய வாசகம் “அம்மா உன்ர கையால ஒரு திரளை பழஞ் சோறு வாங்கித்தின்ன ஆசையாய் இருக்கு. நான் ஊருக்குவர விரும்புறன்.” அந்தத்தாய் என்னிடம் சொன்ன கதை என்னைப் புரட்டிப் போட்டது. இஞ்ச வந்து என்னேயப் போறாராம் ரெண்டு பிள்ளைய முடிச்சுக்குடுத்தாச்சு. சின்னவளுக்கு காணி எடுத்து வீட்டுவேலை இந்தா அந்தா எண்டு நடக்குது. இந்த நேரம் எல்லாத்தையும் விட்டிட்டு இஞ்ச வந்தா இவன் வெளிநாடெண்டதாலதான் இந்தச் சம்பந்தம் சரிவந்த. உந்துருளிகளில் சுற்றித்திரியவும், சினிமா சிகரெட் எனவும் பழகிக் கொள்கிறார்கள். பெண்களும் அவ்வாறே தமக்கேற்ப ஆடம்பரங்களில் திளைக்கின்றனர். வீடுகளில் சமைப்பதையே ஒரு சுமையா கக்கண்டு உணவு விடுதிகளில் உணவெடுத்து உண்பது நாகரிகமாகவும் கருதப் படுகிறது. உணவு விடுதிச் சாப்பாடுதான் என்றாலும் அடுக்களையில் ‘காஸ் குக்கர்’, ‘மிக்சி’ ‘மின் அடுப்பு’, ‘ரைஸ் குக்கர்’, கிரேப்பர், சிங்க், மேசைக் கத்திகள் பத்து வகை சில்வர் பாத்திரங்கள், கிரைண்டர் போன்ற சகல மேனாட்டுயந்திராதிகளும் கொழும்பில் மட்டுமே கிடைக்கக்கூடிய பாத்திர வகைகளும் நிறைந்துள்ளன. அது அழகுக்கு இவ்வளவு சொகுசான வாழ்க்கை பற்றி மற்றவர் கூறும்போது வெளி நாட்டுக்காசு என்று சுருக்கமாகக் கூறி விடு கின்றனர். இந்தப்பணத்தை உங்கள் பாச உறவுகள் எப்படிச் சம்பாதிக்கிறார்கள் என்பதையும் அவர்கள் படும் துயரங்களையும் ஒரு தடவை நினைத்துப் பார்த்தால் என்ன? பணத்துக்கும் அப்பால் மனித உணர்வுகள் மடிந்து போகாமல் காப்பாற்றுங்கள்.

மாயா

# நோர்வேயின் முயற்சிக்கு கடும்போக்காளரின் எதிர்ப்பு



போருமில்லாத சமாதானமும் இல்லாத இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் ஏதோவொரு பக்கத்துக்கு சாயவேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது. நீண்ட காலத்துக்கு இடை நடுவே நின்றுகொண்டிருப்பது எந்தத் தரப்பினருக்கும் சாத்தியமானதும் அல்ல.

அதிலும் குறிப்பாக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழர்களுக்கு இது நீண்ட காலத்துக்கு சாத்தியமானதல்ல. அதனால் ஏதாவது ஒன்றுக்கு விரைவில் போயாக வேண்டும். என்ற நிர்ப்பந்தம் இருக்கின்றது.

கடந்த ஆண்டுகளில் இடம் பெற்ற ஆறு சுற்றுப் பேச்சுக்களின் காரணமாக ஆக்க பூர்வமாக எதுவுமே நிகழவில்லை. அதை விட பேச்சுக்களின்றி சமாதானமுமின்றி இழுபட்ட இரண்டாண்டுகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிழல்யுத்தமே நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவற்றின் பின்னணியில் விடுதலைப் புலிகள் போருக்குப் போய் விடுவார்கள் என்ற கணிப்பீடுகள் இடம் பெற்றன. உண்மையில் விடுதலைப்புலிகளை அந்த நிலைக்குள் தள்ளும் முயற்சிகள் தான் இடம்பெறுகின்றன. ஆயினும் புலிகள் காட்டி வரும் இதுவரையில்லாத நிதானம், பொறுமை என்பன அதனைத் தாமதப் படுத்துகின்றன.

இந்த நிலையில் தென்னிலங்கையில் கூறப்படும் சில கருத்துக்கள் சில மாற்றங்களை ஏற்படுத்திவிடக் கூடும் என ஐயங்களை ஏற்படுத்தலாம்.

நாட்டின் சனாதிபதி சந்திரிகா தனது ஆட்சியின் இறுதி மாதங்களில் நின்று கொண்டு கூறியிருக்கும் கருத்துக்கள் தான் அந்த சந்தேகங்களை உண்டுபண்ணுகின்றன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மகளிர் மாநாட்டில் பேசும் போது சமஷ்டித்தீர்வின் அடிப்படையில் இலங்கை இனப் பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டும் . என்றார். அத்துடன் பெயர் சுட்டாது, ஜே.வி.பி போன்ற சக்திகள் வெல்ல முடியாத போருக்குள் தள்ள முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டினார். அவரின் கருத்துப் படி வெல்லக்கூடிய, தமிழரைத் தோற்கடிக்கக் கூடிய யுத்தம் ஒன்றுக்கு மட்டும் தான் செல்ல இயலும் என்பதுதான் பெறப்படுகின்றது. வெல்ல முடியாததால் சமஷ்டி அடிப்படையில் தீர்வு காண்பது பற்றி பேசியிருக்கிறார் என்று கொள்ளமுடியும்.

ஆயினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவிக் காலம் முடிவடைகின்ற நிலையில் அதே அதிகாரங்களுடன் பிரதமராக வாழ்வதற்குரிய ஏற்பாடுகளை செய்யவே இப்போதும் முயல்கின்றார். அதற்கான ஆதரவைப் பெறும் நோக்கோடுதான் இந்த வழி முறையையும் கையாளுகின்றார்.





இந்த அறிவிப்பு வெளியான நேரத்தில் தான் விடுதலைப் புலிகளின் உயர் மட்ட அரசியல் குழுவின் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணம் ஆரம்பித்துள்ளது. இயற்கைப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் பணியில் வடக்கு கிழக்குக்கு அளிக்கப்படவேண்டிய முக்கியத்துவத்தையும் அதற்காக உருவாக்கப்பட வேண்டிய பொதுக் கட்டமைப்புப் பற்றியும் அதில் விடுதலைப்புலிகளுக்கு இருக்க வேண்டிய பொறுப்புப்பற்றியும் இராஜதந்திர வட்டாரங்களுக்கு விளக்குகின்றனர்.

இதற்காக நோர்வே முன் வைத்த பொதுக்கட்டமைப்பு யோசனைகளை ஏற்றுக்கொண்டு அரசின் பதிலுக்காக காத்திருக்கின்றனர். சிறிலங்கா அரச தரப்பும் இது விடயத்தில் இணங்குவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், அரசின் அங்கமாகவுள்ள ஜே.வி.பி பொதுக்கட்டமைப்பு என்ற யோசனையை- விடுதலைப் புலிகளுக்கு அதில் இடமளிப்பதை கடுமையாக எதிர்க்கின்றது. எக் காரணம் கொண்டும் அப்படியொன்று உருவாக்கப்படுமானால் அரசை விட்டுவைக்கமாட்டோம் என்று மிரட்டுகின்றது.

இவற்றைப் பார்க்கும் போது பொதுக்கட்டமைப்பும் சாத்தியமாகுமா- பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்குமா என்பது கேள்விக்குரியதாகவே மாறுகின்றது. சனாதிபதி ஒரு பக்கம் தனது ஆதரவு நிலைப்பாட்டை காட்ட, அவரின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் அதற்கு மாறாக ஜே.வி.பியுடன் ஒத்துப் போகும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஒட்டு மொத்தமாக அரசுத் தரப்புக்கு உள்ளேயே இது தொடர்பில் ஒருமித்த கருத்து இல்லை.

நோர்வே அரசு இதற்கு ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு தீவிரமாக முயன்று வருகின்றது. ஆனால், இவை எல்லாவற்றையும் புறமொதுக்கி தோற்கடித்து விடவேண்டும். என்பதில் சிங்களக் கடும்போக்காளர்கள் முயன்று வருகின்றனர்.

அதற்காக அவர்கள் இப்போது கையில் எடுத்துள்ள ஆயுதம் விடுதலைப் புலிகளின் விமானப் படை பற்றிய அச்சுறுத்தலாகும். விடுதலைப் புலிகள் தம்மிடம் விமானங்கள் இருப்பதாக போர்நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே கூறியிருக்கிறார்கள் அது பற்றி தென்னிலங்கை ஊடகங்களில் அப்போதே தகவல்கள் வெளியாகியும் இருந்தன.

ஆனால், சிறிலங்கா வான் படை வேவு விமானம் பிடித்ததாகக் கூறும் படத்துடன் இப்போது அதனை விவகாரமாக்க முயற்சிக்கப்படுகிறது. போர் நிறுத்தத்துக்குப் பின்னர் தான் விடுதலைப் புலிகள் விமானங்களைப் பெற்றார்கள் என்று கூறி தென்னிலங்கையை உசுப்பத், தொடங்கியுள்ளது. அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் அதனால் கொழும்பின் அரைவாசிப் பகுதியே அழிந்து விடும் என்று மிரட்டியுள்ளனர்.

கடும் போக்கு இனவாத அமைப்பான ஹெல உறுமய விமானத் தளத்தை அழிக்க வேண்டும் என்று போராடத்தொடங்கியுள்ளது. அதாவது ஒரு போரை தமிழர் தாயகத்தில் நடத்தவேண்டும் என்று கூறியுள்ளது. அதற்காக இந்தியாவோடு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும் என்று சனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வாறான நிலைப்பாடுகளை சிறிலங்கா அரசதரப்பினரே ஊக்குவித்தும் வருகீன்றனர். இதன் மூலமாக தமிழர்களை இணைத்து தீர்வு காண்பதை தவிர்க்கவே முயல்கின்றனர். ஒரு பக்கத்தில் தீர்வுக்கு முயற்சிப்பதாகக் காட்டிக்கொண்டு மறுபுறத்தே இத்தகைய செயற்பாடுகள் மூலமாக அதனை குழப்புகின்றனர்.

ஆக சனாதிபதி சமஷ்டித் தீர்வின் அடிப்படையில் தான் தீர்வு காணவேண்டும் என்று கூறியது முதல் தென்னிலங்கையில் நடைபெறும் தமிழர் விரோதப்போராட்டங்கள் வரை எல்லாமே திட்டமிட்ட நாடகமாகவே உள்ளன என்பது தெளிவாகின்றது.

இவற்றுக்கூடாக தமிழர் தரப்பின் நகர்வு எப்படிப்பட்டது என்பதை விரைவில் தெரிந்து கொள்ளலாம். விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழுவின் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின் முடிவில் தமிழர்களுக்கான அறுவடையை எதிர் பார்க்கலாம்.

**ஞாபகன்**

---



## விசுக்விசுக் விசாலாட்சி

நீங்கள் என்ன சொல்லுங்கோ, நாய்வாலை நிமித்தேலாது.

''நாய்வாலை அளவெடுத்து, நறுக்கித்தள்ளின நற்றமிழை எழுத எழுத்தாணியாமோ... பேய்வாழும் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளி பெரிய விளக்கேற்றிவைத்தால் வீடதாமோ'' எண்டொரு சித்தர் பாடல் கிடக்கு.

காலங்காலமாக தமிழற்ற காலுக்க நிலம்பிடிச்ச சிங்கள அரசுக்கு இந்தா பிடியெண்டு சுனாமி சுழட்டிக் கலைச்சுப்போட்டு இடம்பிடிச்சுக்குடுத்திருக்கோ, அ... அவைக்கென்ன ஆமியும் பிடிச்சான் சுனாமியும் பிடிச்சுது. நிலம் வெளிச்சிட்டுது. உங்களுக்கு தெரியுமே பொடியள் அந்த நாளையில உந்தச் சிங்களச் சனத்தை தமிழற்ற பக்கங் கொண்டர என்னபாடுபட்டவங்கள். அப்பென்ன நீங்கள் பிறந்திருக்கயும் மாட்டியள். இப்பெண்டாலும் பிரபாகரன் ஒரு சண்டையத் துவக்கினதால எல்லாரும் உசாரா நிண்டு அடிபடுறம். நீங்களும் கடற்கரையில வீட்டக்கட்டவே வேணுமெண்டு நிக்கிறியள். அந்த நாளயில கோணேசரக் கோயிலுக்குப் போகவர இருந்தநேரம் உந்தத்துறை முகத்தடியில ஆர் இருந்த. எல்லாமாப் பதினாறேக்கர் காணி. ஓ... துறைமுகத்துக்குள்ளது. பதினாறேக்கர் நிலம். அங்கின காவறில மூடை இறக்கியேற்றிப் பறிக்கிறதுகள் மணலுக்க ஓலைக் கீத்துப் போட்டுப் படுத்திருக்குங்கள். பிறகு அங்கின கொட்டிலுகளப் போட்டுச் சீவிச்சதுகள். பிறகென்னடாண்டா எப்பன் கூட்டி நாப்பதம்பதேக்கர் காணிய வளைச்சிட்டாங்கள். என்ன துறைமுகத்தை கூட்டப்போறம் எண்டாங்கள். சனமும் காலப்போக்கில பிள்ளையள் குட்டியள் பெருகினதும் சம்பந்தம் செய்ததுகளும் வந்து குடியேறினதுமெண்டு நூறு வருசத்துக்கு பெருகின தமிழர் மட்டுமே தூரத்தயிருந்து தொழில் செய்ய வந்தவையுமெல்லே குடில்போட்டிட்டினம். பாழ்படுவார் எண்டைக்குந்த உலக யுத்தம் மூண்டு சப்பான்காறன் குண்டு போட வெளிக்கிட்டானோ அப்ப பிடிச்சதடா திருக்கணாமலைக்கு இயமன். திருக்கணாமலைக்க இருக்கிற துறைமுகம் வலு இறுக்கமான இடமடா. நாலுபக்கத்தாலும் மலையளும், குன்றுகளுமாக்கிடக்கு. பத்துக்கப்பலெண்டாலும் உள்ளுக்க பதுங்கி நிக்கலாமாம். ஆனா இந்தக் குடைவுக்க போகவர ஒருவாசல் இருக்கிறதுதான் பாதுகாப்பாம். உந்த ஒண்டுக்கால போயே ரணசுறு வீரயாவைக் கவுட்ட எங்கட பொடி பொட்டையளையும் நினைச்சுப் பாக்க வேண்டியதுதானே.

இந்தத் துறைமுகத்துக்கு ஏறுமுகம் வந்ததும் பிடிவிறாந்தில பிடிச்சமாரி பல நாடுகளாலும் பிடிக்க வந்தவை தெரியுந்தானே. உந்த சீனன்குடா எண்ணைக்குதத்தின்ர கதைய பிஞ்சார் சும்மா இல்ல. பிரிட்டிசுக்காரர் 82இல கட்டிக்குடுத்தது உந்த எண்ணைக்குதம். எண்ணைக்குதமென்ன நீங்கள் எங்கட ஊருக்க வாற ஏயெம்ரி வாகனப்பவுசர் போலயே நினைக்கிறியள். எடயப்பா பத்து லட்சம் லீற்றர் - சும்மாயில்ல ஒரு குதத்தில பத்துலச்சம் லீற்றர். அப்ப நூற்றியொரு குதத்துக்கும் கணக்கப்பாரன், ங... இதைக் குத்தகைக் கெடுத்துப்போடக் குத்துக்கரணம் போட்டதிலதானே இந்தியா மூக்குடைஞ்சது. ஏனோ-எடேயவர் ஜேயார் அமெரிக்காவுக்கெல்லே குத்தகைவிட்டவர். அப்பவும் மூண்டு கோடி கூட்டித் தாறனெண்டு இந்தியா கேட்டதுதான். ஜேயார், அதெல்லாம் இலங்கைக்குப் பாதுகாப்பில்ல; எது? “இலங்கைக்குப் பாதுகாப்பில்ல எண்டுபோட்டார். அமெரிக்காவத்தெரியும் தானே. றால்போட்டுச் சுறாப் பிடிக்கிற ஆள். சீனன்குடா குதத்த எடுத்து அங்க

(22 ஆம் பக்கம் பார்க்க...)

# நறுக்கென...

## ஈழவிடுதலையும் -இந்தியப் பாதுகாப்பும்



வரவர இலங்கையின் பாதுகாப்புக்கு உதவி என்ற பெயரிலும், இராணுவத்தை பலப்படுத்துவது என்ற பெயரிலும் அமெரிக்கா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் இலங்கையில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் வெளிப்பார்வைக்கு விடுதலைப்புலிகளுக்கு அதாவது தமிழ்மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளாக தென்பட்டாலும், இவையாவும் இந்தியாவின் பாதுகாப்புக்கும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் அதன் ஆதிக்கவலுவுக்கும் விடுக்கப்படும் எதிர்கால அச்சுறுத்தலாகவே இருக்கப்போகிறது என்றால் அதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினையை சமாதான நடவடிக்கைகளை மையப்படுத்தி, அதன் பொருளாதார பலவீனத்தை பயன்படுத்தி அரசியல் ஸ்திரத்தன்மையின்மையை கையாண்டு இராணுவ மற்றும் பொருளாதார ரீதியிலான உதவிகளை வழங்குவதாகக் கூறிக்கொண்டும் பல்வேறுவகையிலும் இராஜதந்திர மற்றும் இராணுவ தந்திர ரீதியிலான ஊடுருவல்களை மேற்கொள்ள முனையும் இந்தியாவுக்கு எதிரான மறைமுக நோக்கங்களைக் கொண்ட நாடுகள் அனைத்தையும் தளம் கொள்ளவைக்கும் இடமாக இலங்கை மாறிவருகிறது.

ஏககாலத்தில் இந்தியாவையும், அதற்கு எதிரான நாடுகளையும் சமாளிக்கும் உத்திகளை இலங்கையின் ஆட்சியாளர்கள் மிக இலாவகமாகக் கையாண்டு வருகின்றார்கள் என்றால் மிகையில்லை.

இதில் முக்கிய விடயமென்னவென்றால் எந்தவொரு பகுதிக்கும் இலங்கையின் பேரினவாதத் தலைமைகள் உண்மையான விசுவாசத்துடன் செயற்படவில்லை என்பதேயாகும்.

இலங்கையின் இன விவகாரம் தொடர்பாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர விருப்பற்ற சிங்கள அரசு அனைத்து நாடுகளினதும் இராணுவ உதவிகளைப் பெறுவதிலும், ஆதிக்க சக்திகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வதிலும் காட்டும் அக்கறையானதும் பொருளாதார உதவிகளை பெற்றுக்கொள்வதில் காட்டும் முனைப்பும் பாரிய அரசியல் சுயநல உள்நோக்கங்களைக் கொண்டதேயாகும்.

ஆதிக்க சக்திகள் இலங்கையை தமது தளமாக்கும் நோக்குடன் உதவுகின்றன. இலங்கையோ அவைகளை 'பேய்க்காட்டி' சமாளித்து தனது நலன்களைப் பெற்றுக்கொள்ள முயல்கின்றது. தமிழர்களுக்கான உரிமைகளை வழங்க விருப்பமற்று தமிழர் தாயகப் பகுதிகளில் அந்நிய சக்திகளுக்கு தளம் கொள்ள இடம் வழங்க முயன்றுவரும் சிங்கள தலைமைகளால் இலங்கையின் எதிர்காலம் மட்டுமல்ல அயலக நாடான இந்தியாவின் பாதுகாப்பும் கூட அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றது என்பதை தென்பகுதி மக்களும் இந்திய அரசும் புரிந்துகொள்வது நல்லது.

இந்தியாவின் பாதுகாப்புக்கு தமிழீழத்தின் விடுதலை அத்தியாவசியமானது என்ற அரசியல் நோக்கர்களின் கருத்தை உதாசீனம் செய்வது இந்தியாவுக்கு நல்லதல்ல...

## அரசு என்ன செய்யப்போகிறதாம்



சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் பேரழிவை ஏற்படுத்திய போது ஏற்பட்ட சூழல் சமாதானப்பேச்சுக்களை தொடரவும் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் அரசுக்கு இருந்துவந்த அழுத்தம் மறக்கப்பட்டு நிவாரணப்பணிகள், மீட்புப் பணிகள், புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் என்று சர்வதேச சமூகத்தின் கவனம் திசை திரும்பிய போது அப்பாடா என்று பெருமூச்சுவிட்ட சனாதிபதியும் அரசும் சர்வதேச உதவிகளை நிவாரணப்பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரபட்சமாக அரசியல் உள்நோக்கங்களுடன் விநியோகிக்க முயன்றபோது மறுபடியும் தனக்குத்தானே வலையொன்றை விரிப்பதை உணரவில்லை.

கொஞ்சக்காலத்திற்கு-அதாவது தனது பதவிக்காலம் முடியும்வரைக்காவது 'சுனாமி'யின் பெயரால் அரசியல் பண்ணலாம் என நினைத்த அரசுக்கும் சனாதிபதிக்கும் சமாதானப் பேச்சுக்கள் குறித்த தலைவலி மறைந்துபோய்விடும் என நினைத்தபோது பொதுக்கட்டமைப்பு விவகாரம் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியுள்ளமை திருகு வலியையும் சேர்த்துக்கொடுத்துள்ளது.

அரசின்-சனாதிபதியின் நேர்மையின்மையே இப்போதும் அவர்களுக்கு நெருக்கடியை உண்டுபண்ணியுள்ளது.

நோர்வேயின் பொதுக்கட்டமைப்பு குறித்த வரைபினை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொண்டுவிட்ட நிலையில் இப்போது அரசின் பதிலைக் காத்துநிற்கிறது.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை முற்றாகவே எதிர்ப்பதாகக் கூறும் தனது பங்காளிகளை சமாளிக்கமுடியாது திணறும் சனாதிபதியால் இது குறித்து எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாத நிலையே இதுவரை உள்ளது.

நிவாரணம் தொடர்பான பணிகளை பாரபட்சமின்றி மேற்கொள்ள பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம் அவசியம் என்பது பலதரப்பினராலும் உணரப்பட்டுள்ள நிலையில்- புலிகளும் அதனை ஏற்றுக்கொண்டுவிட்டுள்ள நிலையில் அரசின் முடிவு மிகவும் எதிர்பார்க்கப்படுவதாக உள்ளது. இன்னும் சில நாட்களில் இது தொடர்பான முடிவை அரசு வெளியிட்டே தீரவேண்டும்.

இந்த முடிவில் சமாதானத்தின் எதிர்காலம், ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் எதிர்காலம், சனாதிபதியின் நியாயத்தன்மை, ஜே.வி.பியினரின் மனித நேயப்பண்பின் தன்மை அனைத்தும் கணிப்பிடப்படப்போகிறது என்பதே உண்மையாகும்.

பொதுக்கட்டமைப்பு உருவாகுமா?

ஜே.வி.பி ஆட்சியால் தொடர்ந்தும் அங்கம் வகிக்குமா?

சனாதிபதி நியாயமாக நடப்பாரா?

அரசு தொடர்ந்து இயங்குமா? அல்லது உடையுமா?

கொஞ்சம் பொறுத்திருங்களேன்...!

## கூடாத கூட்டும் அரச கூட்டணிக் கூத்தும்



'நான் மிரட்டுவது போல மிரட்டுவேன், திட்டுவது போல திட்டுவேன்.' ஏன் சிலவேளைகளில் போங்கள் வெளியே என்று கூட கத்துவேன்... ஆனால் நீங்கள் பயப்படவோ, கோபப்படவோ கூடாது. அரசைவிட்டு வெளியேறிவிடவும் கூடாது என சந்திரிகா அம்மையார் ஜே.வி.பியினரிடமும்.

நாங்கள் உங்களை மிரட்டுவோம், திட்டுவோம், வெளியேறிவிடுவோம் என்றெல்லாம் அறிக்கை விடுவோம். நீங்கள் அது குறித்து அலட்டிக்கொள்ளக்கூடாது என்று ஜே.வி.பியினர் சந்திரிகாவிடமும், ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி கூட்டணி அமைக்கப்பட்டவேளையில் பரஸ்பரம் பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்றே தோன்றுகின்றது.

இல்லாவிட்டால் இரு தரப்பினரும் ரோஷமற்று, முதுகெலும்பில்லாதவர்கள் போன்று ஆட்சியில் ஒண்டிக்கொண்டும், ஒட்டிக்கொண்டுமிருக்க முடியாது.

-சந்திரிகாவுக்கு ஜே.வி.பியை விட்டால் வேறு பலம் கிடையாது

-ஜே.வி.பிக்கும் சந்திரிகாவை விட்டால் வேறு நாதி கிடையாது.

விவாகரத்தும் செய்யமுடியாது. சேர்ந்து ஒன்றாக வாழவும் முடியாது. என்ற சூழலில் ஒரு வெக்கங்கெட்ட உறவில் இருதரப்பினரும் ஒரு மாதிரியாக ஒரு வெறும் அரசை ஓராண்டுக்கு இழுத்துவிட்டார்கள்.


-'அரசில் ஒட்டிக்கொண்டிருக்கும் சில சின்னக்கட்சிகளின் சின்னத்தனமான நடவடிக்கைகளுக்கு தான் பயப்படப்போவதில்லை. அவர்களே சமாதானத்தையும் ஏனைய தேசிய நலன் குறித்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதற்கு இடையூறாக இருக்கிறார்கள். அவர்கள் அரசைவிட்டு வெளியேறவிரும்பினால் வெளியேறலாம்...' என்ற தொனிப்பட சனாதிபதி சொன்ன பின்னரும் கூட முன்னாள் புரட்சிவாதிகளான ஜே.வி.பி கும்பலுக்கு ரோஷம் பிறக்கவில்லையென்றால் அவர்களின் பதவிக்கதிரை மீதான இறுக்கமான பிடிப்பு எத்தகையது என்பதை விளக்கவேண்டிய அவசியமேயில்லை.

சனாதிபதி கூட்டணி உடன்பாட்டை மீறுகிறார்... எங்களால்தான் அவரது ஆட்சி பாதுகாப்பாக இருக்கிறது என்பதை மறந்துவிட்டார். தொடர்ந்து இதேநிலை இருக்குமானால் ஐம்பது சதத்திற்கும் பெறுமதியில்லாத அவரை பரிதாபம் கருதி ஆதரிப்பதை நிறுத்திவிடுவோம் என மிரட்டி அவமதித்த போதும் சந்திரிகாவால் ஜே.வி.பியினரை நோக்கி 'கெற்அவுட்' என்று சொல்லமுடியவில்லை என்றால் அவரின் பதவி ஆசையை என்னவென்று சொல்வதாம்.

கணவரை கொன்றவர்கள் என்று குற்றம் சாட்டியவர்களையே ஆட்சிப் பங்காளிகளாக அங்கீகரித்து அதிகாரமளித்து கௌரவித்தவருக்கு- அதாவது சந்திரிகாவுக்கு ரோஷமாவது வெட்கமாவது... மானமாவது!?

அந்நிய இராணுவத்தினரை அழைத்து தங்களின் வழிகாட்டிகளை, அதாவது 1971இன் தோழர்களை (!?) கொன்றழித்தவரின் மகளை பழிவாங்க சந்தர்ப்பத்தை உருவாக்கி செயற்படுகிறார்கள் ஜே.வி.பியினர் என்றே எண்ணத் தோன்றுகின்றதல்லவா.

## இது என்ன சோதனை



ஆண்டிகள் கூடி மடம் கட்டத் திட்டமிட்டார்களாம்.

என்ன யோசிக்கிறீர்கள்?

ஜாதிக ஹெல உறுமய ஆண்டிகளைக் கூறுகிறேன். பேசாமல் மஞ்சள் அங்கிக்குள் ஒடுங்கியபடி திருவோடும், குடையும், விசிறியுமாக தம்மோபதேசம் செய்துகொண்டிருக்கிறதை விட்டுவிட்டு அரசியலுக்கு வந்து புத்தபகவானுக்கே அவமானத்தைத் தேடித்தந்து கொண்டிருக்கும் ஹெலஉறுமய அரசியல் கோமாளிப் பிக்குகள் இப்போது விடுதலைப்புலிகளின் விமானங்களை அழிக்கப்போகிறார்களாம்.

அதுவும் இந்தியாவின் உதவியுடன்...

சிறிலங்காவின் விமானப்படை பாகிஸ்தானிடமிருந்து நவீன போர் விமானங்களைப் பெற்றுக்கொண்டு வலுவடைந்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் நிலையில் ஹெல உறுமயவினரின் 'உறுமல்' சிறிலங்கா விமானப்படையைக் கிண்டல் செய்வதாக இல்லையா?

அது சரி விடுதலைப்புலிகளிடமுள்ள விமானங்கள் குறித்து அனைத்துத் தரப்பினரும் அமெரிக்கா உட்பட ஆராய்ச்சி செய்தபின் அந்த விமானங்கள் மிகச் சிறிய ரக ஆளின்றி இயங்கும் வேவுவிமான வகையைச் சேர்ந்தவை என்று முடிவுகட்டியபின் அதனால் கொழும்பின் அரைப்பகுதி அழியுமென அந்த கோமாளி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா கொடுக்கிழுத்துக் கட்டிக்கொண்டு மிரட்டியதையடுத்து ஹெல உறுமய அரசியல் பிக்குகளுக்கு குலைப்பன் எடுக்கத் தொடங்கிவிட்டது போலும்.

புலிகளிடம் இருக்கக் கூடும் எனக்கருதப்படும் இரண்டு இலகு ரக விமானங்களால் கொழும்பின் அரைப்பகுதியை அழித்துவிட முடியும் எனக்கூறும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரை வைத்துக்கொண்டு சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சரான சந்திரிகா என்ன செய்யப்போகிறாரோ?

அதைவிட புலிகளின் விமான ஓடுபாதையை அழிக்க இந்தியாவோடு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யுங்கள் என்று ஆலோசனை கூறும் ஹெலஉறுமய பிக்குகளை உறுப்பினர்களாக்கொண்ட நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு அவஸ்தைப்படும் சிறிலங்கா மக்கள்தான் பரிதாபத்திற்குரியவர்கள்.

அதுசரி சமாதானத்திற்கு முன் புலிகளிடம் விமான ஓடுபாதை மட்டுமே இருந்ததாம். அதற்குப் பின்தான் விமானங்களை அவர்கள் பகுதி பகுதியாகக் கொண்டுவந்து இணைத்தார்களாம். இது ரத்ன சிறியாரின் பிரச்சாரம்.

-எந்தச் சுவரில் போய்முட்டிக்கொள்வதாம்?

எல்லாரும் ஏறிக்களைத்த குதிரையில் சக்கடத்தார் ஏறி சறுக்கிவிழுந்தாராம்...!

-லலித் அத்துலத் முதலி

-ரஞ்சன்விஜயரத்னா

-அநுருத்த ரத்வத்த வரிசையில் ரத்னசிறியார் வந்துள்ளார். அவருக்கு ஆலோசகர்களாக ஹெலஉறுமய பிக்குக்கள்...!?

அட என்னடா சிறிலங்காவின் பாதுகாப்புக்கு வந்த சோதனை?

செங்குட்டுவன்

# ஆற்றுப்படுத்தலின் மனங்கள் வெல்லப்படவேண்டும்



மனித வாழ்விலே எத்தனை இழப்புகள், துன்பங்கள், கஷ்டங்கள், பின்னடைவுகள், இத்தனைக்கும் மத்தியில் வாழ்க்கைச் சக்கரத்தைச் செலுத்தும் அற்புதப்பிறவியான மனிதனின் வாழ்விலே முடியாது என்ற வார்த்தைக்கே இடமில்லை. "முயன்று பார் இமயமலை உன் காலடியில், சமுத்திரம் உன்கைகளில்" என்று கவிஞன் பாடியுள்ளான். இன்றைய காலகட்டத்தில் எம்முடைய வாழ்க்கையிலும் எத்தனையோ இழப்புகள் அதிலும் யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு மீள எழுகின்ற வேளையில் கடந்த வருடம் இறுதிப்பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தமான சுனாமியால் நாம் இழந்தவை ஏராளம். ஏராளம், கண்களின் முன்னே இரத்த பாசங்கள் அணுவணுவாக செத்து மடிந்த சோக வரலாற்றை எண்ணி மனம் குமுறி இயல்பு வாழ்வைத் தொலைத்துவிட்ட எம் உறவுகள் எத்தனை எத்தனை அதிலும் தாய் தந்தையைப் பறிகொடுத்துவிட்டு தனிமரங்களாக நிற்கின்ற பச்சிளம் பிஞ்சுகள் எத்தனை? எத்தனை? இவர்களைத் தேற்ற வேண்டியவர்கள் யார்? இவர்களை இப்படியே விட்டு விடலாமா? அதிலும் பள்ளி மாணவச்செல்வங்களைத்தேற்றி அவர்கள் வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்தவேண்டிய கட்டாய தேவை அனைவருக்கும் உண்டு.

இந்த வகையில் முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்களும் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரும் இணைந்து பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள், அரங்கச் செயற்பாடுகளூடாக வழங்கப்பட்டு வருகின்றன. காலை ஆராதனையின் பின் மாணவரை ஒன்று கூட்டிஅவர்களுடனான ஆடல், பாடல் விளையாட்டுக்கள், நாடக நிகழ்வுகள், ஊடாக மாணவர்களின் மனோநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி கற்பதற்கான சூழலை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கமாகும். இந்த வகையில் கடந்த வாரம் 01.03.2005 செவ்வாய்க்கிழமை கள்ளப்பாடு வித்தியாலயத்திலும் 02.03.2005 புதன்கிழமை முல்லைத்தீவு றோ.க. பாடசாலையிலும் 03.03.2005 வியாழன் முல்லைஇந்து வித்தியாலயத்திலும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் தரம் 6 தொடக்கம் 8வரையான மாணவர்களுடனும் இச் செயற்பாடுகள் எம்மால் முன்னெடுக்கப்பட்டள்ளன. இவ்வாறு மாணவர்களுடன் பழகிய சந்தர்ப்பங்களில் அவர்களின் நடத்தைக்கோலங்கள், மன உணர்வுகள், அவர்கள் சார்பாக அவர்களுக்குக் கல்விகற்பிக்கும் ஆசிரியர்கள் கூறியவை, மாணவர்கள் எமக்குக் கூறியவைகளை இக்கட்டுரை ஊடாக வெளிக்கொணர்வதே எமது நோக்கமாகும்.

முல்லைத்தீவு கரையோரக் கிராமங்களிலே அதிகமாகப் பாதிக்கப்பட்ட இடமாக கள்ளப்பாட்டுக் கிராமமே காணப்படுகின்றது. இப்போது கள்ளப்பாட்டுப்பாடசாலை உண்ணாப்பிலவு என்கின்ற இடத்தில் தற்காலிக கொட்டகையில் இயங்கி வருகின்றது. நாங்கள் செல்கின்ற போது பிள்ளைகள் யாவரும் மரத்து நிழல்களில் யுனிசெப் நிறுவனத்தின் கதிரைகளில் வானமே கூரையாகக்கொண்டு புழுதிதோய்ந்த கால்களுடன் கற்றற்செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். "இன்னும் கொஞ்ச நேரத்தில் வெயில் வந்திடும் எங்களால் படிக்க ஏலாது. சரியான களைப்பாக்கிடக்கு பஸ்சில போறதே சரியான கஷ்டமாக்கிடக்கு" என்றார் ஒரு மாணவர். நாங்கள் அவர்களை ஒன்றாக்கி பாட்டுப்பாடினோம். அதிலே ஒருசில பிள்ளைகள் தனியே விலகி நின்றனர். அவர்களுடன் எம்மவர்கள் சிலர் அரவணைப்பாகக் கதைத்த போதுதான் அவர்களின் அம்மா, அப்பா, சகோதரர்கள், கடல் அலைகளால் கொல்லப்பட்டதை உணரக் கூடியதாக இருந்தது. பின்னர் அவர்களைத் தேற்றி நாங்களும் அவர்களின் கைகளைப்பிடித்துக்கொண்டு ஆடல்பாடல்களில் ஈடுபட்டபோது அவர்கள் தங்களின் பழைய நிலையை மறந்து மற்றையவர்களிலும் பார்க்க தங்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்தனர். இடையிடையே எம்மீது ஏறினார்கள். எம்மைக்கட்டித்தழுவினார்கள். எமது கரங்களை இறுகப்பற்றிப்பிடித்தனர். இவர்களைப்பற்றி ஆசிரியர்கள் கூறும்போது "இண்டைக்குத்தான் இவயள் உற்சாகமாக சிரிச்சு விளையாடியதப் பார்த்தனாங்கள். இந்தப் பிள்ளையட்டையும் இப்படித் திறமையள் இருக்கெண்டு இப்பதான் தெரியுது. வகுப்பில பின்னுக்குத்தான் இருப்பினம், கனக்கதைக்கமாட்டினம். இண்டைக்கு நீங்கதான் கதைக்க வைச்சிருக்கிறியள்'' என்று குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு றோ.க.பாடசாலைக்குச் சென்றோம். முதலில் பாட்டுப்பாடி அவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டபின் விளையாட்டில் ஈடுபட்டோம். "எங்களுடன் எங்களின் ரீச்சர்மாரும் விளையாடவேணும்'' எண்டனர். "அப்பிடியே ரீச்சர்மார நீங்கதான் கூப்பிடவேணும், கூப்பிடுங்கோ" எண்டம். எல்லாரும் ரீச்சர் வாங்கோ ரீச்சர் வாங்கோ" எண்டு கத்திக்கத்தி ரீச்சர்மார தங்களோட விளையாட எடுத்திட்டினம். இது அவையளுக்கு புது உற்சாகத்தைக்கொடுத்தமாதிரி இருந்தது. ஒரு பிள்ள தன்ர தாய் தகப்பன் எல்லாரையும் இழந்திட்டு நின்றவன். சரியான குழப்படியா இருந்தான். "இப்பதான் இவன் இப்பிடி இருக்கிறான் எண்டு ரீச்சர் சொன்னார். எங்களில் ஒருவர் அவருடன் கதைத்தபோது "ஓ நான் குழப்படி செய்வன், ஆருக்கெண்டாலும் அடிக்க வேணும் போல கிடக்கு'' எண்டு சொல்லிக்கொண்டு கண்ணில்பட்ட தடிதண்டுகளையெல்லாம் முறிச்சு எறிஞ்சான். அவனோட கணநேரம் மினக்கட்டு அவர எங்கட வழிக்குக்கொண்டு வந்தம். பிறகு எல்லா விளையாட்டுக்களிலும் முன்னுக்குநிண்டு செயற்பட்டதைக்காணக்கூடியதாய் இருந்தது.

''இடைவேளைக்கு சிறுநீர் கழிக்கச்சென்ற மாணவிகள் தங்களுடன் படித்த ஒரு பிள்ளையின்ர புத்தகப்பையைக்கண்டு போட்டு அதுக்குப்பக்கத்தில 40 பேரின்ர உடல்களை எரிச்சதால செத்த பிள்ள வெள்ள உடுப்போட வந்து தங்களக் கைகளைக்காட்டி வருமாறு கூப்பிட்டதாகவும், எல்லாரும் பேய் பேய் எண்டு கத்திக்கொண்டு ஓடிவந்ததாகவும் ஒரு பிள்ள நெத்தியில சிலுவை அடையாளம்போட அந்தப் பிள்ள அப்பிடியே மறைஞ்சு போட்டுதாம் மாணவர் கூறியதாக கடந்த 02-03-2005 புதன்கிழமை றோ.க பாடசாலை ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். பிள்ளையள் சரியான பயத்தோடதான் இருக்கினம். முந்திய விட இப்பசரியான குழப்படி எங்களாலையும் கண்டிக்க ஏலாமக் கிடக்கு. காலமையள்ள பிரார்தனையிலையும் இவையள் சரியான கதையும் குளப்படியுமாக்கிடக்கு எண்டு ஒரு ஆசிரியை குறிப்பிட்டார். கட்டுப்பாட்டுப் பயிற்சிகளைக்கூடச் செய்தால் நல்லது'' என்றார் ஒரு அசிரியர். "நீங்க இப்பிடிப்பாடியாடுறதெல்லாம் பாடத்தின்ர சிலபஸ்சோட போகுதே" எண்டு ஒரு அசிரியர் தன்னுடைய மனக்குமுறலை மற்ற ஆசிரியருடன் பகிர்ந்துகொண்டதையும் எம்மால் அறிய முடிஞ்சுது. ''கடவுள் வந்திட்டார் அவரிடம் நீங்க என்ன கெப்பியள் எண்டு கேட்டம்" அதுக்கு பிள்ளையள் 1.சுனாமி இனிமேல் வரக்கூடாது, 2.கடல் அலை கரைக்குமேல வரக்கூடாது, 3.கடற்கரையில அணைபோட வேணும், 4.மரம் இருக்கவேணும், மாடிக்கட்டடம் கட்டித்தரவேணும் 6.எங்கட அம்மா அப்பா எங்களவிட்டுப் பிரியக் கூடாது, 7.செத்த ஆக்களெல்லாம் உயிர்தெழவேணும், 8.நல்லபடிப்புத்தர வேணும் இப்படியே அடுக்கிக்கொண்டு போச்சினம்.




முல்லைத்தீவு மகாவித்தியாலயம் மற்றும் இந்து வித்தியாலயம் ஆகிய பிள்ளைகளுடன் கடந்த 03.03.2005 அன்று செயற்பட்டபோது தியானப்பயிற்சியின் போது கண்களை மூடி உங்களில் அன்பானவரை கண்முன் நிறுத்தி நினையுங்கள்'' என்ற போது பல பிள்ளைகள் வாய்விட்டுக்கதறி அழுதார்கள். தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்கள். ஒரு பிள்ளை தன்னுடைய தோழி தன்னை விட்டுப் போய்விட்டார் என்று வாய்விட்டுக்கதறி அழுதார். நீங்கள் எப்பிடித் தப்பி வந்தீர்கள், அந்த அனுபவங்களைப்பகிர்ந்துகொள்ளுங்கள் என்றதும் பல பிள்ளைகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அந்தவேளை அங்கு வந்த லண்டன் பி.பி.சி.வானொலியைச் சேர்ந்தவர்கள் அவர்களின் கதைகளை ஒலிப்பதிவு செய்து கொண்டு சென்றுள்ளார்கள்.

"சுனாமியைப் பற்றி யாரும் கதைக்கக்கூடாதென்று கடும் கட்டளையை ஆசிரியர்கள் பிறப்பித்துள்ளார்கள்'' என்று ஒரு மாணவன் குறிப்பிட்டான். உள்ளக் கிடக்கைகளை வெளியே கொட்டினால்தானே மனம் நிம்மதியடையும், கவலையை அழுதால்தானே தீர்க்கலாம். ஆத்திரத்தை எதையாவது உடைத்தால் தானே வெளிப்படுத்த முடியும். சந்தோசத்தை சிரிப்பதன் ஊடாகவே தானெ வெளிப்படுத்த முடியும். இவையெல்லாம் உளவியல் நிபுணர்களின் கருத்தாக உள்ளன. இவ்வேளை எப்படி எம்முடைய பிள்ளைகளை எம்மால் அடக்கி வைக்க முடியும், மொத்தத்தில் ஆற்றுப்படுத்துகைக்குச் செல்வோர், வார்த்தைகளைவிட்டுத் தங்கள் உடலை, உள்ளத்தை பிள்ளைகளிடம் கொடுக்கவேண்டும். பிள்ளைகளின் மனங்கள் வெல்லப்பட வேண்டும். தொடுகை உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அவர்களில் நாமும் ஒருவராக மாறவேண்டும். அவர்களிடமிருந்து பிரிகின்ற போது அவர்கள் படும் பாடுகளே எம்மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை உணர்வை எம்மால் அறிய முடிகின்றது. மொத்தத்தில் அவர்களின் மனங்கள் தேற்றமடைய நிறையவே செய்ய வேண்டியுள்ளது அடுத்த சந்திப்புக்களுடன் புதிய விடயங்களுடன் சந்திப்போம்.

**றோமியல்**
ஆசிரியர்,மு/விசுவமடும.வி.

---



## நெஞ்சு... பொறுக்குதில்லை...!

யாழ்ப்பாணம்-காரைநகர் 785 ஆம் இலக்க வீதியில் அராலிக்கு முன்பதாக அந்தப் பெரியபாலம் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் பாயும் ஒரேயொரு ஆறாகிய வழுக்கியாறு இப்பாலத்தினூடாக இறுதியாக ஓடி சிறுகடலுடன் சங்கமிக்கின்றது.

அந்தப் பாலத்தடியில் பல சிறுவர்கள் குவிந்து நிற்கின்றனர். சில மீனவர்கள் அந்தப்பாலத்தடியில் நின்று வலைவீசி மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

பாலத்தினைமையமாக வைத்து பாலத்தின் கரையோடு அண்டியதாக வீதிக்கு மிகவும் சமீபமாக இராணுவக் காவலரண் ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. அதில் நிற்கும் இராணுவத்தினர் அப்பாலத்தடிக்கு வரும் சிறுவர்கள், மீனவர்கள் மற்றும் வீதியால் செல்லும் பொதுமக்களை மறித்து அரைகுறைச் சிங்களத்தில் ஏதாவது விசாரித்துக்கொண்டிருப்பார்கள். அன்று மாலை 5.00மணி இருக்கும் இராணு வக்காவலரணில் இருந்து முந்நூறு மீற்றர் தூரத்தில் ஆறு இளைஞர்கள் கூட்டமாக நின்றனர். அதில் ஒருவர் வீதியின் நடுவில் வீழ்ந்துகிடந்தார். துவிச்சக்கரவண்டி ஒன்றும் வீழ்ந்துகிடந்தது.

ஏதோ விபத்து நடந்துவிட்டது என்ற பதைபதைப்புடன் அவ்வீதியால் வந்த வேறு நான்கு இளைஞர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை வேகமாக ஓட்டிக்கொண்டு அவர்களுக்கு அருகில் வந்தனர்.

அவர்கள் ஆறு பேரும் நிறை தண்ணியில் (மதுபோதையில்) இருந்தனர்.மது மயக்கம் தலைக்கேறியதால் அவர்கள் செய்வது, பேசுவது எதுவுமே அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

அவர்களில் ஒருவன் வீதியின் குறுக்காக நீட்டி நிமிந்து படுத்திருந்தான். தனது வாயில் வந்த கெட்ட வார்த்தைகளால் ஏதேதோ ஏசிக் கொண்டிருந்தான்.இப்போது அவ் வீதியால் வந்துகொண்டிருந்த அந்த நான்கு இளைஞர்களுக்கும் விசயம் விளங்கி விட்டது. விபத்து நடந்து விட்டதாக நினைத்து உதவி செய்ய வந்தவர்கள் இவர்களின் நிலையினை பார்த்துவிட்டு அதில் தரித்து நிற்காது தமது பயணத்தினை தொடர்ந்தனர்.

அந்த நான்கு இளைஞர்களில் ஒருவர்சொன்னார். "இவர்கள் வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்தவர்கள். மறைமுகமாக இப்பகுதிக்கு வந்து பெற்றோருக்குத் தெரியாமல் மது அருந்திவிட்டு கைகால் புரியாமல் நிற்கிறார்கள். இவர்கள் எப்படியும் வீட்டுக்குப் போகும்போது மது மயக்கம் முறிந்துவிடும்" என்றார். அதற்கு மற்ற இளைஞன் சொன்னார். "முன்மாதிரியாக இருக்கவேண்டிய இவர்களே இவ்வாறுமுறைகெட்டு நடந்தால் நாட்டில் எப்படி நல்லவைகள் நடக்கும். களவும், கொலையும் கற்பழிப்பும் தான் மிஞ்சும்'' என்றார்.

— சிவியா —

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 18 . 03 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# எப்போது பதில்...?

"ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டமைப்புத் தொடர்பாகப் பிரேரிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு, அந்த அனர்த்தத்திலிருந்து வடக்கு கிழக்கை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையை தங்குதடையின்றித் தொடர்வதற்கான தேவைப்பாடுகளை நிறைவுசெய்யவில்லை. ஆனாலும் சூழ்நிலை ஏற்படுத்தியுள்ள அவசரதேவைகருதி அதிக நெகிழ்வு போக்கோடு:உச்சவிட்டுக்கொடுப்புக்களைச் செய்து:அந்த பொதுக் கட்டமைப்பு ஏற்பாடுகளை ஏற்பதற்கு புலிகள் இணக்கம் தெரிவிததிருக்கிறார்கள்.,,

இவ்வாறு ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கும் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச செல்வன் தலைமையிலான குழுவினர் சுவீடனின் கூட்டுறவு அபிவிருத்திக்கான அமைச்சர் கரின் ஜம்ரின் அம்மையாரிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

புலிகள்இயக்கம் வினைத்திறன் மிக்க முன்னெடுப்பை மேற்கொள்ள இந்த கட்டமைப்பு போதவில்லை என்கிற போதும் மக்களின் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு இந்தக் கட்டமைப்புக்கான ஒப்புதலை தெரிவிக்கிறது.

ஆனால் அரசுஇன்னமும் தன்னுடைய கருத்தை தெரிவிக்காமல் முரண்பட்ட வகையில் கருத்துக்களைத் தெரிவித்துவருகிறது.

பொதுக்கட்டமைப்பு தொடர்பான பேச்சுக்கள் தொர்டங்கிய சூழ் நிலையிலிருந்து இன்று வரை புலிகள் இயக்கம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிப்பதுமுதல் தன்னுடைய நிலைப்பாடுகள் வரை மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து வருகிறது.

இதன் காரணம் பொதுக்கட்டமைப்பு என்பது மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதற்கான உதவிகளே வந்து சேராத நிலையில் ஆழிப்பேரலை அனர்த்தம் மேலும் அவர்களுக்கான உதவியை அதிகரித்து அவர்களை அவலத்துக்குள்ளாக்கிய சூழ்நிலையில் தோன்றியதொரு விடயமாகும்.

ஆனால் சுனாமி பேரனர்த்தம் நடைபெற்ற 2004 டிசெம்பர் இறுதிப்பகுதியிலிருந்து 2005மார்ச் இறுதிப்பகுதியை நெருங்கிக்கொண்டிருக்கும் இன்றைய காலப்பகுதிவரை அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி தொடர்பாக எந்த நிலைப்பாட்டுக்கும் வருவதாக இல்லை.

அரசு இறுதியாக நோர்வே சமர்ப்பித்திருக்கும் திட்டத்திற்குக்கூட இணங்கி வரலாம் என்றும் வரும் என்றும் ஊகங்கள் நிலவுகிறதே தவிர அரசு இன்னமும் ஒரு நிலைப்பாட்டிற்கு வந்ததாகஇல்லை.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்களோ தமக்கான வாழும் உரிமை கொண்டவர்களாக மட்டும் வாழ்ந்துகொண்டு ஏக்கப் பெருமூச்சுக்களை விட்டபடி இருக்கிறார்கள்.

இந்த நிலையில் அரசு மேலும் மேலும் காலதாமதத்தை ஏற்படுத்துகிறதே தவிர பாதிக்கப்பட்ட மக்களின் நலன் சார்ந்து சிந்திப்பதாக இல்லை.

இந்த நிலையிலும் விட்டுக்கொடுப்புக்களையும் சகிப்புத் தன்மையையும் புலிகள் இயக்கம் செய்துகொண்டிருக்க அரசு இன்னமும் தனது உடும்புப்பிடியிலிருந்து விலகுவதாக இல்லை.

அரசு செய்யவேண்டியதை செய்யாமலிருப்பதும் அரசு செய்யமுதலே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அரசின் பங்காளிகளின் செயற்பாடுகளையும் ஒருமித்து நோக்கும்போது சிங்கள தேசத்தின் நிலைப்பாடானது ஒரே விதமானதும் ஒன்றையே வலியுயுறுத்துவதாகவுமே இருக்கிறது.

அதாவது தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்க சிங்களதேசத்தின் எந்த தரப்பும் தயாரில்லை என்பதாகவே அதிருக்கிறது.

இந்த நிலையில் அரசு இந்த கட்டமைப்புக்கு இணங்கினால் அரசை கவிழ்ப்போம் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க எச்சரிக்கை செய்துள்ளார்.

அத்தோடு அதிகார பகிர்வு என்பது நாட்டை இரண்டாக்கும் செயல் என்றும் புலிகளுக்கு எந்த உதவியும் நேரடியாக வழங்கக்கூடாது என்றும் ஜே.வி.பி எச்சரிக்கை செய்துவரும் நிலையில் நோர்வே அரசு பொதுக்கட்டமைப்புத் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை கோரியிருக்கிறது.

ஆனால் அரசு நோர்வேக்கு எப்போது பதிலளிக்கப்போகிறது...?

# வெலிக்கந்தையின் அமைதியைக்குலைக்கும் படையினர்


கடந்த சில மாதங்களுக்கு முன்பிருந்தே பெரும்பாலும் அனைத்து ஊடகங்களிலும் பேசப்படுகின்ற ஓர் இடம்தான் வெலிக்கந்த எனும் இடம். பொலநறுவை மாவட்டத்தில் உள்ள இந்தக் கிராமம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களோடு அண்டியதாகக்காணப்படுகிறது.

இப்பிரதேசத்தில் அண்மைக் காலமாக இளைஞர்கள் கடத்தப்பட்டு சுட்டுக்கொலைசெய்யப்பட்டு வருகின்றனர். இதனை எதிர்த்து வெலிக்கந்தை மக்கள் வீதிமறியல் போராட்டங்களை நடத்தியமை தெரிந்த விடயமாகும்.

இது தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கூறிய கருத்து மிக முக்கியமானவை. அதாவது "தமது பகுதியில் உள்ள தீவுச்சேனையில் முகாமிட்டுள்ள ஆயுத குழு ஒன்றே இதற்குக் காரணம் என்றும் இது தங்கள் பிரதேசத்தில் உள்ள இராணுவம், பொலிஸ் மற்றும் ஆளும் கட்சி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு அறிவித்திருந்தும் அவர்கள் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அசட்டையீனமாக இருக்கிறார்கள் என வேதனையுடன் கூறுகின்றனர் அப்பிரதேச வாசிகள்."

இங்கு நாம் ஒன்றை முக்கியமாக கவனிக்கவேண்டும். என்னவெனில் மூவின மக்களும் வாழ்கின்ற அப்பிரதேசத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறான ஆயுதக்குழுக்களின் நடமாட்டமே அல்லது இவ்வாறான படுகொலைகளோ இடம்பெறவில்லை. பூரண இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசமான இங்கு அண்மைக்காலமாக பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

ஆயுதக் குழுக்களின் நடமாட்டத்தை அறிந்தும், அவர்கள் இருக்கின்ற இடங்களை தெரிந்தும் மக்களின் காவலர்கள் எனக் கூறிக்கொள்கின்ற பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் ஏன் கண்டும் காணாதவர்கள் போன்று உள்ளனர். அப்படியாயின் இவர்களுக்கும் அங்கு இருக்கின்ற ஆயுதக் குழுவினருக்கும் என்ன தொடர்புகள் இருக்கின்றன. அவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த ஏன் இது வரைக்கும் இவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆயுதக்குழுக்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு ஏன் இவர்கள் பின் நிற்கின்றனர். தமிழ், சிங்களம், முஸ்லிம் இன மக்கள் இன்று வழமை நிலை இழந்து பெரும் பயப் பீதியுடன் நாளாந்தம் காணப்படுவதனை சட்டத்தின் காவலர்கள், கண்டும் மௌனிகளாக இருப்பதன் மர்மம்தான் என்ன?




இதுதான் இன்று அனைவராலும் எழுப்பப்படுகின்ற கேள்விகளாக இருக்கின்றது. அனைத்து வளங்களுடன் பெரும் படையணியை தன்னகத்தே கொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் இந்த சிறிய ஆயுதக் குழுவினரை அடக்க அக்கறை காட்டாததன் காரணம்தான் என்ன?

ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களை களைந்து தமது வழமையான வாழ்வுக்கு வழி சமையுங்கள். அல்லது எங்களிடமும் ஆயுதங்களை தாருங்கள். நாம் எம்மை பாதுகாத்துக்கொள்கின்றோம் என்று கூறுகின்ற மக்களின் கோரிக்கைகளுக்கு இவர்கள் எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்போகிறார்கள். நாளாந்தம் இடம்பெறுகின்ற படுகொலைகளை இவர்கள் தொடர்ந்தும் அனுமதிக்கப்போகின்றார்களா? என்பதுதான் தெரியாத விடையாக உள்ளது.

ஆயுதக் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எதுவும் எடுக்காததனை நோக்கும்போது சிறிலங்கா இராணுவம்தான் அவ்வாயுதக் குழுக்களை தீனிபோட்டு வளர்ப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. தங்களது ஒரு சிலசுயலாபம் கருதியே இராணுவம் இவ்வாறு ஆயுதக் குழுக்களை அனுமதித்திருக்கலாம். அத்தோடு கௌசல்யன் படுகொலை சம்பவம் கூட இவ்வாறான ஆயுதக் குழுக்களை சிறிலங்கா இராணுவ மற்றும் புலனாய்வுத்துறையினர் ஆசீர்வாதத்தோடு நடத்தியமை அச்சம்பவத்தினை தெளிவாகப் பார்க்கும் அனைவருக்கும்புலப்படும். சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினால் தங்களின் நடவடிக்கைகளுக்காக இவ்வாறான ஆயுதக்குழுக்களை ஆதரித்து அரவணைத்து வருகின் றனர் என்பது இவர்களின் நடவடிக் கைகள் மூலம் விளங்கிக் கொள்ள லாம்.

இவர்களுக்கு எதிராக நடவடிக் கைகள் எடுக்காதவிடத்து விளைவுகள் மிகப்பாரதூரமாக அமைந்து விடுவது மட்டும் உண்மையே. சமாதானக் காலப்பகுதிகளில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இவ்வாறு பல் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கண்டதுக்கும்சிறப்புப்படை அமைத்து நடவடிக்கைகள் எடுகின்ற சிறிலங்கா அரசு ஏன் வலிக்கந்த மக்கள் விடயத்தில் மட்டும் அமைதியாக இருக்கின்றது?

ஆயுதக்குழுக்களை பொறுத் தவரை வேலி போன்று இருக்கின்ற சிறிலங்கா இராணுவம் மற்றும் பொலிசார் எவ்வாறு பயிரை மேய்வார்கள்? மக்களின் நிலைமைகள் எவ்வாறு இருந்தாலும் சரிதங்களது ஒருசில சுயநலத்திற்காக இவ்வாறான பல குழுக்களை நாம் அரவணைக்கத் தயாராகவேஉள்ளோம் என்பதனையே வெலிகந்தை தொடர்பாக சிறிலங்கா அரசின் செயற்பாடு காணப்படுவதனை தெளிவாகக் காட்டிநிற்கின்றது.

**மு.தமிழ்ச்செல்வன்**




ஆரையம்பதியில் நிவாரணப்பொருட்கள் புதைக்கப்பட்டிருந்தன. -செய்தி
*புதைக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம்*

திருகோணமலையில் பிக்கு உண்ணாவிரதம்.
நிவாரணத்தை நேரடியாக மக்களிடம் வழங்குக.
*''ஞானம் வெளிச்சிருக்கு''*

சுனாமியால் வீடு இழந்தோருக்கு தனியாரிடமிருந்து காணிகள் பெற்று வழங்கப்படும்.- செய்தி
*"தனியாரிடமா? தமிழர்களிடமா?"*

கிழக்கில் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்கள் பற்றிய சாட்சியங்கள் பதியப்படும்.- சந்திரிகா
*"ஆற்ற தரப்பு சாட்சிகளாம்"*

பாகிஸ்தானுக்கு திருத்த வேலைக்கு அனுப்பிய கப்பல்கள் திரும்பி வந்தன-
*''திருத்த வேலையெண்டா சிங்களத்தில புதுசாச்செய்யிறது"*

சாவகச்சேரியிலும் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்- செய்தி
*"இலகு பேதி மாத்திரை"*

வவுனியா மாவட்ட இராணுவ நிலைகள் புனரமைக்கப்படுகின்றன.
*இராணுவநிலைகள் எண்டா தமிழற்ற நிலம் அல்லோ.*

ஜே.வி.பியினர் இல்லாமலே சமாதானத்தைக்கொண்டு வருவேன்.
*"ஆனா அரசாங்கத்தைக்கொண்டு வரேல்லை"*

சானதிபதியின் பேச்சுகளுக்கு பதிலளிக்கவேண்டிய அவசியம் எமக்கில்லை-ஜே.வி.பி
*'எங்களுக்குமில்லை'*

**சசி.சங்கரன்**

# சிறுவர்களை படைக்கு சேர்த்தல் தொடர்பான இரட்டை நியமங்கள்

புலிகள் சிறுவர்களை ஆட்சேர்ப்பதற்கு எதிரான சிறிலங்கா அரசின் இடையறாத பிரச்சாரம் தனியொரு இராசதந்திர சாதனையாக அவ்வரசால் பார்க்கப்படுகிறது.

கடந்த 23ஆம் திகதி ஐ.நா. பாதுகாப்புச் சபை குழந்தை போர் வீரர்கள் தொடர்பாக ஆராய்ந்தபோது ஒலாரா ஒட்டுணு சமர்ப்பித்த அறிக்கையில் குழந்தை போர் வீரர்களை சேர்ப்போர்மீது அதனை நிறுத்தும் விதத்திலான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று பரிந்துரைத்திருந்தார். இதில் குற்றமிழைத்த தரப்பாக த.வி.புலிகளும் குறிப்பிடப்பட்டிருந்தனர். அதற்கு உள்ளூர் தடைகளில் மிகுந்த பிரச்சாரம் தரப்பட்டது.

ஆனால் ஐ.நாவின் 15 உறுப்பினர் கொண்ட பாதுகாப்பு கவுண்சிலின் தீர்மானத்தில் அத்தீர்மானம் குழந்தை போர்வீரர்களை சேர்ப்பதைத் தடுத்து அவர்களை சமூகத்தினுள் ஒன்றிணைத்து புனர்வாழ்வு அழிப்பதை இலக்காகக் கொண்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அன்று காலையில் ஒலாரா ஒட்டுணு கேட்டுக்கொண்டதுபோல், குழந்தை போர்வீரர்களை சேர்ப்போர் மீது தடைகள் அல்லது இலக்கு வைக்கப்பட்ட நடவடிக்கை (TARGETED MEASURES) மேற்கொள்வது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. இங்கே இரண்டு கேள்விகள் எழுகின்றன.

1.இந்த நிகழ்வுருவாக்கங்களுக்கு எதிரான புலிகளின் முறியடிப்பு மூலோபாயம் என்னவாக இருக்கும்.

2. ஒலாரா ஒட்டுணுவின் அறிக்கையின் மிக முக்கியமான அம்சத்தை ஏன் பாதுகாப்புச்சபை அலட்சியப்படுத்திவிட்டது ஏன்?

பாதுகாப்பு கவுண்சில் தீர்மானங்கள் என்பது வெற்று வேட்டுகள் தான் என்று புரிந்துகொண்டு அதனை அலட்சியப்படுத்தும் விருப்பத்தெரிவு புலிகளுக்கு இருக்கிறது. ஆனால் அந்த அமைப்பு ஐ.நா வுடனான தொடர்பாடலை பேணி தாங்கள் (தங்கள் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் ஆட்சியை நடத்தும்) பொறுப்புள்ள அமைப்பு என்பதையும், தங்கள் நாட்டை உருவாக்கும் வேளையிலேயே சர்வதேசச் சட்டங்களை மதித்து நடக்கும் ஆர்வம் கொண்டவர்கள் என்பதையும் ஐ.நாவின் கருத்தில் பதியவைக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

தமிழ்ச்செல்வன் அவர்கள் ஒலாரா ஒட்டுணுவுக்கும் கொபி அனானுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தில் அவர்களது இராசதந்திர முதிர்ச்சியை காணலாம்.

"... ஒரு விடுதலை இயக்கம் என்ற முறையில் போரினால் பாதிக்கப்பட்ட எமது எதிர்கால தலைமுறையினரின் நல்வாழ்க்கை பெறுவதற்கு உதவக்கூடிய கண்காணிப்பு-அறிக்கையிடுதல்-அமைவாக நடத்தல் என்பவற்றில் நாம் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளோம். அதே வேளை இந்தப் பிள்ளைகள் குறித்த தகவல்கள் குறியிலக்குக் கொண்டவையாக இருப்பதோடு அரசியல் உள்நோக்கங்களை எட்ட அவை பயன்படுத்தப்படக்கூடாது என்பதிலும் நாங்கள் முனைப்பாக இருக்கிறோம்."

"சிறுவர்களைப் பாதுகாக்கும் பொறிமுறை என்ற வகையில் இத்திட்டம் வெற்றிபெற வேண்டுமாயின் அது முரண்கருத்துக்களையும் அரசியல் உள்நோக்கம் கொண்ட தரப்புகள் அல்லது தகவல் முதலீடுகள் தரும் சரிபார்க்க முடியாத தகவல்கள் (UNVERIFIABLE IN FORMATION) மீது தங்கியிருப்பதாக இருக்கக் கூடாது. உதாரணமாக புலிகளுக்கு எதிரான பல அறிக்கைகள் இருந்தாலும் குறித்த ஒரு பிள்ளையின் வயதை சரிபார்க்கும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை."

இக்கடிதத்துக்கு என்ன பிரதிபலன் கிடைத்தது என்று தெரியாவிட்டாலும் ஐ.நாவுடன் தொடர்பை பேண புலிகள் இதனை பயன்படுத்திக்கொண்டுள்ளார்கள் என்று தெரிகிறது.

அடுத்ததாக சிறுவர்களை படைக்குச் சேர்க்கும் நாடுகள் ஆயுதக் குழுக்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதிலிருந்து ஐ.நாவை எது தடுக்கிறது.

ஒலாராவின் அறிக்கை பற்றி அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்த கருத்து இங்கு நோக்கத்தக்கதாகும். அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நடவடிக்கைகளின் நடைமுறைச் சாத்தியத்தன்மை பற்றி அவர் ஐயம் எழுப்பியிருந்தார்.

அமெரிக்காவின் இந்தக் கருத்துக்கு உள்ளூர் ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இதில் அப்பட்டமான உண்மையாக ஐ.நா வின் முக்கிய உறுப்பினர்களான அமெரிக்காவும், பிரித்தானியாவும் சிறுவர்களை படைக்குச் சேர்க்கும் விடயத்தில் பாரதூரமான குற்றவாளிகளாக இருப்பது இருக்கிறது அவர்கள் மட்டுமல்லாது மூன்றாம் உலக நாடுகளில் இருக்கும்.

யூனிற்ரா (அங்கோலா), வட கூட்டணி (ஆப்கான்) இதே குற்றத்தை ஏதோ ஒரு சமயத்தில் செய்திருக்கிறார்கள்.

இதற்கு வலுவான ஆவணச் சான்றுகளும் இருக்கின்றன.

வளைகுடா, சோமாலியா, பொஸ்னியா ஆகிய இடங்களில் 17 வயது அமெரிக்க படைவீரர்கள் சேவையாற்றியதை அமெரிக்கா ஒப்புக்கொண்டிருக்கிறது.

ஐரோப்பாவிலான பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான அமைப்பு (OSCE) இன் அரைவாசிக்கு மேற்பட்ட நாடுகள் 17வயதிற்கு குறைந்தவர்களை தமது இராணுவங்களில் சேர அனுமதிக்கின்றன.

2003ஆம் ஆண்டில் பிரித்தானிய இராணுவத்தில் 9,515 வளரிளம் பருவத்தினர் (ரீன்ஏஜ்) சேர்ந்தனர். இவர்களில் 3225 பேர் அல்லது 21%தினரின் வயது வெறும் பதினாறு தான். ஏனையோர் 17-19க்கும் இடைப்பட்ட வயதினராகும்.

இராணுவச் சந்தைப்படுத்தல் இணைப்பாளரான டெறெக்பாத்கேற், தமது ஆட்சேர்ப்புக்கான விளம்பரங்கள் 16-25இற்கு உட்பட்ட வயதினரை இலக்கு வைத்தவையாகும் என்று நியூஸ்ரேற்ஸ்மென் இதழுக்கு கூறியிருக்கிறார்.

பிரித்தானிய இராணுவம் 13 வயதினரை இலக்குவைத்து "மை கமா பிளாஜ்" (MY CAMOU FLAGE) என்ற இணையத் தளத்தை நடத்துகிறது. இதில் இராணுவ ஆர்வம் கொண்ட சிறுவர்கள் விண்வெளிக் கப்பல்களை சுடுதல் அல்லது படைய கருப்பொருட்களை கொண்ட புதிர்ப்போட்களில் கலந்துகொள்ளலாம். வயதில் குறைந்தவர்கள் பயிற்சிகளை நன்கு உள்வாங்கிக் கொள்வதோடு நீண்டகாலமும் சேவையாற்றுபவர்களாக இருக்கிறார்கள்" என்று பிரித்தானிய இராணுவ ஆட்சேர்ப்புக்குப் பொறுப்பான கேணல் அலிஸ்ரர்லூடன் "நியூரேற்ஸ்மென்" இதழுக்கு கூறியிருக்கிறார். ஆட்சேர்ப்பு தொடர்பான நாடாளுமன்ற ஆய்வறிக்கையும் இதையே அங்கீகரித்திருக்கிறது.

எட்டு வயதேயான இளம் குற்றவாளிகளும் பிரித்தானியாவில் ஆட்சேர்ப்புக்கென இலக்கு வைக்கப்படுகிறார்கள். சனவரி 2005 இல் இருந்து தெரிவுசெய்யப்பட்ட இராணுவ மையங்களில் முகாமிடுதல், இராணுவ நெருக்கடித் தாக்குதல் பயிற்சிகள் விளையாட்டுக்கள் முதலியவற்றில் பங்குகொள்ளும் வாய்ப்பு அளிக்கப்படுகிறார்கள்.

இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் 17 வயதில் இராணுவத்தில் சேர்த்துக் கொள்கின்றன.

2000 ஆம் ஆண்டில் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான விருப்பத்திற்குரிய விதிகள் (OPTIONAL PROTOCOLS) ஆக்கப்பட்டபோது இராணுவ ரீதியான தேவைகள் ஏற்படுமிடங்களில் சிறுவர்களை ஈடுபடுத்தும் உரிமையை தான் வைத்துக்கொள்ளப் போவதாக பிரித்தானிய அரசு அறி வித்தது. 18 வயதுக்கு குறைந்தவர்களை மோதலில் ஈடுபடுத்துவதில்லை என்ற உறுதிப்பாட்டை தர அமெரிக்காவும் பிரித்தானியாவும் மறுத்துவிட்டன. இவர்கள்தான் சிறுவர்களை படையில் சேர்ப்பதை தடைசெய்வது பற்றி கூக்குரலிடுபவர்கள் என்று குவேக்கர் ஐ.நா அலுவலகத்தின் ராச்சேல்ப் நெற் கூறுகிறார்.

சர்வதேச ரீதியாக புலிகளை தனிமைப்படுத்த சிறுவர்களை ஆட்சேர்ப்பதை அடிப்படையாகக் கொண்டு சிறிலங்கா அரசும் வெளிவிவகார அமைச்சும் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிகரமானவை எனக் கூறவேண்டுமாயின் அம்முயற்சிகள் புலிகள் மீது நடைமுறைச் சாத்தியமான தண்டனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்பவையாக இருக்கவேண்டும்.

இதுதொடர்பில் ஆகப் பெரிய குற்றவாளிகள் ஐ.நா.பாதுகாப்பு கவுண்சிலில் உறுப்பினராக இருக்கும் பொழுது எவர், என்ன செய்யமுடியும்?

புலிகளை மாட்டிவிடுவதில் சிறிலங்கா அரசும் கதிர்காமரும் காட்டும் உற்சாகமானது தமிழ் பிள்ளைகளின் அவலத்தை அரசியல் நோக்கங்களை முன்னெடுத்தலுக்காக அவர்கள் குரூரமான விதத்தில் பயன்படுத்துவதாக நோக்கப்படவும் கூடும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும் மரியாதையானதுமான ஒரு அரசியல் தீர்வுதான் எமது பிள்ளைகள் தம் குழந்தைப்பருவத்தை மகிழ்ச்சிகரமாக அனுபவிக்கும் சூழலை உருவாக்கும் என்பதை இவர்கள் ஏற்கும் காலம் வந்துவிட்டது.

ஆங்கிலமொழிமூலம்:
தராக்கி
தமிழில்:
வின்சென்ற்புளோறன்ஸ்

---

# நெருப்பேந்தி தெருவினிலே பெண்கள்

யாழ்ப்பாணம் பெண்கள் பண்பாட்டு மையத்தினரால் கடந்த 08.03.2005இல் எழுச்சிமிக்க பண்பாட்டு ஊர்வலம் ஒன்று கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் இருந்து பரமேஸ்வராச் சந்திவரை நடைபெற்றது. இந்த எழுச்சியில் பெண்கள் பண்பாட்டு மையத்தின் செயலாளிகளான மாவட்ட மகளிர் பிரதிநிதிகள் பங்குகொண்டனர் அன்று.

காலை முதல் மாலைவரை தம்மை அகபுற ரீதியாக ஒடுக்கி வரும் ஒடுக்கு முறைகளுக்கு காரணங்களைக் கண்டுகொண்டு அவற்றை கலையம்சம் கொண்ட காண்பியங்களாகப் படைப்பாக்கம் செய்தனர். அகப்புற ஒடுக்குதல்களை ஏற்படுத்தும் இராணுவத்தின் செயல்கள் அப்பட்டமாக அங்கு வெளிப்பட்டன. கோரமுகங்களும், முழிக்கண்களும் அப்பக்கடை தமிழ் மொழியைக் கொலைசெய்து காவலரண்களில் பதிக்கப்பட்டிருக்கும் "நிருத்து" போன்ற வாசகங்கள் என்பன வீதிகளில் தொங்கவிடப்பட்டிருந்தன. மாலை6.00 மணியளவில் "நெருப்பேந்தி தெருவினிலே நாம்" என்ற பதாகை ஏந்திய பெண்களணி தியாகிகளை நினைவுகூர்ந்து

"கொட்டுண்டு கருகி வீழ்ந்த
கொழுந்துகளே - இளந்
தளிர்களே" என்ற அகவணக்கப்பாடலைப்பாடி, பட்டாசு கொளுத்தியும், பறை முழங்க முட்கம்பிகள் சுற்றப்பட்ட பாடையைச் சுமந்து வீதியில் இறங்கினர். "ஊர்வலத்தின் எழுச்சியில்

"எங்கள் நிலம் எமக்கு வேண்டும்
எங்கள் நிலம் எமக்கு வேண்டும்"
எனக்கோரி முழங்கினர். ஆங்காங்கே வீதிகள் தோறும் ஏற்கனவே கொழுவி வைக்கப்பட்டிருந்த அடக்குமுறை அடையாளங்களைப் பிய்த்து பாடையில் ஏற்றிவந்தனர். தொடர்ந்து பரமேஸ்வராச்சந்தியில் "பயனற்ற வாழ்வை மீண்டும் அடைவோம்" என்ற பதாகையின் கீழ் பாடையை இறக்கி வைத்துவிட்டு அவ்விடத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் வழிபாட்டை மேற்கொண்டு



"தம்பிராசா இராணுவ வீரா
சிங்கள சோதரி பெற்ற புதல்வா
உந்தன் ஊருக்கு திரும்பி நீ சென்று
ஊருடன் வாழும் பேற்றினை
பெறுவாய்" என்ற பாடலை மிக அமைதியாக பாடியவாறு "பூவுக்குள் ஓர் பூகம்பமடல்" ஏந்தியவாறு அரசடி வீதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் நோக்கி பெண்களணி நகர்ந்தது.

இராணுவக் கட்டன் கமகேயிடம், இராணுவத் தலைமையகத்திற்கும், இராணுவச் சிப்பாய்களுக்கும் பெண்களால் விடுக்கப்பட்ட கடிதம் கையளிக்கப்பட்டு அதற்கான விளக்கமும் கொடுக்கப்பட்டது.

"இராணுவம் தமிழ் மக்களின் குடியிருப்புக்களில் தங்கியிருப்பதனால் பெண்களே அதிகம் பிரச்சினைக்கு உள்ளாகின்றனர். பீதியும் அச்சமும் கொண்டு வாழ்கின்றனர். தம் வீடுகளில் தம் தேசத்தில் தாம் சுயமாக வாழ முடியாத நிலையில் உள்ளனர். தமிழ் பெண்களின் ஆளுமைகள், திறமைகள் இராணுவத்தினால் திட்டமிட்டு ஒடுக்கப்படுகின்றன. நிம்மதியாக வாழமுடியாதுள்ளது. இராணுவத்தினரால் எந்நேரமும் எதுவும் நடக்கலாம்"

எமது இடத்தில் நாம் நிம்மதியாக சுயமாக சுதந்திரமாக எமது தலைமையின் கீழ் வாழவிரும்புகின்றோம். அதேபோன்று இராணுவ வீரர்களே! "நீங்களும் உங்கள் தாய், மனைவி, சகோதரங்கள், பிள்ளைகளுடன் உங்கள் உயிருக்கு ஆபத்து இன்றி உங்கள் ஊரில் சந்தோசமாக போய் இருங்கள்" என அவர்களுக்கும் புரிந்துகொள்ளலை ஏற்படுத்தினர். இருவருக்குமான செய்திப்பரிமாற்றத்துடன்,

"விட்டு விடுதலையாக வேண்டுமென்று உணர்ந்த எங்களை விடு" எனக் கையில் தீப்பந்தங்கள் ஏந்தி "பயமற்ற வாழ்வை மீண்டும் அடைவோம்" என்ற பதாகையின் முன் வைத்திருந்த பாடையை நோக்கி தமிழ் பெண்களின் அடிமன நெருப்பை கையில் சுமந்து விடுதலை நோக்கி வீறு கொண்டனர். கொள்ளிக்குடம் ஏந்தி ஆண்களும் பெண்களும் பாடையைச் சுற்றி முட்டி உடைத்தனர்.

"எங்கள் நிலம்
எமக்குவேண்டும்"என ஆண்களும், பெண்களும் சேர்ந்து தீயுடன் போர்புரிந்தனர். அடக்குமுறை அடையாளங்கள் ஈமச்சடங்கில் உணர்ச்சிக் கொந்தளிப்பில் தீயுடன் சங்கமமாகி சாம்பலானது. மாலைப்பொழுதில் மனசைப் பிழிந்து விடுதலை வெறி கொண்டாடியது "படைஎரிப்பு" மிகவும் உணர்வாக மிக முக்கியமான காரியம் ஒன்று பெண்களினதும் இந்தத் தேசத்தினதும் எதிர்காலம் நோக்கி நடைபெற்றுள்ளது. தாயகத்திற்கும், தமிழ்ப் பெண்களுக்கும் விடுதலை கிடைக்கும் வரை நியாயமான போராட்டங்கள் புரிவதில் தவறேதுமில்லை. காலத்தின் தேவையும் அதுவே.

**தர்மினி பத்மநாதன்.**


# இங்கு தான் நிம்மதியாக வாழ்கிறோம்

## -முள்ளியவளைப் பகுதி முஸ்லிம் மக்கள்-

**சுழியன்**

இலங்கை நான்கு இன மக்கள் வாழ்கின்ற நாடு. இங்கு சிங்களம், தமிழ், முஸ்லிம், பேகர் என்ற இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிங்களவர் இந்நாட்டின் பெரும்பான்மையாக இருக்கின்றமையால் ஆட்சி அதிகாரங்களை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு ஏனைய இனங்களை அடக்கிவந்தனர். இவர்களில் மிக மோசமாக இனவாதத்திற்கு பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் இன மக்களே. இதனால்தான் இவர்கள் கடந்த இரு தசாப்த காலமாக அடக்கு முறைக்கு எதிராகப் போராடிவருகின்றனர்.

அடுத்து இந்நாட்டில் பாரபட்சமான சிங்களவரால் நடத்தப்பட்ட இனம்தான் முஸ்லிம் இன மக்கள். மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் இவர்கள் தமிழர்களே. அதாவது இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த தமிழர்களே. இவர்கள் இன்று வடக்கில் எவ்வித பிரச்சினைகளும் இன்றி மகிழ்ச்சியாக வாழ்கின்றனர் என்பது நாம் அவர்களை சந்தித்த போது தெளிவாகியது.





பள்ளிவாசல்

இது தொடர்பாக நாம் அவர்களிடம் கேட்டறியும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளைப் பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் தலைவரும், பள்ளிவாசல் பரிபாலன சபைத் தலைவரும், கொக்குத் தொடுவாய் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினருமான செய்து முகமது முத்துமுகமது என்பவரைச் சந்தித்த நாம்

**நீங்கள் இங்கு எப்படி இருக்கிறீர்கள் உங்களுக்கும் ஏனையவர்களுக்குமான உறவுகள் எவ்வாறு உள்ளது எனக் கேட்டோம்.**

நாங்கள் இங்கு நூறுவீதம் சந்தோசமாக வாழ்கின்றோம். ஏனையவர்களுடன் எமது உறவு மிக நெருக்கமாக இருக்கிறது. நாம் அவர்களின் அனைத்துக் கொண்டாட்டங்களிலும் அதாவது கோயில்கள், கலியாணவீடு மற்றும் ஏனைய விழாக்கள் என்பவற்றில் பங்குகொண்டு உதவிகள் செய்வது போன்று அவர்களும் எங்களது நிகழ்வுகளிலும் பங்குகொண்டு உதவிகள் செய்து தருகின்றனர்.

மேலும் எங்கள் பள்ளிவாசல்களில் இடம்பெறுகின்ற விருந்து பசாரங்களிலும் கலந்து சிறப்பிக்கின்றனர். முக்கியமாக இங்கு ஒன்றைக் குறிப்பிடவேண்டும். புத்தளம் மற்றும் ஏனைய இடங்களில் உள்ளவர்கள் வேறு மத ஆலயங்களுக்கோ அல்லது அவர்கள் எங்கள் பள்ளிவாசலுக்கோ செல்வதும் இல்லை. வருவதும் இல்லை. ஆனால் இங்கு அவ்வாறு இல்லை.

எங்களிடம் பரஸ்பரம் நல்ல உறவு காணப்படுகிறது. எமது பிள்ளைகள் கூட பாடசாலைகளில் பிரிந்து இருக்கின்ற ஒரு சந்தர்ப்பம் என்றால் அது மத வணக்கத்துக்குரிய நேரம் மட்டும்தான். ஏனைய நேரங்களில் எல்லாப் பிள்ளைகளும் ஒரு தாய் பிள்ளைகள் போன்று ஒன்றாக இருப்பதனைப் பார்க்க மிகமிக சந்தோசமாக இருக்கின்றது என மகிழ்ச்சியோடு கூறினார். தொடர்ந்து அவரிடம் நாம்

**கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற இன மோதல்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் எனக் கேட்டபோது.**

அங்கு அவ்வாறு பிரச்சினைகள் நாளுக்கு நாள் நடப்பதனைப் பத்திரிகை வாயிலாகவும், வானொலி மூலமாகவும் கேட்கின்ற போது கவலையாக இருக்கின்றது. நீங்களே பார்த்திருப்பீர்கள் நாங்கள் இங்கு எப்படி வாழ்கின்றோம் என்று, இங்கு வந்து மூன்று, நான்கு வருடங்கள் ஆகின்றன. அவர்கள் எங்களுடன் ஏதாவது பிரச்சினை அல்லது நாங்கள் அவர்களுடன் ஏதாவது பிரச்சினை என்று இதுவரை ஒன்றுமில்லை. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற குழப்பங்களின் பின்னணியில் சுயலாபம் கருதி சிலர் மேற்கொள்கின்ற திட்டமிட்ட நடவடிக்கையாகவே கருத வேண்டியுள்ளது.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் எம்மோடு மிக நெருக்கமாகப் பழகுகின்றார். எமது பிரச்சினைகளை கேட்டறிந்து கொள்கின்றார். அத்தோடு எமது காணிகளை எமக்கு பெற்றுத்தந்துள்ளார். இதைவிட ஏனைய துறைசார்ந்தவர்கள் கூட நல்ல முறையிலே உள்ளனர். வெளியில் இருந்து பார்க்கும் போது சிறு சந்தேகக் கண்ணோடு பார்த்த எங்களுக்கு அது தவறு என்பது இங்கு வந்தபின்புதான் தெளிவாகியது.

**எனக்கூறிய அவரிடம் மீண்டும் நாம், நீங்கள் இங்கு வாழ விரும்புகின்றீர்களா..? எனக் கேள்வியை முடிக்குமுன்னரே**

இங்குதான் வாழ விரும்புகின்றோம். பயமில்லாமல், நிம்மதியாக எங்கு சென்றாலும் தமிழ் மொழியிலேயே கதைத்துக்கொண்டு சந்தோசமாக இருக்கின்றோம். புத்தளத்தில் நாம் வாழ்ந்தபோது அரச செயலகத்திற்கோ அல்லது ஏனைய திணைக்களங்களுக்கோ செல்லும் போது சிங்கள மொழி தெரிந்த ஒருவரை கூட்டிச்செல்லவேண்டும். அதைவிட அவர்கள் எங்களை ஒழுங்காகக் கவனிப்பதுமில்லை. ஆனால் இங்கு அப்படி இல்லை. நாம் முல்லைத்தீவு அரச செயலகத்திற்குச் சென்ற போது அரச அதிபர் எம்மை வரவேற்று இருத்தி எமது பிரச்சினைகளை கரிசனையோடு கேட்டறிந்து எங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், செய்வதாகக் கூறினார். ஆனால் இந்த நிலைமையை நாம் அங்கு எதிர்பார்க்கமுடியாது.

அங்குள்ள முஸ்லிம் பிள்ளைகள் கூட சிங்கள மொழியை தங்களுடைய தொழில் வாய்ப்புக்காகவே கற்கின்றனர். பொலிஸ், நீதிமன்றம் போன்ற பொது இடங்களிலும் பெரும்பாலும் சிங்களவர்தான். தமிழ் பெயரளவில்தான். அவற்றோடு ஒப்பிடும் போது இங்கு எவ்வளவு நிம்மதியாக வாழ்க்கின்றோம். இதை விட்டு மீண்டும் நாம் அங்கு செல்ல விரும்பவில்லை என்றார் முத்துமுகமது.

**மேலும் அவரிடம் சுனாமியின் தாக்கம் பற்றி கேட்டபோது;**

எங்கள் உறவினர்களில் இருவரை மாத்திரமே இழந்துள்ளோம். அத்தோடு ஒருசில தொழில் உபகரணங்கள் வேறு ஒன்றும் இழப்பில்லை. விவசாயமும், மீன்பிடியும், எமது பிரதான தொழில்.

எமக்கு இங்கு இருக்கின்ற குறைபாடு என்றால் இங்கு இஸ்லாமை எமது பிள்ளைகளுக்கு படிப்பிப்பதற்கு இஸ்லாமிய ஆசிரியர் இல்லை. அதுவே மிகப் பிரதான பிரச்சினையாக உள்ளது. உங்கள் பத்திரிகை வாயிலாக எமது இப் பிரச்சினையை தெரிவித்து தீர்வினை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டார்.

**இதைவிட முள்ளியவளை தபாலகத்தில் கடமையாற்றுகின்ற சுல்தான் அப்துல் காதர் பசீர் என்பவரைச் சந்தித்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் எந்தளவுக்கு உதவிகள் செய்துள்ளார்கள் என்று கேட்டபோது;**



அவர்கள் சந்தர்ப்பவாதிகள். தேர்தல் நேரம் மட்டும்தான் எம்மிடம் வருவார்கள். வெற்றி பெற்றபின் எங்களை மறந்து விடுவார்கள். அவர்கள் தங்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் காட்டுகின்ற அக்கறையை எமது வாழ்க்கையில் காட்டுவதில்லை. ஆனால் இங்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் அவர்கள் எமது இந்த வீட்டிற்கு வந்து எம்மோடு நீண்ட நேரம் கதைத்து எமது பிரச்சினையை கேட்டறிந்துகொண்டார். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இவற்றை எதிர்பார்க்கமுடியாது.

நாங்கள் 3000 குடும்பங்கள் அகதிகளாக புத்தளத்தில் வாழ்ந்தோம். ஆரம்பத்தில் வழங்கப்பட்ட 1250 ரூபா பெறுமதியான உணவு முத்திரைதான் இன்று வரை அதைவிட அன்று உள்ள 3000 குடும்பங்கள் இன்று 5000 குடும்பங்களாக மாறியுள்ளன. இதில் 300 வீடுகள் கட்டித்தருவதாகக் கூறியுள்ளார்கள். இதுவும் எந்தளவு சாத்தியப்படப் போகின்றதோ தெரியாது. என கூறிய அவரிடம் நாம்

**நீங்கள் புத்தளத்தில் வேலை பார்ப்பதற்கும் இங்கு வேலை பார்ப்பதற்கும் என்ன வேறுபாட்டை உணர்கின்றீர்கள்? எனக் கேட்டதிற்கு**

நான் அங்கு வேலை செய்த போது எனது தமிழ் மொழியை பேசமுடியாது. ஆனால் இங்கு அவ்வாறு இல்லை. தமிழை அரச மொழியாக அறிவித்திருந்தாலும் நடைமுறையில் சாத்தியப்படவில்லை. சிங்களம் விரும்பியோ விரும்பாமலோ படிக்க வேண்டிய கட்டாய நிர்ப்பந்தம் அங்கு உள்ளது. எவ்வாறெனினும் முள்ளியவளையில் தொழில் பார்ப்பதுபோன்று வராது என்றார் பசீர் அவர்கள். அவரிடமும் நீங்கள் என்ன குறைபாடுகளை எதிர்நோக்குகின்றீர்கள் எனக் கேட்ட போது அவரும் கூறுகின்றார் இஸ்லாமை படிப்பிப்பதற்கு ஆசிரியர் இல்லை என்பதே. வேறு எந்தப் பிரச்சினைகளும் இன்றி சந்தோசமாக இருப்பதாகக் கூறுகின்றார்.

இதனைத் தொடர்ந்து நாம் அப்பிரதேசத்தில் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்ற மோகன்ராஜ் என்பவரிடம் உங்களுக்கும் இங்குள்ள முஸ்லிம் மக்களுக்குமான உறவு எப்படி உள்ளது எனக் கேட்டபோது அவர் கூறுகின்றார்.



நாங்கள் பரஸ்பரம் உதவிகளை செய்து கொண்டு சந்தோசமாக வாழ்கின்றோம். அவர்கள் முஸ்லிம் மதத்தைச்சேர்ந்தவர்கள் என்பது நீங்கள் கேட்கின்ற போது நினைவு படுத்துவதாக உள்ளது. இங்கு ஏற்கனவே கிறிஸ்தவர்கள், இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள். வாழ்கின்றோம்.அதேபோன்றுதான் அவர்களும் மதம்தான் வேறு ஏனைய விடயங்களில் நாம் எல்லாம் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்களே என்கிறார் மோகன்ராஜ் என்பவர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் நிம்மதியாக சந்தோசமாக பிரச்சினைகள் இன்றி வாழ்கின்றார்கள் என்றால் ஏன் கிழக்கில் உள்ளவர்களால் முடியாது உள்ளது. இதில்தான் முத்துமுகமது கூறியது போன்று அவர்களின் இனமோதல்களுக்குப் பின்னால் சுயலாபம் கருதிய தீய சக்திகள் இருக்கின்றனர் என்பது புலப்படுகின்றது. ஒன்றுமட்டும் உண்மை புலிகள் தமிழ் பேசுகின்ற அனைவரதும் பாதுகாவலர்களாக உள்ளதை இந்த மக்கள் நினைவு கூர்ந்ததை முஸ்லிம் மக்களுக்கும் தமிழ்மக்களுக்குமான உறவுமிக உறுதியாக இணைவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

# செயலற்ற ஆட்சி

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக சிறிலங்காவின் அரச இயந்திரமும் ஆட்சியும் செயலற்ற அல்லது மிகவும் மந்தகதியில் செயற்படுகின்ற தன்மையை வெளிப்படுத்தி வருகின்றன. முக்கியமாக சிறிலங்கா ஆட்சி முக்கிய முடிவுகள் எதனையும் எடுக்கவோ செயற்படுத்தவோ முடியாத நிலையில் இருக்கின்றது.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்தபோதும் நிறைவேற்று அதிகாரம் எதிர்க்கட்சியாக இருந்த பொதுசன ஐக்கிய முன்னணியிடம் இருந்ததால் அதனால் சரிவரச் செயற்படமுடியவில்லை.

அதன் சாதனையாகக் கருதப்படும் போர் நிறுத்த உடன்படிக்கை சமாதான முயற்சிகள் கூட அக்கட்சி விரும்பிய வகையில் அல்லது திருப்தி தரத்தக்க வேகத்தில் செயற்படுத்தப்படவில்லை என்பது வெளிப்படை.

போர் நிறுத்த உடன்படிக்கையின் பல பிரிவுகள் செயற்படுத்தப்படாமலே இருந்தன. அது மட்டுமல்லாது முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் போர் நிறுத்த உடன்பாட்டில் அமுலாக்கத்திற்கு சனாதிபதி சந்திரிகா போட்டுவந்த முட்டுக்கட்டைகளை அரசாங்கத்தால் நீக்க முடியவில்லை. மேலும் போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் சனாதிபதியின் உத்தரவுக்கமைய படையினர் குறிப்பாகக் கடற்படையினர் நடந்துகொண்டமையை நீக்கிவிட முடியவில்லை.

இவ்விடயங்களில் ஐக்கிய தேசியக்கட்சி விரும்பியோ விரும்பாமலோ நடைமுறைப்படுத்த வேண்டியிருந்த பலவிடயங்களை அதனால் செயற்படுத்தமுடியவில்லை. அதாவது சனாதிபதி சந்திரிகா அம்மையார் ஐந்து வருடங்களுக்கு மேலாக நடத்திய தொடர் யுத்தத்தால் பலமிழந்து பொருளாதார ரீதியில் வீழ்ந்து கிடந்த சிறிலங்காவை நிமிர்த்த சமாதான நடவடிக்கைகள்தான் ஒரே வழி என ஐக்கிய தேசியக் கட்சி உணர்ந்து கொண்டு அந்த வழியில் செல்ல ஐக்கிய தேசியக் கட்சி முயன்ற வேளை நிறைவேற்று அதிகாரம் அதற்குத் தடையாக இருந்தது.

அதேவேளை அது தனது இயலுமைக்கு ஏற்ற வகையில் மேற்கொண்ட சில நடவடிக்கைகள் சிறிலங்காவின் பொருளாதாரத்தைச் சற்றுத் தூக்கி நிமிர்த்தியது என்பதும் மறுப்பதற்கில்லை. ஆனால் தொடர்ந்தும் இப்பாதையில் முன்னேறிச் செல்ல ஐ.தே.க. தயக்கம் காட்டி வந்தது.

பாரிய சர்வதேச நிதி உதவியை வழங்க நிதி வழங்கும் நாடுகளும் அமைப்புக்களும் தயாராக இருந்த அதேவேளை அந்நிதி உதவி சமாதான முயற்சிகளுடன் சமாந்தரமாகவே கிடைக்கும் என்ற நிலையில் ஐ.தே.கட்சி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. ஆனால் அதிலும்கூட நிறைவேற்று அதிகாரம்மீது அது கொண்டிருந்த அச்சம் வெளிப்படவே செய்தது.

இறுதியில் அது அச்சப்பட்டவாறே நிறைவேற்று அதிகாரம் ஐ.தே.க. ஆட்சி மீது பாய்ந்து அதனை வீழ்த்தியது. இந்நிலையில் ஐ.தே.க.வின் ஆட்சிக்காலம் முழுதும் அதன் செயற்பாடுகள் மந்தகதியிலானதாகவே இருந்தன.

பின்னர் அவ்வாட்சியைக் கலைத்துவிட்டு ஆட்சிப்பீடமேறிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சிறுபான்மை அரசாங்கமாகவே இருந்தமையால் அது நாடாளுமன்றத்தில் பலமற்றதாக நிறைவேற்று அதிகாரத்தை நம்பியதாகவே இருந்தது. ஆரம்பத்தில் சபாநாயகர் பதவியைக் கைப்பற்ற முடியாத நிலையில் அது இருந்தது. இப்பொழுது அது பெரும்பான்மைப்பலம் கொண்டதாக இருந்த போதிலும் ஆட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையேயான முரண்பாடுகள் அவ்வாட்சியை நகரவிடாது செய்துள்ளன.



இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றை எட்டும் விடயத்தில் இன்றைய ஆட்சியாளர்களால் திருப்புமுனை எதனையும் ஏற்படுத்திவிட முடியாது என்பது ஆட்சியின் ஓராண்டுப் பூர்த்தியை நெருங்கிக்கொண்டிருக்கின்ற இன்றைய நிலையில் நன்கு உணரப் பட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்திலிருந்து மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் விடயத்திலும் அதன் செயல்திறன் நன்கு உணரப்பட்டிருக்கின்றது. வடக்கு கிழக்கில் ஏற்பட்ட அழிவுகளுக்கு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதில் அரசாங்கம் காட்டிவரும் போக்கு வெளிப்படையானது. அதேவேளை தென்பகுதி மக்களும் அரசாங்கத்தின் செயல்திறன் குறித்து அதிருப்தி கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.

அதேவேளை புனரமைப்புப் பணிகளை சமமான முறையில் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளும் முன்னெடுக்கவேண்டும் என்ற சர்வதேசத்தின் விருப்பத்தை நிறைவுசெய்ய இன்றைய ஆட்சி முன்வராமை உதவிகள் கிடைப்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

உதவி வழங்கும் அமைப்புகள் நாடுகளையும் அவற்றின் உதவிகளையும் இனவாதக் கண் கொண்டு இன்றைய ஆட்சியாளர்கள் பார்ப்பது இதற்குத் தடையாக இருக்கின்றது. பேரழிவு வடக்கு கிழக்கிலேயே ஏற்பட்டுள்ளது என்ற உண்மையை உதவும் நிறு வனங்கள் உணர்ந்து அதற்கு நிவாரணம் தேடமுற்படுகையில், அந்த நிறுவனங்களை இனவாத அரசு சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றது. அவற்றுக்கு முட்டுக்கட்டை போடுகின்றது. இவற்றின் காரணமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்குமே இந்த உதவிகள் கிட்டுவதில் தாமதம் ஏற்படுகின்றது.

இவ்விடயங்களில் மட்டுமல்ல அரசியல் ரீதியாக ஒன்றையொன்று பிடித்து விழுங்கி ஆட்சியதிகாரத்தைக்கைப்பற்ற முயலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் ஏட்டிக்குப் போட்டியான செயல்களில் ஈடுபடுவது ஆட்சியின் வேகத்தைக் குறைத்திருக்கின்றது.

அதாவது சித்தாந்த ரீதியான ஒருமித்த கருத்துக்களுக்காக வல்லாது ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியிலிருந்து நீக்கி தாம் ஆட்சிப் பீடத்தில் ஏறுவது என்ற ஒரே நோக்கத்தில் ஏற்பட்ட இந்தக் கூட்டானது நோக்கம் நிறைவேறியதும், பல முரண்பாடுகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

இவையெல்லாம் சிறிலங்காவின் ஆட்சியை சரிவர இயங்கவிடாது தடுத்துவருவதானது கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக சிறிலங்காவின் முன்னேற்றத்துக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவுள்ளது.

இந்த முட்டுக்கட்டை தொடரும் நிலையில் எந்தவொரு செயற்பாட்டிலும் பாரிய முன்னேற்றம் அல்லது திருப்புமுனை எதனையும் எதிர்பார்க்கமுடியாது. ஆனால் இதனைச் சீர்செய்ய முயலாத ஆட்சியாளர்கள் தாம் ஆட்சியில் நீடித்து நிலைக்கும் நோக்கத்துடனான ஆரசியலமைப்பு மாற்றமொன்றை உருவாக்குவதற்கு மக்களிடம் ஆணை கோரப்போவதாக தெரிவித்துவருகின்றனர். இப்பொழுது கூட அவர்களுக்கு மக்கள் குறித்த சிந்தனை எதுவும் இல்லை என்பதனையே இது வெளிப்படுத்துகிறது.

**வேலவன**

---

## நேர்நோக்கு

# புறக்கணிக்கப்படும் தமிழர் பிரதேசம்

இன்று தமிழர் தாயகப்பகுதிகளில் பெரும்பாலான பகுதிகளில் வாழுகின்ற மக்கள் எதிர்கொள்கின்ற பாரிய பிரச்சினை போக்குவரத்து, மருத்துவம் என்ற இரண்டு பாரிய பிரச்சினைகள். இதற்கான தீர்வுகள் எப்போது கிடைக்கும் அல்லது இந்த வசதிகள் எப்போது ஏற்படுத்திக் கொடுக்கமுடியும் என்பது கேள்விக்குறியான விடயம்தான். தமிழர் தாயகப்பகுதியின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட மருத்துவமனைகள் இருந்தாலும் கிராமிய மருத்துவமனைகள், அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் உள்ளன. இவைதவிர ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராமிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் வாரம் ஒரு தடவை அங்கு சிகிச்சை முகாம் நடத்தவேண்டும். இது தமிழர் தாயகப் பகுதி அறிந்ததன்று. ஆனால் சிங்கள தேசம் இது தொடர்பான செயற்பாடுகள் சிங்கள தேசத்தில் தேவைக்கு அதிகமாக இடம்பெற்று வருகின்றது.

வவுனியா மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் தமிழர் தாயகப் பகுதிகளான செட்டிகுளம் மருத்துவமனை வளாகம் சிறந்த கட்டடங்கள் அமைக்கப்பட்டு கிராமிய மருத்துவமனையாக இருந்த மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் அந்த மருத்துவமனையில் ஒரு சிங்கள மருத்துவர் மட்டும் கடமையில் இருக்கின்றார். அவர் நினைத்தால் வரலாம். அல்லது வராமல் விடலாம். அது அவர் எடுக்கின்ற முடிவு. மருந்து எடுக்கச் செல்லும் நோயாளிகள் சிங்களத்திலிருந்து தமிழிலும், தமிழிலிருந்து சிங்களத்திற்கும் மொழிபெயர்ப்புச் செய்யும் ஒருவரும் போகவேண்டும். இது இன்றும் நடக்கின்றது. ஆனால் இங்குள்ள மக்கள் அனைவரும் பூர்வீக தமிழ் மக்கள். இது இவ்வாறிருக்க செட்டிகுளம் உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள பெரிய உலுக்குளம், பாவற்குளம், தந்திரிமலை ஆகிய சிங்களக் குடியேற்ற கிராமங்களில் உள்ள கிராமிய மருத்துவமனைகள் ஆரம்ப சுகாதார சேவை நிலையங்கள் தரமான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டு ஒவ்வொரு மருத்துவமனைகளுக்கும் இரண்டு மருத்துவர் வீதம் நியமிக்கப்பட்டு ஆளணி வளங்களையும் அதிகரித்து நோயாளர் காவு வண்டிகளையும் வழங்கி வளப்படுத்தி வருகின்றது. இதே உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள இரண்டாம் பண்ணை, முகத்தான் குளம், கிறிஸ்தவகுளம், கற்காரன்குளம், முதலியார்குளம் ஆகிய பகுதிகளில் இதில் எந்த வசதிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இது தமிழர் தாயகப் பகுதிக்கும் சிங்கள தேசத்திற்கும் செய்யப்படும் அபிவிருத்திகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இன்று வவுனியா முல்லைத்தீவு, மன்னார், ஆகிய மாவட்டங்களின் எல்லையோரக் கிராமங்களான கீரிசுட்டான், முள்ளிக்குளம், கங்காணி குளம், பரசன்குளம், விளாத்திக்குளம், சின்னவலையன்கட்டு, பெரியவலையன்கட்டு, மூன்றுமுறிப்பு, நவ்வி, குஞ்சுக்குளம், பணங்காமம், இளமருதன்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்து சுமார் 3000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், தமது அடிப்படைச் சுகாதார வசதிகளைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாது உள்ளனர். இவர்களுக்கான போக்குவரத்து என்பது எது எனத்தெரியாது.

இப்பகுதிகளில் உள்ள மக்கள், ஆதிவாசிகள் போன்றே அவர்களுடைய வாழ்க்கை இப்பகுதிகளில் எந்தவித அபிவிருத்திப்பணிகளும் இல்லை. அவ்வாறு அபிவிருத்திப்பணிகள் என்றால் அதனை பொறுப்பேற்கின்ற ஒப்பந்தகாரர்களின் கொண்டாட்டம். இது இப்படியே போகின்றது. இந்தக்கிராமத்தில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத பாரிய குன்றும் குழியுமாக காணப்படும் வீதிகளினூடாக துவிச்சக்கர வண்டி மூலமோ அல்லது அவர்களது சொந்தப்போக்குவரத்து வசதிகள் மூலம் நட்டாங்கண்டல் கிராமிய மருத்துவமனைக்கோ அல்லது வவுனியா மன்னார் மருத்துவ மனைகளுக்கோ செல்லவேண்டும். அதற்கிடையில் அந்நோயாளி மேலும் நோய்வாய்ப்படவேண்டும். அல்லது உயிரிழக்க நேரிடும். இது இயல்பாகி விட்டது.



அத்துடன் தொற்று நோய் கள் பற்றியோ அல்லது ஏனைய சுகாதார நடவடிக்கைகள் பற்றி விழிப்புணர்வு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றே கூற வேண்டும்.

இதே நிலைதான் தமிழர் தாயகப் பகுதிகளின் எல்லா இடங்களிலும் நிலவிவருகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளாக இவ்வாறான பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினரின் நடமாடும் மருத்துவசேவை, மற்றும் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவையினர் மருத்துவமுகாம்களை அமைத்து சேவையாற்றிவருகின்றனர். பிரதேச ரீதியாக அமையப்பெற்ற தியாக தீபம் மருத்துவமனைகளில் தலா மாதம் ஒன்றிற்கு 3000இற்கும் அதிகமான மக்கள் பயன்பெற்று வருகின்றார்கள். இவ்வாறு மருத்துவமனைகள் அமையப்பெற்ற இடங்களில் இவர்களின் பணி மிக சிறப்பானது. இதே போன்று திலீபன் மருத்துவ மனை களை தமது பகுதிகளில் அமைக்க வேண்டும் என அடிப்படைவசதிகள் அற்ற பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் மூலம் ஓரளவு மருத்துவ வசதியைப் பெறமுடியும். இப்பகுதிகளின் பிரதான வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும். இப்பகுதி மக்களின் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டு இப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும். இது எல்லோரினதும் பொறுப்பாகும்.

**சு. பாஸ்கரன்**



# முறியடிப்புப் புலனாய்வில் தங்கியிருக்கும் தேசத்தின் பாதுகாப்பு

ச.சங்கரன்

தமிழர்களின் தேசிய விடுதலைப்போராட்டம் பல எதிரிப்புலனாய்வு நிறுவனங்களின் ஊடுருவல்கள் பலவற்றை முறியடித்து பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது. 33 வருடகால ஆயுதப்புரட்சியினால் பேருரு எடுத்திருக்கும் இவ் பேரியக்கத்தைச்சீர்குலைத்து விட விடுதலை இயக்கத்திற்கு எதிராக அதனை முறியடிக்கும் முயற்சியில் எதிரிப்புலனாய்வு வல்லுனர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

தமிழீழம் என்ற புதிய தேசத்தை உருவாக்கும் தமிழர்களின் முயற்சியை முறியடிக்க முயன்றுகொண்டிருக்கும் பகையுளவாளிகளின் முயற்சியை நாம் முறியடிக்க முயன்று கொண்டிருக்கின்றோம்.

தமிழர் தேசத்தின் உள்ளகப் பாதுகாப்புக் கட்டமைப்பை பேணிப்பாதுகாப்பதற்கு முறியடிப்புப்புலனாய்வு பணியிலீடுபட்டிருக்கும் ஒவ்வொரு உளவுத்துறை வீரர்களினதும் மூளைகள் இடைவிடாத முறியடிப்புப் புலனாய்வுப் பணி பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும்.

இன்று நாங்கள் எல்லோரும் போரின் மத்தியில்தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். போர் ஓய்வு என்பது ஒரு தற்காலிக இடைவேளை என்பது எல்லோருக்கும் தெரியும்.

கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் அரசியல் இராணுவப் புலனாய்வு நகர்வுகளில் சடுதியான மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

கடல் பொங்கி வருவதற்கு முதல் மணி வரை யுத்தத்தை தொடங்குவது என்ற நிலையே காணப்பட்டது. அதாவது அரசுபடைகளும் புலிப் படையணிகளும் போருக்கு உஷார் நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தன.

ஆனால், பூகம்பப் பேரலை நிலைமையை மாற்றியமைத்துவிட்டது. சுனாமியினால் படைப்போர் வீரர்களின் யுத்தம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே இனிவரும் சிறு காலத்திற்கு இருளடைந்த உலகத்துக்குள்ளால் உளவாளிகளினாலேயே அடுத்தகட்டத்திற்கு நகர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. சுனாமிக்குப் பின்னரான இன்றைய போர்க்களம் உளவாளிகளின் கையில்தான் உள்ளது. இனிவரும் காலங்களில் புலனாய்வுப்போர் பணி சூடுபிடிக்கப்போகின்றது.

அதனால் இனிவரும் காலத்தில் ஊடுருவல்களும் முறியடிப்புக்களும் அதிகம் இடம் பெறும். இங்கே நாம் முறியடிப்புப்புலனாய்வு என்றால் என்ன. அவை எப்படி மேற்கொள்ளப்படவேண்டியவை என்பன பற்றி பார்ப்போம்; ஊடுருவும் உளவாளிகளைக் கண்டுபிடிப்பது முறியடிப்பு உளவாளிகளின் பணியாகும். இதனை களப் புலனாய்வு அல்லது உள்ளகப் பாதுகாப்புப்புலனாய்வு என வர்ணிக்கப்படுகின்றன. முறியடிப்புப் புலனாய்வுத் தொழில் நுட்பம் பற்றி புலனாய்வுத்துறையாளர் குறிப்பிடுகையில், "ஒரு நாட்டைப் பலவீனப்படுத்த எதிரியால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை முறியடிப்புப்புலனாய்வு எனப்படும்."

ஒரு நாட்டை அதன் பொருளாதாரம், அரசியல் தொழில்நுட்பம், அறிவியல் விடயங்களில் எதிரி நாடுகள் எப்போதும் பலவீனமான நிலையில் வைத்திருக்கவே விரும்புகின்றன. அல்லது தமக்குச் சார்பாக மாற்றிக்கொள்ள விரும்புகின்றன. அதாவது தமது காலடியில் விழ வேண்டும் என எதிர்பார்க்கின்றன. அதற்கான குறித்த நாட்டின் பாதுகாப்பு உட்கட்டமைப்புக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலை மறைமுகமாகவும் சிலவேளை நேரடியாகவும் அல்லது வேறு சக்திகளூடாகவும் அச்சுறுத்தல்களை விடுத்தவண்ணமிருக்கும்.

குறித்த எதிரிநாட்டின் நிர்வாக இயந்திரத்தை சீர்குலைப்பதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துக்கு பகை நாட்டு உளவு நிறுவனங்கள் அச்சுறுத்தல் கொடுத்துக்கொண்டிருக்கும். அதனால் தத்தமது நாடுகளைப்பாதுகாத்துக் கொள்வதற்கு அவ்வவ் நாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் முறியடிப்புப் புலனாய்வுப்பணியிலீடுபடுகின்றன.

முறியடிப்புப்புலனாய்வுப் பணியான்து. பகையுளவாளிகளின் முயற்சிகள், திட்டங்கள் என்பவற்றை முறியடிப்பதாகும். எதிரிப் புலனாய்வு நிறுவனங்களின் உளவாளிகள் தத்தமது தேசங்களுக்குள் உளவாளிகள் உட்புகுந்து குடியிருந்து குழப்பங்களில் ஈடுபடாத வண்ணம் பாதுகாப்பதனையும் குறிக்கும். அவர்களின் அசுமாத்தங்கள் அசைவுகள் என்பவற்றைக்கண்டுபிடிக்க அது தொடர்பான தடயங்கள் கிடைத்தால் அத் துப்பைக்கொண்டு துப்புத்துலங்குதல் ஆகும்.

கிடைத்த துப்பைக் கொண்டு மோப்பம்பிடிக்க வேண்டும். அதற்காக இடைவிடாது பின் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். ஆதாரபூர்வமாகவும் நிரூபிக்கக்கூடிய வகையிலும் தகவல்கள் கிடைத்தால் அவ் ஊடுருவல் வலைப்பின்னலை அழித்து அதனை முறியடித்து விடலாம்.

அதற்காக முறியடிப்புப் புலனாய்வுப்பணியில் ஈடுபட்டிருக்கும் புலனாய்வாளர்கள் சிக்கல் நிறைந்த எதிரிப்புலனாய்வு ஆட்களை இனங்கண்டுபிடிப்பதும் அவர்கள் நிலையெடுக்கும் மறைவிடங்கள் தங்குமிடங்களை மோப்பம் பிடிப்பதும் அவசியம். அதன்மூலமே எதிரிகளின் அத்திட்டங்களையும் நாசவேலைகளையும் முறியடிக்க முடியும். உளவு முறியடிப்பில் விசித்திரமான தந்திரம் இது. ஆனால் சிக்கல் நிறைந்த எதிரியின் ஊடுருவல் வலயம் ஒன்றை கண்டுபிடித்துவிட்டால் அதனை போர் ஓய்வுக்காலத்தில் கண்காணித்துக்கொண்டு இருத்தலும் யுத்தகாலம் ஏற்படும்போது அவ் வலயத்தை அழித்தலுமாகும். இதனால் எதிரிப்புலனாய்வு நிறுவனம் நம்பியிருக்கும் புலனாய்வு வலயம் அழிக்கப்பட்டுவிடும். போர்க்காலத்தில் பாதுகாப்புக் கெடுபிடிகள் கூடிய காலத்தில் புதிய புலனாய்வு வலயம் ஒன்றை உருவாக்குவது எதிரிக்கு இலகுவான காரியமாக இராது. இதனால் எதிரிகளை அடுத்தகட்டத்திற்கு நகரவிடாமல் அவர்களின் திட்டத்தை முறியடிக்க முடியும்.

ஊடுருவும் உளவாளிகளை அல்லது எதிரிகளின் முகவர்கள் அல்லது எதிரியின் தயார்ப்படுத்தப்பட்டவர்களை வலைவீசிப் பிடிப்பதற்கு முதலில் ஊருக்குப்புதியவர்களை அறிய வேண்டும். அவர்களின் தொடர்புகளை பார்க்கவேண்டும். அது ஒருபுறம். மறுமுறையில் உளவாளிகளை மனம்மாற்றி அல்லது விலைக்கு வாங்கி அல்லது விரக்தியுள்ள நிலையிலிருப்பவர்களை இனம்கண்டு பிடித்து எதிரிப்புலனாய்வாளர்கள் தமக்குச் சாதகமாகப்பயன்படுத்தலாம். இதனை சரியாக மோப்பம் பிடித்துப்பார்க்க வேண்டும். அதன் மூலமே எதிரி உளவாளிகளின் ஊடுருவல்களை கண்டறிந்து அதனை தடுத்து நிறுத்தி பகையுளவாளிகளையும் முகவர்களையும் துரோகிகளையும் வேட்டையாட முடியும்.

புலிகளின் உளவுத் துறையின் உள்ளகப்பாதுகாப்புப் பிரிவினர் மக்களுடன் மக்களாக கலந்த கலக்க முயன்ற எதிரியின் ஒட்டுப்படைகளான தேசத் துரோகிகளையும் எதிரிகளின் உளவாளிகளின் ஊடுருவல்களையும் முயற்சிகளை முறியடிக்கவும் தீவிரமா[illegible] செயற்படுகின்றனர்.

முறியடி[illegible] புலனாய்வுப்பணியில் கவனிக்க வேண்டிய அம்சம் தகவல்கள் வெளியேறாத வண்ணம் தடுத்தல் அதி உச்ச இரகசிய பிரதேசங்கள் பற்றிய விபரங்கள், ஆவணங்கள், மற்றும் ஆட்கள் பற்றிய விபரங்கள், இராணுவமையங்கள், பொருளா தார நிலையங்கள் போன்ற வற்றில் ஊடுருவும் உளவாளிக ளின் கவனம் ஈர்க்கப்படாமல் தடுக்கவேண்டும். அவை தொடர்பான தகவல்கள் கசியாமல் பாதுகாக்க வேண்டும். அறிவியல் நுட்பங்களை பொத்திப் பாதுகாத்து வைத்திருத்தல் தகவல் பொக்கிசங்களுக்கு சந்தேக நபர்கள் உட்செல்வதை தடுத்தல் என்பனவற்றின் ஊடாக தகவல்கள் வெளியேறாமல் முறியடிப்புப் புலனாய்வாளர்கள் பாதுகாப்பு வழங்கவேண்டும்.

முறியடிப்பு நடவடிக்கையில் ஊடுருவல்காரர்கள் என சந்தேகம் ஏற்படுபவர்களை பாதுகாப்பான இடங்கள் முக்கிய ஆட்களையும் ஊடுருவலாளர்கள் அண்மிக்காதபடி ஆட்தடுப்புச் செய்தல் வேண்டும். அதற்காக சந்தேகமானவர்களை தேடி இனம் கண்டுபிடிக்க வேண்டும். முறியடிப்பு உளவி[illegible]ல் இன்னும் ஒரு தந்திரம் எதிரி உளவாளிகளை தேடிக் கண்டுபிடித்து அவர்களை இரட்டை முகவர்களாக மாற்றி எடுத்தல் இதில் ஈடுபடுபவர்கள் பூரண புலனாய்வுத்தொழில் நுட்ப அறிவை பெற்றிருக்க வேண்டும். உளவுகலையில் ஊறித்திழைத்தவர்களினாலே இரட்டை முகவர்களை கையாளும் விடயத்தில் வெற்றி பெறமுடியும். இது மிகவும் நுணுக்கமான அணுகு முறையாகும். எதிரி உளவாளிகள் என அறியப்பட்டவர்களுக்கு பொய்யான தகவல்களை ஊட்டுதல் எமது திட்டத்திற்கு எதிர்மாறான திட்டத்தை தெரியப்படுத்தி எதிரியின் பார்வையினை திசை திருப்புதல் மூலமும் எதிரிகளின் திட்டங்களை முறியடிக்கலாம்.

இதேவகையான இன்னுமொரு உத்தி தகவல் திரிப்புக்கள் மூலம் எதிரிகளின் திட்டங்களை முறியடிக்க முடியும் பொய்த் தகவல்களை பரப்புதல் தகவல் திரிப்பாகும். இதனையும் முறியடிப்பு உளவு எனலாம். இரட்டை முகவர்கள் மூலம் பொய்த் தகவல்[illegible]ளை எதிரியிடம் சென்றடையச்செய்யலாம் அல்லச[illegible] பத்திரிகைச் செய்திகள் ஊ[illegible]ாகவும் வானொலி, தொ[illegible]லக்காட்சி ஊடகங்கள் ஊட[illegible]வும் காற்றில் மிதக்க விடப்படும் வதந்திகள் ஊடாகவும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் இட்டுக்காட்டிய உரையாடல்கள் மூலமும் பொய்த் தகவல்களை பரப்பி எதிரிகளை திசை திருப்பலாம். இதன் வெற்றி சரியான புலனாய்வுத் திட்டமிடலிலேயே தங்கியுள்ளது.

எதிர் உளவு நிறுவனங்களுக்கும் உளவாளிகளுக்கும் முகவர்களுக்குமான தொடர்புகளை கண்டறிய தபால் பொதிகளை உடைத்து அவற்றை பரிசோதனை செய்வதன் மூலமாக புலனாய்வு தகவல்கள் கடத்தப்படுகின்றனவா எனக் கண்டறிவதும் முறியடிப்புப் புலனாய்வுப் பணியாகும். இதன் மூலமாகவும் முகவர்களினதும் உளவாளிகளினதும் நகர்வுகளை கண்டுபிடிக்கலாம்.

அதேபோல் வானொலி தொடர்புகளை இடைமறித்து ஒட்டுக்கேட்பதன் ஊடாகவும் எதிரிகளின் சந்தேக மொழிகளை உடைத்தறிவதன் ஊடாகவும் அவர்களின் தகவல்கள் என்ன திட்டங்கள் என்ன என்பவற்றை அறிந்துகொண்டு முறியடிப்புப் பணியில் முன்னகர முடியும்.

சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட போலி அடையாள அட்டைகள் கடவுச் சீட்டுக்கள் பிரயாண அனுமதிப் பத்திரங்கள் வதிவிட அனுமதிப் பத்திரங்களை கண்டறிவதன் ஊடாகவும் எதிரிகளின் ஊடுருவல்களை முறியடிக்க முடியும்.


எதிரிகளின் செய்மதிகளை செயலிழக்கச் செய்வதனூடாகவும் வேவு விமானங்களை சுட்டு வீழ்த்துவதன் மூலமாகவும் எதிரி உளவு நிறுவனங்களின் தகவல் பெறும் வழிவகைகளை தடுத்து நிறுத்த முடியும்.

முறியடிப்பு உளவாளிகளும் ஊடுருவல் தொழில் நுட்பத்தை கற்றறிந்தால் தான் பகையுளவாளிகள் ஊடுருவி வரும் வடிவங்களை கண்டறிந்து முறியடிக்க முடியும். முறியடிப்பு ஊடுருவலும் எதிர் எதிர் செயற்பாடாயினும் உத்திகளும் தந்திரங்களும் நுட்பங்களும் ஒன்றுடன் ஒன்று இறுகப்பிணைந்தவை. இங்கு மாறி மாறி முறியடிப் பதும் மாறி மாறி ஊடுருவுவதும் இடம் பெறும். அதனால் தான் இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஊடுருவலுக்காகவே முறியடிப்பு முறியடிப்புக்காகவே ஊடுருவல் இடம்பெறுகின்றது.

முறியடிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் புலனாய்வாளர்கள் அத்தொழிலில் வெற்றிபெற வேண்டுமானால் அடிமட்ட பாமர மக்களில் இருந்து உயர் வர்க்கம் வரை முகவர் கட்டமைப்பை அடர்த்தியாக உருவாக்கி வைத்திருக்க வேண்டும். முறியடிப்பாளர்கள் உறங்கிவிடக்கூடாது. உறங்கும் பொழுதுதான் அப் பலவீனமான ஓட்டையை எதிரி கண்டு பிடித்து அதனூடாக எதிரி ஊடுருவலை மேற்கொள்வான். ஆகவே முறியடிப்பு உளவாளிகள் எப்பொழுதும் விழிப்புடனே இருக்க வேண்டும்.




# எவரெஸ்ட் உயரம் குறைகிறது



தற்போது உலகில் ஏற்பட்டு வரும் வெப்பநிலை அதிகரிப்பினால் முனைவுப் பகுதிகளில் உள்ள பனிப் பிரதேசங்கள் உருகி கடல்மட்டம் உயரும் அபாயம் இருப்பதாக விஞ் ஞானிகள் முதல் சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் வரை குரல் எழுப்பி வருகின்றனர். இதற்குக் காரணம் நவீன உலகத்தில் அதிகரித்த இயந்திர சாதனங்களின் பாவனை யினால் ஏற்பட்ட காபனீரொட்சைட் வாயுவின் அதிகரிப்பு. இதனால் உலக வெப்பநிலை அதிகரித்து வருகின்றமை உண்மையே.

இதைவிட மேலும் ஓர் கவலை தரும் விடயம் அனைவராலும் பேசப்படுகிறது. அதாவது;

உலகில் மிக உயரமான மலை எவரஸ்ட் என்பது அனைவருக்கும் தெரியும். இதன் உயரம் 1999ஆம் ஆண்டு அளவின்படி 8850 மீற்றர் என அமெரிக்க நவீன உபகரணங்கள் மூலம் அளவிட்டுக் கூறியது. இம் மலை இந்தியாவுக்குச் சொந்தமானது.

எவரஸ்ட் மலைஉச்சி குறைந்து கொண்டு வருவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இனி எவரஸ்ட் மலை உச்சியின் உயரம் நிலையானதாக இருக்கப்போவ தில்லை. காலத்திற் குக்காலம் குறைந்துகொண்டே செல்லப்போகின்றது என அவர்கள் கூறுகின்றனர்.

சீனாவுக்கும் நேபாளத்திற்கும் இடையே அமைந்துள்ள மலை உச்சி 02 மீற்றரால் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்குக் காரணம் மலை உச்சியில் உள்ள பனிப்பா ளங்கள் ஆகும். வெப்பம் காரணமாக உருகி ஓடுவதே அடுத்தமாத மளவில் இதன் உயரத்தை சீன விஞ் ஞானிகள் மீண்டும் அளக்கவுள்ளனர். இன்றைய நவீன உலகத்தில் இயற்கை எம்மைவிட்டுப் பிரிந்து செல் கின்றமை வேதனையானதே.

---

ஐரோப்பா மற்றும் மேற்குலக நாடுகளில் புலம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை உயருவதினால் தென் கிழக்காசிய உணவகங்களின் தேவை யும் அதிகரிக்க வேண்டியுள்ளது. இது சில நேரங்களில் இருவேறு கலா சாரங்களையும் இணைக்கும் பாலங் களாகவும் மாறலாம்.

ஆசிய நாடுகளில் சோறு பிர தான உணவு. ஆனால் மேற்குலக நாட்டவருக்கு கோதுமை பண்டமே பிரதானமாகக் காணப்படுகிறது. பற்பசைகளையே அதிகம் விரும்பி பாவிக்கின்றனர். அத்தோடு கெலொக்ஸ் எனப்படும் தானிய உணவானது மேற்கத்திய நாடுகளில் காலை உணவாக விரும்பி பாவிக் கப்படுகிறது. ஆனால் ஆசியர்களிடம் அவற்றுக்கு சந்தை வாய்ப்பு போதியளவு இல்லை. ஆசியர்களை பொறுத்தவரை மத உணர்வுக ளுக்கும், முதியோர்களின் மதிப்புக் கும், முக்கியத்துவம் கொடுப்பதினால் இவற்றை கருத்தில் கொண்டு மேலும் மெருகூட்ட விரும்பினாலும் இரசாயனம் கலந்த அழகு சாதனங் களை அவ்வளவாக விரும்பு வதில்லை. தமது சருமம் மிருதுவான தாகவும், இறுக்கமாகவும், புற ஊதாக் கதிர்களில் இருந்து பாதுகாக்கக் கூடியதாகவும் இருக்க பொருத்தமான அழகு சாதனங்களை விரும்பு கின்றனர்.

அத்தோடு இங்கிலாந்தில் வெள்ளையர்கள் விரும்பி உண்ணும் உணவாக சீன மற்றும் இந்திய உண

# வித்தியாசமான உலகம் தான்

நாட்டிற்கு நாடு உணவு மற்றும் பழக்க வழக்கங்கள் வேறுபடுகின்றமை தெரிந்ததே. இதனால் உற்பத்தியா ளர்களும் தங்களின் உற்பத்திப் பொருட்களை அவர்களுக்கு ஏற்ற முறையில் உற்பத்திசெய்யவேண்டிய நிலையில் உள்ளனர்.

புலம் பெயர்ந்து வாழ்கின்ற மக்களை பொறுத்தவரை பற்பசை களில் மூலிகைகள் கலக்கப்பட வில்லை என்பதனால் மேற்குலக பற்பசைகளை தவிர்த்து உள்ளூர் மூலிகையிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருட்களை உற்பத்திசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மெக்சிக்கோ நாட்டவரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அத்தோடு ஆசியர்களின் தொகையும் அதிகரிக்கின்றது. இதனால் வெள்ளைக்கும், கறுப் பிற்கும் இடைப்பட்ட சருமத்திற்கான அழகு சாதனப்பொருட்களின் சந்தை வளருகின்றது. தெற்காசியப் பெண் களைப் பொறுத்தவரை தமக்கும் இயற்கையாக கிடைத்த அழகை வுகள் மாறி வருகின்றன. இதனால் லண்டனில் இன்று பல சீன, இந்திய உணவகங்கள் போட்டிபோட்டு வியா பாரம் செய்கின்றன. அதில் வெள்ளை யின வாடிக்கையாளர்களும் நிரம்பி வழிகின்றனர்.

மேற்கத்திய நடைமுறைகள் தெற்காசியாவில் ஆதிக்கம் செலுத்த எமது நடைமுறைகள் மேற்கத்திய நாடுகளில் ஆதிக்கம் செலுத்துகின் றன. உலகம் இன்று வித்தியாசமாக உருண்டோடிக்கொண்டிருக்கிறது.


---

''அலர்ஜியை '' ஏற்படுத்தும் மிகவும் பொதுவான காரணிகள் பின்வருமாறு:-

* வீட்டுத் தூசிக் கறையான்கள்.
* மகரந்தம்.
* வீட்டுச் செல்லப் பிராணிகள்.
* பூஞ்சண வித்திகள்.

### *தேகாப்பியாசம்.*

தேகாப்பியாசத்தின் பின் இழுப்பு, நெஞ்சு இறுக்கம், சுவா சிக்க இயலாமை ஆகியவை மிக வும் பொதுவானவை ஆகும். இது குறிப்பாக சிறுவர்களில் கவனிக் கக் கூடியது. ஏனெனில் அவர்கள் வயது வந்தோரை விட அதிகள வில் ஓடுவதுடன் பெரிதும் அதிக ளவில் அடைப்புக்காற்று வழி களைக் கொண்டிருப் பார்கள். மரதன் ஓட்டம் போன்ற தொடர்ச் சியான ஓட்டத்தின்போது திடீரென விரைவாக ஓடுதல் இழுப்பினை அதிகளவில் தூண் டுகின்றது.



தேகாப்பியாசம் செய்ப வர்கள் அவர்களது சுவாசிப்பு வேகமாகவும், ஆழமாகவும் இடம் பெறும்போது அவர்கள் தமது வாயின் ஊடாகச்சுவாசிக்கின்ற னர். இது காற்று வழிகளின் அல் லது சுவாசப்பை குழாய்களின் நுதியங்களை ஈரப்பதனற்றதும் குளிர்ச்சியானதுமான நிலைக்குக் கொண்டுசெல்கின்றது. இந்த ஈரப்பதனற்ற நிலைக்கு காற்று வழிகள் தாக்கமுறுகின்றன. இத னால் தசை இறுக்கம் இடம் பெறுவதுடன் சில கலங்களில் ('மூலநாட்கலம்' என அழைக்கப் படுகின்றது) இருந்து இரசாய னங்கள் விடுவிக்கப்பட்டு ஆஸ் துமா நோய்க்குறிகளை விளை விக்கின்றன.

வெப்பமான, ஈரப்பதன் சூழலில் தேகாப்பியாசம் செய்தல் அல்லது மூக்கின் ஊடாக சுவாசித்தல் ஆஸ்துமா தாக்கத்தை தவிர்ப்பதற்கு உதவலாம். நீச்சலில் ஈடுபடு வதன் மூலம் ஏற்படும் தேகாப் பியாசத் தூண்டல் ஆஸ்துமா தாக்கத்தை ஏற்படுத்துவது குறை வாகும். இது ஆஸ்துமாவினால் பீடிக்கப்பட்டுள்ளோருக்கு ஒரு பிரசித்தமான தேகாப்பியாசம் ஆகும்.

**உணவும்**
**உணவுச்சேர்ப்புக்களும்.**

சில சந்தர்ப்பங் களில் நிலக் கடலை போன்ற சில உணவுகள் அல்லது அனுசேப இரு சல்பேட்டுக்கள் போன்ற உணவுச் சேர்ப்புக்கள் சிலரில் ஆஸ்துமாத் தாக் கத்தை ஏற்படுத்தலாம். குறிப்பிட்ட உணவொன் றில் தூண்டற்காரணியை நீங்கள் கண்டு பிடித்தால் சாத்தியமான வரையில் அந்த உணவைச் சாப் பிடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். பெருமளவு உண வுகள் நிரல்படுத்தப்பட்ட சேர்ப் புக்களுடன் சுட்டுத்துண்டுகளை கொண்டுள்ளன. இவ்வித சேர்ப் புக்களினதும் அவற்றின் குறி யீட்டு இலக்கங்களினதும் நிரல் ஒன்றுஆஸ்துமா மன்றத்தில் அல் லது சுகாதாரத்திணைக் களத்தில் இருந்து கிடைக்கப்பெறும்.

# ஆஸ்துமாவுடன் வாழ்தல்

**வீட்டுத்தூசிக்கறையான்**

பெருமளவு பதார்த்தங்களால் வீட்டுத்தூசி உருவாக்கப்பட்டுள் ளது. ஆனால் வீட்டுத்தூசி கறையான் என்ற ஒரு பொதுவான அம்சமே ஒரு பாரியதொகையி லான ஆஸ்துமாத்தாக்கங்க ளுக்குப் பொறுப்பாகும். அவுஸ்தி ரேலியாவி லும் நியூஸிலாந்திலும் நடாத்தப் பட்ட ஆய்வுகள் பெருமளவு பகுதிகள் மிகவும் முக்கியமான அலர்ஜியை ஏற்படுத்தும் பதா த்தம் வீட்டுத்தூசி கறையான ஆகும். என சுட்டிக்காட்டியுள்ளன. வீட்டுத் தூசிக் கறையான் தரைவிரிப்புக்கள் கட்டடங்கள், மென்மையான தளபாடங்கள், உடுப்புக்கள் ஆகிய வற்றில் வாழ்வதுடன் வெப்பமா னதும் ஈரப்பதன் உள்ளதுமான இடங்களில் பெரிதும் காணப்படு கின்றன. சிட்னியில் ஒரு சதுர மீற்றர் தரைவிரிப்பில் 2 லட் சத்திற்கு மேற்பட்ட வீட்டுத் தூசிக் கறையான்கள் இருக்கலாம் என தரவுகள் காட்டுகின்றன.

(தொடரும்)

---




# பெண்களைத் தொல்லைபடுத்தும் வயிற்றுவலி

இளம் பெண்களை மாதம் மாதம் வருத்தி அவர்களது அன்றாட நடைமுறைகளை பெரிதும் பாதிக்கச் செய்வதுதான் இந்த மாதவிலக்கு நேரத்தில் ஏற்படுகின்ற வயிற்றுவலி.

இது அவர்கள் பருவம் அடை யும் போதோ அல்லது அதை தொட ரும் ஆரம்ப மாதங்களிலோ இருப் பதில்லை. பெரும்பாலும் பருவமடைந்து ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்தின் பின்னரே ஏற்படுகின்றது. ஒரு சில வருடங் களின் பின் இவ்வயிற்றுவலி தானாகக் குறைந்து மறைந்து விடு கின்றது. சிலருக்கு மணமாகி குழந் தைகள் பெறும்வரை நீடிக்கலாம். மணமாகிக் குழந்தைகள் பெறாத சிலரில் முப்பது வயதிற்குப் பின்னரும் ஏற்படலாம்.

மாதவிலக்கு ஏற்படுவதற்கு ஒரு சில மணித்தியாலத்திற்கு முன்னரே பெரும்பாலும் ஆரம்பித்துவிடுகிறது. இது பொதுவாக 12முதல் 24 மணித்தி யாலத்திற்கு மேல் நீடிப்பதில்லை. அடிவயிற்றில் நடுப்பகுதியில் ஏற்படும் இவ் வலியுடன் நாரி உளைவும் சில ருக்கு ஏற்படலாம். அத்தோடு வாந்தி, தலையிடி, கோபம், மயக்கம், வயிற் றோட்டம் போன்றனவும் ஏற்பட வாய்ப்புண்டு.

மாதவிலக்கு நேரத்தில் ஏற்படும் இவ் அசௌகரியங்கள் பெரும்பாலும் எல்லாப் பெண்க ளையும் தாக்கக்கூடுமாயின் அதிக மானவர்களுக்கு அது தாங்கிக் கொள்ளக்கூடியதாகவே காணப்படும். அவர்களது வழமையான வேலை களை இடையூறு செய்யாத அளவில் வலிகுறைவாகவே இருக்கும். ஆனால் மிகக் குறைவானவர் களுக்கே (சுமார்5%) இதுமிகக் கடுமையானதாகக் காணப்படும்.

சிலநேரம் இவர்கள் வைத்திய உதவியை நாடவேண்டிய அளவிலும் இருக்கும். பல பெற்றோர்கள் இப்பிரச்சினை உள்ள தமது பிள்ளைகளை பாடசா லைக்கோ, அலுவலகத்திற்கோ செல்ல வேண்டாம் என்றும் சைக்கிள் ஓட வேண்டாம் என்றும் தடுப்பதோடு பலவித உணவுக் கட்டுப்பாடுக களையும் விதிக்கின்றனர். இவை தவறானவை. நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்காதீர்கள். வழமைபோல் குளிக் கவும், விரும்பியதை சாப்பிடவும், போதியளவு நீர் அருந்தவும், வேலை களை செய்யவும் அனுமதியுங்கள்.

வயிற்றுவலி அதிகமாக இருந் தால் இவ்விரண்டு பரசிட்டமோல் குளிசைகளை ஆறு மணி நேரத் திற்கு ஒரு தடவை கொடுக்கலாம். பொதுவாக ஒரு நாளைக்கு அல்லது இரண்டு நாட்களுக்கே கொடுக்க வேண்டி ஏற்படலாம். பனடோல், செட் டமோர் ஆகிய பெயர்களில் பரசிட் டமோல் கடைகளில் கிடைக்கின் றது. இதனை ஒரு வீட்டு வைத்திய மாகச் செய்யலாம். எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

எனவே இது தொடர்பாக உள்ள மாற்றுக்கருத்துகளை கை விட வேண்டும். இது ஒரு பரம்பரை நோயோ, அல்லது பாலுறுப் பாகங்களால் ஏற்படுவதோ அல்ல. ஒரு சில நடுத்தர வயதுப் பெண்களில் ஒவ் வாமை அல்லது கட்டிகள் காரணமாகவும் வயிற்றுவலி ஏற்படலாம். இதனை நுணுக்கமான பரிசோதனை மூலம் கண்டறிந்து சிகிச்சையும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கருத்தடை மாத்திரைகள் உட்கொள்பவர்களுக்கு வயிற்று வலி ஏற்படுவது இல்லை. ஏனெ னில் இவர்களுக்கு பெண் கரு முட்டை உற்பத்தியாவது தடை செய்யப்படுகின்றது. மாதம் மாதம் கருமுட்டை உற்பத்தியாகும் போதே வயிற்றுவலி ஏற்படுகிறது. இதைவிட இதில் வேறுஒரு பிரச்சி னையும் இல்லை. எனவே மாத விலக்கு வயிற்றுவலி தொடர்பாக நீங்கள் பயப்படவேண்டியது இல்லை.



# சந்தனமதி: மீண்டும்... மீண்டும் களமாட விரும்பியவன்

சட சடத்து ஓய்ந்து போன துப்பாக்கிச் சத்தங்களும் எங்களை மறந்துவிட வேண்டாமென ஞாபகப்படுத்திடும் எறிகணைகளின் வெடிப் புக்களும் ஒருபுறம் எதிரியின் அக்கிரமத்தால் அழிந்து போன தமிழரின் ஊர்களின் சிதைவுகள் ஒருபுறமிருக்க, வானை வட்டமிட்டவாறே இருக்கும் எதிரியின் இயந்திரக் கழுகுகள் இரை தேடித் திரியும் நேரமதில் தான் அந்தப் புனிதமான போராளியின் நிலையை அறிய அங்கும் இங்குமாகத் தேடித் திரிந்தோம். பல மணி நேரமாகத் தேடியும் எந்தவிதப் பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை. என்றாலும் சோர்ந்து போகாமல் தேடலைத் தொடர்ந்தோம்.

யுத்தகளத்தில் எங்களின் தேடல், வித்தியாசமாக இருந்தது. காரணம் விழுப்புண் அடைந்திருந்த நிலையிலும் எதிரியோடு சலையாது போராடியவன். தனது கையிலிருந்த சுடுகருவியின் ரவைகள் அனைத்தும் முடியும் வரையிலும் எதிரியோடு சண்டை செய்து எனது சாவு அர்த்த முள்ளதாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பின் களம் திரும்ப முயற்சிக்கிறான்.

அவனது திரும்பல் தனது விழுப்புண் மாறி தொடர்ந்து களம் செல்ல வேண்டும் என்பதேயாகும். எனவேதான் தன்னால் இயன்றளவு அவ்விடத்தி லிருந்து வெளியில் செல்ல முற்பட்டான். அவனது கைகளில் துப்பாக்கி ரவைகளும், கைக்குண்டுகளும் இருந்திருந்தால் நிச்சயமாக எதிரிகள் பலரை வீழ்த்தியேயிருப்பான் என்பதை உறுதியாகச் சொல்லமுடியும்.

ஏனெனில் சண்டைக்கென வெளிக்கிடும் வேளைகளிலெல்லாம் தன் சக்திக்கு மிஞ்சிய அளவு வெடி மருந்துகளை கொண்டுவரும் பழக்கம் உள்ளவன். அவனொரு வெடிமருந்து பிரியன் . என்றே சொல்லமுடியும். எனவேதான் இவன் எப்படியும் தப்பி வந்துவிடுவான் என்று பல மணி நேரம் நம்பி இருந்து விட்டு இறுதியில் தேடலில் ஈடுபட்டோம். நிச்சயம் எங்கோ எங்களின் வெடிமருந்துப் பிரியன் மாட்டிக்கொண்டான் என்றே உறுதியாக நம்பினோம்.

ஓயாத அலைகள்- 03 இன் தொடர்ச்சியாக அரியாலை நாவற்குழி ஊடாக எமது சண்டை தொடர்ந்தது. சண்டை தொடங்கிய நேரம் இருந்து இறுக்கமான மிகவும் இடர் நிறைந்த களம் விரிந்தது. இந்தக்களத்தில் மிகவும் உற்சாகமுடன் தனித்துணிவுடன் போராடி எதிரி பலரை வீழ்த்தி யவன்தான் மாவீரர் 2ஆம் லெப்டினன் சந்தனமதி (அழகன்-ராமச்சந்திரன்)

ஓயாத அலைகள்- 03 இன் தொடர் சண்டைக் களங்கள் ஒட்டு சுட்டானில் தொடங்கிய சண்டை எதிரி யின் பெரும்பாலான அழிவுகளுட்ன் எங்களின் தாயக நிலங்களை மீட்ட வாறே தொடர்ந்த அலையாக அடித்துக்கொண்டிருந்தது. ஓயாது அடித்த அந்த அலைகளின் சமரில்தான் 2ஆம் லெப் சந்தனமதியும், தொடர்ந்து ஓய்வு உறக்கமின்றி போராடினான்.

ஓயாத அலைகள் 03 இன் ஒவ்வொரு சண்டைகளிலும் சந்தனமதி தனக்கேயுரிய வீரத்துடன் செயற்பட்டான். இவனது வீராவேசமான சண்டையின் உச்சமே நாவற்குழியில் நல்ல சாதனையாக மாறியது. 2ஆம் லெப் சந்தனமதி தனது அணியில் பொறுப்பதிகாரியின் சொல் கேட்டு எதிரியோடு சண்டை செய்து கொண்டிருந்தான். சண்டை தொடங்குவதற்கு முன் நாம் எல்லோரும் கிழக்கரியாலையில் சண் டைக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டிருந்தவேளை அனைவருக்குமே வெடிபொருட்கள் பிரித்துத் தரப்பட்டன. வெடிமருந்துகள் எல்லோருக்கும் சமமாகவே பகிரப்பட்டன. ஆனால், இவன் மாத்திரம் தளபதி வீரமணியிடம் கேட்டு அழுது புலம்பினான். தளபதி எவ்வளவு சொல்லியும் அவன் கேட்கவில்லை. எதிரியிடம் இருந்து எடுத்திருந்த ரவைக் கூட்டு அங்கியை வைத்துக்கொண்டு அதற்கு அளவாக ரவைகள் கேட்டு வாங்கிவிட்டான். மொத்தமாக 400 ரவைகளும் கைக்குண்டுகள்8 உம் பெற்றுக்கொண்ட பிறகே அவனது முகத்தில் சிரிப்பு வந்தது.

இந்தச் சண்டைக்கு மாத்திரமல்ல பொதுவாக அவன் பங்கு கொண்ட சண்டைகள் அனைத்திற்கும் இப்படியாகவே இவனது செயல் தொடர்ந்தது.

10.05.2000 இரவு காரிருளுக்குள் நாவற்குழியை அண்மித்துள்ள பெரியபரப்புள்ள உப்பு வெட் டையில் சண்டை அணிகள் தவண்டும், ஊர்ந்தும் முன்னேறிக் கொண்டிருந்தன. தடையணிக்கு அடுத்ததாக சந்தனமதியும் முன்னேறினான். சாதாரண படையப் பொருட்களுடன் நகர்வது எமக்குக் கடினமாக இருந்தது. ஆனால், சந்தனமதியோ கூடுதலான சுமையுடன் சிறிதும் களைப்பில்லாது நகர்ந்துகொண்டிருந்தான். இதெல்லாம் அவனுக்கு சாதாரண விடயமேயாகும்.

காவலரணிலும், நகர்வு களின் போதும், சண்டையின் போதும், சந்தனமதி இராணுவச்சீருடையுடனும், சப்பாத்துடனும், படையப் பொருட்களுடனும் நகர்ந்து கொண்டேயிருப்பான். அதே போலவே இன்னும் வரிச் சீருடையுடனும், சப்பாத்துடனும் நகர்ந்து கொண்டிருந்தமை அவனது வீரத்தோற்றத்தை வெளிப்படுத்தியது.

இவனுக்கு ஏற்கனவே பன்றி என்ற பட்டப்பெயரும் உண்டு. இந்த இடத்தில் அது அவனுக்கு சரியாகவே இருந்தது. காரணம் நகர்வின் இடைவெளியில் பன்றியைப்போலவே நகர்ந்தான்.

எங்களது நகர்வு கிட்டத்தட்ட 21/2 மணி நேரத்தை விழுங்கிக் கொண்டது. இப்போது எதிரியை நெருங்கிவிட்ட எமக்கு சண்டைகளின கட்டளையும் கிடைத்தது. இரவு நேரம் 11.45 சண்டை தொடங்கிவிட்டது. எல்லா அணிகளும் அவரவருக்கென ஒதுக்கப்பட்டவேலைகளை செய்தவாறே கடினம் நிறைந்த

**க.மிரேசு**

களத்தில் சமராடத் தொடங்கின. அதேபோல் சந்தனமதியும் சண்டைக்கான கட்டளையுடன் தனது அணியுடன் சண்டை செய்தவாறு முன்னேறத் தொடங்கினான். தடைக் கம்பிகளில் போராளிகள் சிக்கிவிடாதவாறு கவனம் கவனம் என சொல்லியவாறு துப்பாக்கியுடன் சண்டை செய்து ஆக்ரோசத்துடன் முன்னேறத் தொடங்கினான். எமது அணி தளபதி நகு லனுடன் கடற்கரை பக்கமாக முன்னேறியது. இன்னொன்று தளபதி வீரமணி தலைமையில் முன்னேறத் தொடங்கியது. இவ் அணியிலேயே சந்தனமதியும் முன்னேறத் தொடங்கினான். எதிரி ஆக்ரோசமாக எதிர்த்து நின்றான். என்றாலும் புலிவீரர்களின் முன்னேற்றத்தை அவனால் தடுக்க முடியவில்லை.

அரியாலை ஊடாக சந்தனமதியும் முன்னேறுகிறான். எதிரியின் முகாம் ஒன்றை மறித்துத் தாக்கும் போது அந்த கடுமையான சண்டையில் 2ஆம் லெப் சந்தனமதியும் காயமடைகிறான். சக போராளி ஒருவன் சந்தனமதிக்குக் காயம் என அறிவிக்கிறான். அவனது குரலோடு சேர்ந்து சந்தன மதியின் குரலும் ஒலிக்கிறது.

டேய் அறிவிக்காதே... என தடுக்கிறான். காரணம் தொடர்ந்து சண்டைபிடிக்க வேண்டும் என்ற அவா. அதனால் தொடர்ந்து அவ்விடத் திலிருந்து சண்டை பிடித்த அந்த இடத்தின் சூழ்நிலையை மாற்றுகிறான். தன்னிடமிருந்த வெடிமருந்து தீர்ந்துபோகும் வரை சண்டை செய்தவன் இறுதியில் எமது கட்டளைக்கு ஏற்ப பின் தளம் வரும் போதுஎதிரியின் எறிகணையில் மீண்டும் காயமடைந்து வரமுடியாத நிலையில் இருக்கும்போது வீரமரணத்தை தழுவுகிறான்.

இவன் வீரச்சாவடைந்திருந்த பள்ளமான அந்த இடத்தைப் போய் பார்த்தபோது முதல் காயமடைந்து வரும் போது எதிரியிடமிருந்து எடுத்த ரவை, குண்டு, துப்பாக்கி ஒன்றையும் பக்கத்தில் வைத்து விட்டு தனது துப்பாக்கியை பிடித்து சாய்ந்தவாறே வீரச்சாவடைந் திருந்தான். இந்த வெடி பொருட்கள் முன்நோக்கி நகர்ந்திருந்தால் எதிரி பலபேர் மடிந்திருப்பார்கள்.

2 ஆம் லெப்டினன்ட் சந்தனமதி இத்தாவில் சமரிலும் ஓயாத அலைகள்-03 இன் தொடர்ச்சியாக நடந்த எல்லாச் சண்டைகளிலும் திற மையுடனும் வீரத்துடனும் சண்டை செய்து எதிரிக்கு சிம்ம சொற்பனமாக இருந்தவன். இவனது வீரச்சாவு எத்தனையோ அர்த்தங்களை எமக்குக் கற்பித்தது.






# ஊர்வாய்

தணிகாசலத்தார் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்ந்திருந்தார். மகனின் திருமணத்திற்கான தடபுடலான வேலைகளில் ஈடுபடுவதில் அவருக்கு ஒரு மகிழ்ச்சி, ஆனநதம். அவரது மனைவி, அருகில் வந்து மெதுவாக அடக்கமாக என்னப்பா காட் குடுக்கிற வேலையை முடிக்காமல் கடசிநாள் மட்டும் வைச்சிருக்கப்போறியளே... கூறவே "ஓம் ஓம் அதுக்குத்தான் வெளிக்கிடப்போறன்" என்று கூறியவாறு யார் யாருக்குக் கொடுக்க வேண்டும். என்று இரவிரவாக யோசித்து எழுதிய பட்டியலை எடுத்துக் கொண்டார். பட்டியலில் இல்லாத பெயர். ஆனால் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று நன்றியுடன் மனம் நினைக்கும் பெயர்தான் டொக்டர் கோபி.

அவரைச் சந்திப்பதானால் அதிகாலையில் சென்றால்தான் முடியும் என நினைத்துக் கொண்ட தணிகாசலத்தார் முதலில் அவருடைய வீட்டை நோக்கி துவிச்சக்கர வண்டியை செலுத்தினார். கையில் ஒரு கட்டு திருமண அழைப்பிதழ்களையும் எடுத்துக் கொண்டார்.

டொக்டர் கோபி தினமும் செய்யும் யோகாசனப் பயிற்சியை முடித்துக் கொண்டு வைத்திய சாலைக்குப் புறப்படுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டார். இவர் ஒரு உள நல மருத்துவர். இன்றைய போர்ச்சூழல் காரணமாகவும் பொருளாதாரத்தடை, வேலையில்லாப் பிரச்சினை, உறவுகளைப் பலி கொடுத்தல், இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் ஏராளமானோர் உள நலம் பாதிக்கப்பட்டு டொக்டர் கோபி யிடம் சிகிச்சை பெற்று பூரண குணம் அடைந்திருக்கிறார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது உறவினருக்கும் டொக்டர் கோபி தெய்வமாகவே மனங்களில் இடம் பிடித்துள்ளார்.

வாசலில் அழைப்பு மணி அடித்ததும் வெளியே வந்தார் டொக்டர் கோபி "ஆ... தணிகாசலம் அண்ணையே வாங்கோ... வாசலில் நின்ற தணிகாசலத்தாரை வரவேற்றார். மிகவும் பணிவாகவும் மரியாதையுடனும் நன்றியுணர்வுடனும் உள்ளே வந்தார் தணிகாசலத்தார்" "எப்படி இருக்கிறார் மகன்" டொக்டர் கோபி கதையைத் தொடக்கினார். "அவர் இப்ப ஒரு பிரச்சினையும் இல்லை. நல்லா வேலை செய்யிறார். மாதம் ஒன்பதாயிரம் ரூபா சம்பளம் எடுக்கிறார். நல்ல சந்தோசமாய் இருக்கிறார்" என்று கூறிய தணிகாசலத்தார் தொடர்ந்து "அவருக்குத்தான் கலியாணமும் முற்றாய் போச்சு. வாற இருபத்திரெண்டாம் திகதி நாள் வச்சிருக்கு அதுதான் உங்களுக்கு அழைப்புக் குடுத்திட்டுப் போக வந்தனான்." நன்றி கலந்த பணிவுடன் ஒரு அழைப்பிதழை எடுத்து நீட்டினார். "ஆ... பேந்தென்ன..." இது டொக்டர் கோபி அவர்கள் மகிழ்ச்சியுடன் கூறியது. தனது நோயாளி ஒருவன் பூரண சுகமடைந்து இயல்பு வாழ்க்கையில் ஈடுபடுகிறான் என்றால் அவருக்கு மகிழ்ச்சிவராதா? ஆம் தணிகாசலத்தாரின் மகன் எவ்வாறு ஏற்பட்டது என்று கூற முடியாத படி அவனது இருபத்தி இரண்டாவது வயதில் உள நலம் பாதிக்கப்பட்டு மன நோயாளி ஆனான். தணிகாசலத்தாரும் பெரும் வேதனைப்பட்டு கோயில் குளம் என்று அலைந்து திரிந்து இறுதியில் இரகசியமாக டொக்டர் கோபியின் தொடர்பு ஏற்பட்டது. டொக்டர் கோபி தணிகாசலத்தாரின் மகனின் நோயை மிகவும் அவதானமாகக் கையாண்டு வைத்தியம் பார்த்து இன்று ஆரோக்கியமான மனிதனாக மாற்றியுள்ளார் எனில் அவருக்கு சந்தோசம் வராதா.


பணிவாக அழைப்பிதழை நீட்டிய தணிகாசலத்தாரின் கண்களின் ஓரமாக நீர் வடிவதை கண்ட டொக்டர் கோபி அது ஆனந்தக் கண்ணீர் என்பதை உணர்ந்து கொண்டு அழைப்பிதழைப் பெற்றுக்கொண்டார். அழைப்பிதழை கொடுத்த தணிகாசலத்தார் ஏதோ சொல்ல எத்தணிப்பதும் தயங்குவதுமாய் காணப்பட்டார். "ஐயா....!" "ஐயா... என்னண்டால்..." இவ்வாறு சொல்லுவதும் மெல்லுவதுமாய் தயங்க டொக்டர் கோபி அவர்கள் இடைமறித்து.

"என்ன ஐயா தயவு செய்து நீங்க இந்தத் திருமண வீட்டிற்கு வரக்கூடாது" இது தானே சொல்ல வாறீங்க. தணிகாசலத்தார் திகைத்து விட்டார். தான் சொல்ல நினைத்ததை அப்படியே அவர் சொல்லிவிட்டார். டொக்டர் கோபி தொடர்ந்து "என்னட்டை இப்படித்தான் பல இளைஞர்கள் யுவதிகள் வருவார்கள் சிகிச்சை பெற்று குணமடைந்தபின் திருமண அழைப்பிதழ் கொண்டு வந்து தந்து விட்டு தயவு செய்து நீங்க திருமண வீட்டிற்கு வரக்கூடாது. என்று சொல்வார்கள்" "நான் இந்த திருமண வீட்டிற்கு வந்தால் சமூகம் சந்தேகக் கண் கொண்டு பார்த்து அவர்களது திருமணத்தையோ திருமணத்தின் பின் அவர்களது வாழ்க்கையையோ குழப்பிவிடும் இந்த அறியாமைமிக்க சமூகம் திருந்தும் மட்டும் நான் திருமணத்திற்கு வர மாட்டேன்" பெரிய பிரசங்கமே செய்து முடித்தார் டொக்டர் கோபி.

இந்த இளைய உருவத்துக்குள் இவ்வளவு பரந்த அறிவா தணிகாசலத்தார் பிரமித்துப் போனார். "ஐயா நீங்க செய்த உதவியை என்றென்றும் மறக்கமாட்டன்" என்று கூறிய தணிகாசலத்தைப் பார்த்து டொக்டர் கோபி "ஐயா நீங்க உதவி செய்ய வேண்டுமென்று நினைத்தா இதைச் செய்யுங்கோ" என்று கூற எதை என்றவாறு முகத்தை குறியீடாகப் பிடித்துக்கொண்டு நின்றார் தணிகாசலத்தார்.

ஐயா இன்றைக்கு சமூகத்துக்க பலபேர் உளநலப் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவர்கள் ஆரம்பத்தில உளநல மருத்துவரை சந்திச்சு வைத்தியம் பெறத்தயங்குகிறார்கள் காரணம் சமூகம் உள நோயை ஒரு நிரந்தர நோயாகக் கருதுகின்றது. அது மாற்ற முடியாத நோய் என்று நினைக்கின்றார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை ஏளனமாகவும் சமூகத்தில் இருந்து தனித்துப் பார்க்கின்றது. இதனால் பல குடும்பங்கள் உளநலம் பாதிக்கப்பட்டவர்களை ஆரம்பத்தில் உளநல மருத்துவரிடம் சென்று வைத்தியம் பெறத்தயங்குகினம். இதை நீங்கள் மாற்றோனும் இப்படி யாராவது இருந்தால் அவர்களை உடனடியாகச்சிகிச்சை பெற வழிகாட்டோணும்" என்று தொடர்ச்சியாகப் பேசிய டொக்டர் கோபி அது மட்டுமல்ல மன நோய் என்பது நிரந்தர நோய் அல்ல அது இலகுவில் மாற்றக்கூடியது என்ற எண்ணத்தையும் சமூகத்தில பரப்ப வேணும்" கூறிமுடித்தார் டொக்டர் கோபி. எல்லாவற்றிற்கும் தலையசைத்த தணிகாசலத்தார். "நிச்சயமாகச் செய்வேன்" என்று உறுதியாகக் கூறி விடைபெற்றுச் சென்றார்.

**சாரங்கன்**



தணிகாசலத்தார் தனது மகனின் திருமணம் இனிதே நிறைவேறிய திருப்தியில் பூரித்துக் காணப்பட்டார். தனது மகனின் வாழ்க்கை சூனியமாகப் போய்விடுமோ என்று ஏங்கிய காலத்தில் கடவுளாக வந்து வைத்தியம் பார்த்த டொக்டர் கோபி அவர்களை நன்றியுணர்வோடு நினைத்துக்கொண்டு அவர் கூறிய வேலையை செய்யவேண்டும் என்றும் தீர்மானித்தார்.

மேகலா அழகிய வதனம் பார்த்தோரை கவர்ந்திழுக்கும் வசிகரம். உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் வேளையில் தான் அந்தக் கொடூரம் நடந்தது. எங்கிருந்தோ வந்த கபிர் விமானம் ஒன்று போட்ட குண்டில் அவளது ஒரே அண்ணன் சின்னாபின்னமாகிச் சிதறியதும் தந்தையார் காலையிழந்ததும் கண் முன்னே நடந்து முடிந்தது. அன்றிலிருந்து அவளால் தனது இயல்பான நிலைக்குத் திரும்பமுடியவில்லை. எந்த வேலையை செய்யும்போதும் தனது இரத்த வெள்ளத்தில கிடந்த அண்ணனின் நினைவு வந்ததும் அவ்வேலையை அவளால் தொடர்ந்து செய்ய முடிவதில்லை. அவளால் தொடர்ந்து படிக்கமுடிவதில்லை. பாடசாலை செல்ல முடியாமல் போனது. ஊரில் உள்ளோர் எல்லோரும் தன்னையே பார்ப்பது போல் தன்னைப் பற்றியே கதைப்பது போலவும் உணர்ந்து கொள்வாள். இதனால் அவர்களை வெறுத்தாள். அவர்களை காணாது இயன்றவரை ஒதுங்கிக் கொண்டாள். இந்நிலை தொடர்ந்து கொண்டிருக்கும் போது தான் தணிகாசலத்தார் மேகலாவின் தந்தையை சந்தித்தார். "நீங்க ஒன்றுக்கும் யோசிக்காதேங்கோ கோபி டொக்டர் என்று ஓராள் இருக்கிறார் அவரிட்ட கொண்டேக் காட்டுவம்" என்ர மகனுக்கும் இப்பிடித்தான் இருந்து அவரிட்ட காட்டி நல்ல சுகம் வந்தது" ஆலோசனை கூறினார் தணிகாசலத்தார். மேகலாவின் தந்தையார் குறுக்கிட்டு தயக்கத்துடன் "பொம்பிளைப் பிள்ளையை இப்பிடி டொக்டரிட்ட கொண்டேக் காட்டினால் சமூகம் பிறகு ....." என இழுத்தார். "அதற்கொண்டும் யோசிக்காதேங்கோ எல்லாம் இரகசியமாகச் செய்யலாம்" ஒருவாறு சம்மதித்தார் மேகலாவின் தந்தை.

மேகலாவை டொக்டர் கோபியிடம் அழைத்துவந்தார், தணிகாசலத்தார். மேகலாவுக்கு நடந்ததை எல்லாம் விலா வாரியாக எடுத்துக் கூறினார். டொக்டர் கோபி மேகலாவுடன் அன்பாகக் கதைக்கத் தொடங்கினார். மேகலாவும் தன்னை மறந்து கதைத்துக்கொண்டிருந்தாள். ஒரு மணித்தியாலமாக இருவரும் உரையாடினார்கள். டொக்டர் கோபி தணிகாசலத்தாரை அழைத்து தினமும் தன்னிடம் மேகலாவை அழைத்து வருமாறு கூறி சில மருந்து மாத்திரைகளை கொடுத்தனுப்பினார். தணிகாசலத்தாரும் 'ஓம்' என தலையசைத்துச் சென்றார். தினமும் மேகலாவை அழைத்து வருவதும் டொக்டர் கோபியுடன் பல மணிநேரம் உரையாடுவதும் வழமையானதாக மாறியது. அவரது அன்பான உரையாடலும் மருந்துகளும் மேகலாவின் உளநோய்க்கு தீர்வைக் கொடுத்தன. இவ்வாறு சில மாதங்கள் தொடர்ச்சியான சிகிச்சை மூலம் மேகலா மனநோயில் இருந்து முற்றாக விடுபட்டாள். மிகவும் ஆரோக்கியமாக தனது வேலைகளையும் கவனித்துக் கொண்டிருந்தாள். சமூகத்துடனும் நல்லுறவைப் பேணி வளர்த்தாள். மகிழ்ச்சி அடைந்த தந்தை "அவளுக்கு ஒரு திருமணம் செய்துவைக்கவேண்டும்" என்ற எண்ணத்தை தணிகாசலத்தாருடன் கூறினார். "நானும் நினைச்சனான் பாப்பம் நானும் முயற்சி செய்கிறன் நீங்களும் பாருங்கோ யாரும் சரி வந்தால் செய்வம்" தனது மகள் மேகலாவிற்கு பொருத்தமென தனது மனதுக்குள் நினைத்து வைத்திருந்த மாப்பிளையை தணிகாசலத்தாருக்கு அறிமுகம் செய்து வைத்தார். தணிகாசலத்தார் இப்போது புறோக்கர் வேலை தொடங்கிவிட்டார். மாப்பிளையின் பெயர் "மாதுளன்" ஒரு பலசரக்குக் கடையில் வேலை செய்யிறவனாம். இரு வீட்டுக்கும் இடையில் பல தடவைகள் தணிகாசலத்தாரின் சயிக்கிள் மாறிமாறி ஓடியிருக்கும். எப்படியோ இரு வீட்டாருக்கும் இணக்கம் ஏற்படுத்திய பெருமையில் தணிகாசலத்தார் செயற்பட்டார்.

வைகாசி மாதம் பதின்நான்காம் நாள் திருமணம் நிச்சயிக்கப் பட்டுவிட்டது. அழைப்பிதழ்கள் கொடுக்கும் வேலைகள் முதல் திருமணம் இரு வீட்டிலும் களைகட்டியது. உறவினர்கள் எல்லாம் ஒவ்வொரு திக்கிலும் இருந்து இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே வரத் தொடங்கி விட்டார்கள். மேகலாவும் சிறிது காலத்திற்கு முந்திய தனது நிலையை நினைத்து வேதனைப்பட்டு இவ்வாறு மாற்றத்தை தந்ததற்கு இறைவனிற்கு நன்றி கூறினாள். திருமணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் மாத்திரமே உள்ளன. தணிகாசலத்தாரிற்கு அந்தப் பேர் இடி வந்து விழுந்தது. மாப்பிளை வீட்டுக்காரர் ஒருவர் வந்து தணிகாசலத்தாரிடம் "இந்தச் சம்மந்தத்தை இத்துடன் நிறுத்திக் கொள்ளுவம். ஏன் எண்டால் பொம்பிளை மன நோயாளியாய் முந்தி இருந்திருக்கிறா. மன நோய் வைத்தியரிடம் சென்று வைத்தியம் பாத்திருக்கிறா. இதுக்குப் பிறகும் எங்கட பிள்ளையை ஒரு... மன நோயாளிக்குக் கட்டிக் குடுக்கச் சம்மதம் இல்லை" தணிகாசலத்தார் இடைமறித்து முந்திக் கொஞ்சக் காலம் அப்படி இருந்ததுதான் ஆனால் இப்ப வைத்தியம் செய்து பூரணமாய் குணமடைஞ்சிட்டுது இனி அப்படி வராது எண்டு டொக்டர் சொன்னதுக்குப் பிறகு தான் நாங்கள் இந்தச் சம்மந்தத்துக்கு சம்மதிச்சநாங்கள். இவ்வளவு ஏற்பாடும் நடந்தாப் பிறகு நீங்கள் முடியாது என்று சொன்னால் அவளின்ரை வாழ்க்கை...?" என்று கெஞ்சினார் தணிகாசலத்தார். "எங்கட முடிவில் மாற்றம் இல்லை" கூறி விட்டுப்போய்விட்டார் மாப்பிளை வீட்டுக்காரர். தணிகாசலத்தார் இடிந்து போனார் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் டொக்டர் கோபியிடம் சென்றார். நடந்ததை விலாவாரியாகக் கூறி அழுதார். அவரது கண்களில் இருந்து கன்னத்தில் கோடு கிழித்தது கண்ணீர்.

டொக்டர் கோபி உடனே புறப்பட்டு மாப்பிளை வீட்டாரிடம் தணிகாசலத்தாரையும் அழைத்துக் கொண்டு சென்றார். "மேகலாவிற்கு மன நோய் ஏற்பட்டது உண்மை. ஆனால் அது இப்ப பூரணமாகக் குணமாயிற்று மீண்டும் வருவதற்கு சாத்தியம் இல்லை. இதை நீங்கள் நம்பி இந்தத் திருமணத்தை நடத்த வேண்டும்." டொக்டர் கோபி விளக்கினார் என்னதான் கூறியும் மணமகன் வீட்டார் சம்மதிப்பதாக இல்லை. இறுதியாக "நீங்கள் வேறு யாருக்கும் பார்த்து மேகலாவை கட்டி வையுங்கோ. ஆனால் நாங்கள் சம்மதிக்க மாட்டம்" கூறிமுடித்தனர். டொக்டர் கோபியும் மனம் சோர்ந்து திரும்பினார். இந்தச் சமூகத்தின் அறியாமையை மாற்றவே முடியாதா என்று ஏங்கினார்.

இருவரும் திரும்பிக் கொண்டிருக்கும்போது சற்று நேரம் யோசித்து விட்டு தணிகாசலத்தாரைப் பார்த்து "அண்ணை மேகலாவை நான் திருமணம் செய்யிறன்" அந்த அதிர்ச்சி முடிவை அறிவித்தார். தணிகாசலத்தாரின் கண்கள் குளமாகி மகிழ்ச்சியாலும்,அதிர்ச்சியாலும் வாயடைத்துப் போனார். அறிவின் சிகரமும், ஆளுமையின் உச்சமும், அழகும் இளமையும் நிறைந்த ஒரு வைத்தியர் தனது நோயாளியையே திருமணம் செய்வதா? எண்ண அலைகள் தணிகாசலத்தாரை உறைய வைத்தன.

திட்டமிட்டபடி ஊர்கூடி ஒன்றாக வாழ்த்த டொக்டர் கோபியும் மேகலாவும் இல்லற வாழ்க்கையில் இணைந்தனர். தினமும் மாலையில் டொக்டர் கோபியும் மேகலாவும் தமது இரு குழந்தைகளுடன் மோட்டார் சயிக்கிளில் சென்று கடற்கரையில் உல்லாசமாகக் காற்றுவாங்கி வருவார்கள். பலர் பொறாமைப்படும் அளவிற்கு சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தனர். ●

## இலக்கியப்பகிர்வு

# "புதிய புத்தகம் பேசுது" "பதிப்புத் தொழில் உலகம்"

இரண்டு வித்தியாசமான வெளியீடுகள் பற்றி இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. பல்வேறு வகையான சிற்றேடுகள் வெளியாகும். தற்போதைய சூழ்நிலையில் "புதிய புத்தகம் பேசுது" "பதிப்புத் தொழில் உலகம்" என்பவற்றின் வருகை தொடர்பில் நாம் அக்கறை கொள்ள வேண்டியுள்ளது.

பொதுவாக இலக்கியச் சிற்றேடுகளாகவும் கவிதை, சிறுகதை, சினிமா, ஓவியம், பெண்ணியம், தலித்தியம், அறிவியல், சிற்பம், சோதிடம், நவீன இலக்கியக் கோட்பாடுகள் என்ற ரீதியில் பல் வேறு துறை சார்ந்த ரீதியாக நாங்கள் ஏடுகளைப் பார்க்கின்றோம்.

எனினும் இவற்றிற்கு முற்றிலும் வேறுபட்டதாக அதே நேரம் அவற்றோடு தொடர்புபட்டதாக அவற்றிற்கு அடி ஆதாரமாக இந்த இரண்டு வெளியீடுகளும் அமைந்துள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

முதலாவதாக "புதிய புத்தகம் பேசுது" என்ற ஏட்டினைப் பார்ப்போம். டிசெம்பர் 2004 இதழினையே நாம் இங்கு பார்க்கக் கூடியதாக இருந்தாலும் (அதாவது குறிப்புக்கள் எழுத) கிட்டத்தட்ட மூன்று வருடங்களாக புதிய புத்தகம் பேசுது) வெளிவந்து கொண்டு இருக்கின்றது.


பதிப்புத் தொழில் உலகம்
இலங்கையில் தமிழக நூல்களை விற்கும் மாபெரும் புத்தகக் கடை
பதிப்புத் தொழில் உலகம் பதிப்பாளர்களின் ஆதரவை நாடி நிற்கிறது. ஆண்டுச் சந்தா 60/- செலுத்தி ஆதரவு தருக. விளம்பரம் செய்து ஆதரவு தருக.

தமிழகத்தைக் களமாகக் கொண்டு வெளியிடப்படும் இதனது வெளியீட்டாளரும், ஆசிரியருமான பாரதி புத்தகாலயத்தின் அதிபர் க.நாகராஜன் அவர்கள் ஆகும். பொறுப்பாசிரியராக திரு. சூரிய சந்திரன் உள்ளார்.

துறை சார்ந்த ஒரு அறிஞரின் நேர்காணல் உட்பட பல்வேறு நூல்களில் விரிவான விமர்சனம், நூல் அறிமுகம் வாசித்ததில் நேசித்தது என பல்வேறு விடயங்கள் வழக்கமாக இதில் சேர்க்கப்படுகின்றன.

சேர்க்கப்படும் சகல விடயங்களும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு புதிய புத்தகம் தொடர்பாக அமைவது தான் இங்கு விசேடமாக அமைகின்றது. இதன் மூலம் "புதிய புத்தகம் பேசுது" என்ற தலைப்பின் அர்த்தத்தினை இந்த வெளியீட்டின் விடயங்கள் வெளிப்படுத்துகின்றன.

டிசெம்பர் 2004ஆம் காலப் பகுதிக்குரிய "புதிய புத்தகம் பேசுது" பகுதியில் "வாசித்ததில் நேசித்தது" என்ற தலைப்பில் சுந்தரராமசாமி அவர்கள் வே-வசந்திதேவியுடன் உரையாடல் செய்ததன் தொகுப்பினைப் பற்றி "முகில்" அவர்கள் எழுதியுள்ளார்.

"பல்கலைக்கழகம் அரசுத் துறை அல்ல துணை வேந்தர் அரச அலுவலர் அல்ல. இது ஒரு சுதந்திரமான நிறுவனம். எங்களுக்கு கல்விச் சுதந்திரம், கருத்து. சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் இருக்கிறது. அறிவுத் தேடல் பல்கலைக்கழகத்தின் பணி அனைத்து வழிகளிலும் அதை செய்யும் உரிமை எங்களுக்கு இருக்கிறது." என்று வசந்தி தேவி அவர்கள் கூறுவதை முகில் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்.

மாக்ஸிம் கார்க்கி எழுதிய "தாய்" தொடர்பாக எஸ்.ஏ. பெருமாள் கூறுவதில் பின்வரும் வரிகள் கவனத்திற்குரியன.

"தாய் நாவல் மனிதனை மானுடப்படுத்தி ஒரு புதிய சமூகத்தை நிர்மாணிப்பதில் இலக்கியம் வகிக்கின்ற மகத்தான பாத்திரத்தை நமக்கு உணர்த்துகின்றது". கலை நயமிக்க மிகநுட்பமான கருத்துப் பதிவு இந்த நாவல். இது உழைக்கும் மக்களின் வெகு சனங்களின் மத்தியில் வாசிக்கும் அனைவரது நெஞ்சங்களிலும் தனது ஆழமான வேர்களைப் பதித்துள்ளது. கார்க்கி அதையும் ஒரு தாயின் குரலாகப் பதிவு செய்திருப்பதுதான் நாவலின் வெற்றியின் இரகசியமாகும். அதனால்தான் இது காலங்களைக் கடந்து நிலைத்து நிற்கிறது.




"சோளகர் தொட்டி" என்ற ச.பாலமுருகன் அவர்கள் எழுதிய நாவல் பற்றி ஜெ.முனுசாமி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"சோளகர்" இன பழங்குடி மக்கள் வாழும் சிற்றூருக்கு தொட்டி என்று பெயர். எனவே சோளகர் தொட்டி எனப் பெயரிட்டிருக்கிறார். நாவலுக்கு-தலித்தியம், பெண்ணியம், பின் நவீனத்துவம் கியூபிசம் என்று பல்வேறு போக்குகளை உள்ளடக்கிய நாவல்கள் வந்துகொண்டிருக்கும். நவீன தமிழ் இலக்கியச் சூழலில் பழங்குடி மக்களின் வாழ்வின் இன்பதுன்பங்களை, பழக்க வழக்கங்களை, பண்பாட்டை அலைக்கழிப்பை பதிவு செய்திருக்கும் இந் நாவல் முக்கிய கவனம் பெற்றுள்ளது. குறிப்பாக வீரப்பனின் தேடுதல் வேட்டையின் போது விசாரணை என்ற பெயரில் வேட்டையாடப்பட்ட தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மனைப்பகுதி பழங்குடி மக்களின் குருதி தோய்ந்த கலைப்பதிவு.

தமிழகம் சென்னையிலே கடந்த இருபத்தி எட்டு ஆண்டுகளாக நடைபெற்று வரும் புத்தகக் கண்காட்சி ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

நல்ல நூல்கள் தொடர்பில் ஆர்வம் உள்ளவர்களும் தீராத இலக்கியப் பசி உள்ளவர்களும் சங்கமமாகும் இந்த புத்தகக்கண்காட்சிக்கு வித்திட்டவர் பி.ஐ பப்ளிகேசன்ஸ் புத்தக நிறுவனத்தில் பொது மேலாளர் திரு. கே.லி. மேத்யூ அவர்கள் ஆகும். அவர் தொடர்பான குறிப்பும் இதில் உள்ளது.

"மத வெறியர்கள் கலவரத்தை நடத்துவதன் நோக்கம் மக்களிடையே இயல்பாய் இருக்கும் ஒரு உணர்வை செயற்கையான திட்டமிட்ட வன்முறைகளால் ஒரு கொதி நிலைக்குக் கொண்டு சென்று வெறியாக குணமாற்றம் செய்வதே" என "நரபலியும் நரவேட்டையும்" நூல் தொடர்பாக குமுறுகின்றார். ஆதவன் தீட்சண்யா.

"தமிழ்க் கவிஞர்கள் எழுத்தாளர்கள் அனைவரின் வாழ்க்கைக் குறிப்புக்களையும் பாரதி புத்தகாலயத்தின் இணையதளமான Tamizh book இல் வெளியிடும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆகவே கவிஞர்களும் எழுத்தாளர்களும் தங்களைப்பற்றிய விபரக் குறிப்புக்களை பெயர், புனை பெயர், பிறந்த ஊர், பிறந்த திகதி, கல்வித்தகுதி, தொழில் இது வரை எழுதியுள்ள நூல்கள் பெற்றுள்ள பரிசுகள், விருதுகள், தற்காலிக முகவரி, நிரந்தர முகவரி, தொலைபேசி, செல்பேசி, தொலைநகல், மின்னஞ்சல் இணையத்தளம் ஆகிய தகவல்களைத் தொகுத்து புகைப்படத்துடன் பாரதிபுத்தகாலய அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று குறிப்பும் உள்ளது.

"புதிய புத்தகம் பேசுது" சஞ்சிகையில் வெளியாகும் விமர்சனங்கள், கட்டுரைகள் தொடர்பிலான படைப்பாளர்களின் எதிர்வினைகளும் சஞ்சிகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

"குற்றவாளி ஒருவர் ஒரு சிங்கத்தின் காலில் குத்தியிருந்த முள்ளை பிடுங்கி புண்ணைக் குணப்படுத்துகிறான். பல ஆண்டுகளுக்கு பிறகு பசியோடு இருந்த அந்தச் சிங்கம் ஒரு காலத்தில் தனக்கு உதவிசெய்த அந்த மனிதனை அடையாளம் கண்டுகொண்டு அவனைக் கொல்லாமல் விட்டு விடுகிறது. பசித்திருக்கும் சிங்கம் ஒரு கொடூரமான விலங்கு- பகுத்தறிவு ரீதியாக இக் கதை சாத்தியமா என்று நாம் சிந்தித்தோமானால் கதையின் மகத்துவம் நமக்கு புலப்படாமல் போய் விடும்" என எதிர் வினையாடுகின்றார் பேராசிரியர் சோ. கிருஷ்ணகுமார்.

"இன்றுள்ள இலங்கைக்கும் இராவணனுக்கும் தொடர்பில்லை என்பதையும், கம்பர் எவ்வாறு தன் விருப்பத்திற்கு அவர் எழுதிய இராமாயணத்தில் சோழ நாட்டினைப் பற்றி இடைச் செருகல்களைச் செய்தார் என்பதையும் கே.எம். உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுகிறார். புத்த சமண மதங்களின் செல்வாக்கினை உடைக்கும் நோக்கோடு எவ்வாறு புராணங்கள் இட்டுக் கட்டிப் படைக்கப்பட்டன என்பதையும் கே.எம். சுருக்கமாக இந்துவில் விளக்குகிறார்.

(17 பக்கம் பார்க்க)

இணுவையூர்
சிதம்பர திருச்செந்தி நாதன்

## மாலைக்கருக்கல்

மண்ணுலகை தீவதஞ்செய்துவிட்ட களிப்பில்
நெருப்புப் பழமாய் வதனம் தகதகிக்க
மேல் திசையில் களைப்பாறி
காணாமல் போகத் தயாராகும் கதிரவன்.

இன்றைய தீவதஞ்செய்தலின் செய்திகள் திரட்டவும்
நாளைய தாக்குதலுக்கு உளவு பார்க்கவுமாக
எதிர் வீட்டுக் காதலியைப் போல்
இரகசியமாய்த் தலைநீட்டி
வெண்ணொளி பொழியத் தொடங்கும்
மழலை நிலா.

பாதைகள் எங்கணும்
மஞ்சள்நீர் தெளித்துவைத்து
கங்குலின் வரவுக்காகக்
காத்துக் கிடக்கும் தொடுவானம்.

புது மனைவியின் தொடுதல்கள்போல்
காதுமடல்களையும் உச்சியையும்
தடவிச் சென்று மயக்கம் தரும்
இளமாலைத் தென்றல்.

வெயிலைப் பருகிய போதையில்
கடந்து செல்லும் காற்றோடு
மல்லுக்கட்டித் தள்ளாடும்
மரங்களின் கூட்டம்.

சூடிக்கொள்ளுதற்கு யாருமின்றி
விண்வெளித் தோட்டத்தில்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
மலரத் தொடங்கும்
நட்சத்திரப் பூக்கள்.

நான் எறிந்த மௌனத்துகள்களை
முகத்தில் வாங்கி
கவிதையாகத் திருப்பித் தந்து
அண்டவெளியெங்கும் கவியத்தொடங்கும்
இரவு.

இவைகள் எதிலும் மனம் லயிக்காது
காசு வேட்டையில்
காலம் கழித்திருக்கும்
மனிதர்கள்.

இரவும் பகலும் தழுவிக்கொள்ளும்
எழில் நிறை மாலைக் கருக்கல்கள்
வாசிக்கப்படாத கவிதைகளைப் போல்
வந்து வந்து போகின்றன.
தினந்தோறும்.

வேல். லவன்.

## மறவாத நினைவுகள்

ஈழ வரலாற்றில்
தாவரச் சருகில்
துயில்ந்ததையும்
நுளம்பு தீண்டி
உடல் மரத்ததையும்...

பாதணி மட்டுமல்ல
பாதத்தில் குத்தியிருந்த
முள் எடுக்க
ஊசி கூட
இல்லாமல் திரிந்ததையும்

அரிசியும் அதை
அவித்துண்ண
பானையும் இல்லாது
பட்டினி கிடந்ததையும்

எங்கள் வீட்டோடு
கூரையானதையும் - கூரை
இலை குழையானதையும்


ரயர் நெருப்பில்
எந்தமிழ் உயிர்
தொடர்ந்தும்
எரிந்ததையும்
காக்க அன்று
களம் புகுந்ததையும்
மறக்க முடியுமா?
மண் மரிக்கும் வரை...!!

க.சிவானந்தம்




# இளைய நாதம்

## கைவண்ணம்




# நண்டு

கடலில் பல ஆயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. வெவ்வேறு வடிவங்களில் வியக்கத்தக்க பழக்க வழக்கங்களோடு காணப்படுகின்றன. அவ்வாறான உயிரினங்களில் ஒன்று தான் கடல் நண்டு.



நாம் உணவாக உட்கொள்ளும் உணவுகளில் கடல் நண்டும் ஒன்று. மிகவும் சுவையானது என்பதினால் பெரும்பாலும் அனைவராலும் உணவில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. இது பெரும்பாலும் எல்லாக் கடல்களிலும் வாழ்கின்றன.

கடல் நண்டு கணுக்காலிகள் பிரிவில் புறவன்தோட்டின வகுப்பைச் சேர்ந்தது. பார்ப்பதற்குச் சற்று பயமாக இருக்கும். கோடிக்கணக்கான ஆண்டுகளாக கடலில் வாழ்கின்றன. பொதுவாக 25 செ.மீ நீளமும் 900 கிராம் நிறையும் கொண்டதாக இருக்கும். ஆனால் இவற்றை விட வித்தியாசமாகவும் காணப்படலாம். இவற்றிலே முள் நண்டு ஒரு வகை உண்டு. இது மித வெப்ப மண்டலக் கடல்களில் காணப்படுவது. ஆனால் இது பெரிய நன்னீர் நண்டு வகையைச் சேர்ந்தது. கடல் நண்டுக்கு இருப்பது போல இதற்கு வளை நகங்கள் இல்லை. அதற்குப் பதிலாக உடலில் நீண்ட கூரிய முட்கள் உள்ளன. தவிர நீண்ட உணர் கொம்புகளும் உண்டு.

இது ஓர் தலை கீழ்ப் பிராணி என்று கூறலாம். இதன் எலும்புக் கூடு உடலுக்கு வெளியே அமைந்துள்ளது. இதன் நரம்புத் தொகுதி முதுகுப்புறம் அமைவதற்குப் பதிலாக அடிவயிற்றுப்பக்கம் அமைந்துள்ளது. குண்டுசியின் தலை அளவு பருமன் கொண்ட இரண்டு மூளைகள் தொண்டையின் மேற்புறம் ஒன்றாகவும், கீழ்ப்புறம் ஒன்றாகவும் அமைந்துள்ளன. தலையின் பின் பக்கம் சிறுநீரகங்கள் உள்ளன. கால்களே இதன் சுவையுணர்வுப் பகுதி. இது ஒரு இரவு இரைதேடி இதன் உணவு மெல்லுடலிகள், சிறுமீன்கள், கடல அழுக்குகள். மற்ற நண்டுகள் முதலியன எதிரிகள் துரத்தும் போது உடலில் ஏதாவது ஒரு பகுதியை கழட்டி எறிந்து விட்டு ஓடி ஒளித்துக் கொள்ளும்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பெண் நண்டு தோலுரித்துக் கொண்ட பின் இனச் சேர்க்கை புரிகிறது. அப்போது ஆண் நண்டு பெண் நண்டின் கடைசி இரு கால்களுக்கிடையேயுள்ள பை போன்ற ஒன்றில் தன் விந்தணுக்களை செலுத்துகிறது.

பெண் நண்டு அந்த விந்தணுக்களை தனது பையில் பல மாதங்கள் வைத்திருக்கும். பின் தனது இரண்டாவது சோடிக் கால்களின் வழியாகச் சினை முட்டைகளை அந்த பைக்குள் அனுப்புகிறது. கரு முட்டை தாய் நண்டின் கால்களுடன் பத்து முதல் பதினொரு மாதங்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். பின்னர் தாய் நண்டு தன் உடலைப் பலமாக ஆட்ட பல்லாயிரக் கணக்கான சிறிய நண்டுகள் வெளியே வரும். இது சுமார் 30 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

## நகைச்சுவை

**மாலா உங்களுக்காக பஸ் நிலையத்தில் இரண்டு மணித்தியாலமாக நின்றுகொண்டிருந்தனான்?**
**பிறகு....?**
**இருந்திட்டன்.**

* * *

**ஆமை என்று ஒரு பத்திரிகை ஆரம்பிச்சனீங்கள் எப்படிப்போகுது?**
**மெதுவாப் போகுது.**

* * *

**ஐயா! காதில ரயில் ஓடுறமாதிரி சத்தம் கேட்குது சில நேரம் கேட்கிறதே இல்லை ஏன்?**
**ஏதாவது ஸ்டேசன்ஸ் நின்றிருக்கும்.**

## சொற்சிலம்பம் - 78

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நே | ப் | ம | தி | ன் | ளு | தீ |
| டி | கு | நீ | பா | ம | மி | ட |
| கா | யா | த் | சோ | னி | ணி | கா |
| து | அ | பி | ரி | ரோ | ல் | ஜ |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | ந |
| ர் | ப் | கா | சா | ய் | யெ | பு |
| அ | ல் | யா | ஓ | கி | ச | க |

**கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.**

## சொற்சிலம்பம் - 76 இன் விடைகள்

01. யப்பான்

02. புளுட்டோ

## சொற்சிலம்பம் - 76 இன் பரிசுக்குரியவர்

**த.தாட்சாயினி,**
**மு/சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்,**
**புதுக்குடியிருப்பு.**

## சொற்சிலம்பம் - 76 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. நிவேதா,
உதயநகர்,
கிளிநொச்சி.

02. அ.ரமேஸ்,
வைரவ புளியங்குளம்,
வவுனியா.

03. சு.ரீசிபா,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

04. கஸ்தூரி,
கணேசபுரம்
கிளிநொச்சி.

05. க.துசியந்தி,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

06. சு.கிசோபா தரம்- 01,
கனகபுரம்,
கிளிநொச்சி.

07. பி.யசோதா,
சின்னக்கடை,
மன்னார்.

08. த.குமுதினி,
சங்கானை,
யாழ்ப்பாணம்.

01. இந்தியாவின் பிரபல டெனிஸ் இளம் வீராங்கனையின் பெயர்?
01) ..................................

02. பாகிஸ்தானின் அணுவாயுத தந்தையின் பெயர்?
01) ..................................


பெயர் :- ..................................
முகவரி :- ..................................

*சொற்சிலம்பம்-78*
*ஈழநாதம்,*
*யாழ்சாலை,*
*கிளிநொச்சி.*

# ஆமையாரின் இனிப்புச் சுவை

**பகுதி-06**






# கோபம் கொடூரமானது

கோபம் கொள்ளும் நபர்கள் சமுதாயத்தில் பாரிய பிரச்சினைகளைச் சந்திப்பதை காணக்கூடிய தாகவுள்ளது. சில குடும்பங்களில் தந்தைதன் பிள்ளைகள் மீதோ அல்லது தனது மனைவி மீதோ குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினை காரணமாக கோபம் ஏற்படும் சமயத் தில் தனக்கு அருகில் இருக்கும் ஏதாவது பொருட்களை அவர்கள் மீது எறிந்து அவர்களை காயப்படுத்துவதுடன் வீட்டுப் பொருட்களை சேதப்படுத்துவதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

இப்படியான செயற்பாட்டால் சில வேளை உயிர் இழப்புக்களும் ஏற்படலாம்.

கணவன் தன் மனைவியை வெட்டிக் கொலை செய்துள்ள இப்படியான வார்த்தைகளை நாம் பத்திரிகைகளில் காண்கிறோம்.

இப்படியான சம்பவம் நிகழ கோபம் காரணமாக வுள்ளது. சில நபர்கள் நண்பர்களுடன் மற்றும் சுற்றத்தார் களுடன் ஏதாவது பிரச்சினைகளினால் கோப உணர் வுடன், அவர்களின் மனதை தாக்கும் வகையில் வார்த்தைகளைப் பயன்படுத்துவதுண்டு, கோபத்தை ஏற் படுத்துவதில் எதுவித நன்மையும் இல்லை. பாரிய பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். எமக்கு ஒருவர் மீது கோபம் ஏற்படும் சமயத்தில் அதை அவர் மீது வெளிப் படுத்தாமல் அதை எமக்குள்ளையே அகற்றி விட வேண் டும். கோபம் ஒரு அறிவாளியை முட்டாள் ஆக்கிவிடும் ஆபத்தான நோய் என்றே கூற லாம். எந்தவொரு நிலையிலும் நாம் நன்கு சிந்தித்துமற்றவர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் வெற்றியை பெறமுடியும்.

இளம் பெண்கள், இளம் ஆண்கள் கோப்படுவ தால் அழகு கெட்டுவிடும். இது வைத்தியர்களின் கருத்து. இது எல்லோருக்கும் தெரிந்த விடயம். முதலில் கோபம் ஏன் ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து பார்க்கையில் மன அழுத்தம், வெறுப்பு, இயலாமை, மனவிரக்தி, சோகம், தன்னம்பிக்கையில்லாமை, பயம் போன்ற சில காரணங்களே கோபத்தை ஏற்படுத்து கின்றன. அத்துடன் பொறாமையும், கோபமும் ஏற்படக் காரணமாக உள்ளது.

நாம் மகிழ்வுடன் இருக்கும் போது உள்ள உடல் நிலையிலும் பார்க்க பல மடங்கு கோபம் கொள்ளும் பொழுது நம் உடல் பல நோய்களுக்கு அடிமையாகிறது.

சோகத்தைப் போலவே கோபமும் மனிதனை கொல்லும் ஓர் ஆயுதமாகும். வாழ்வில் பலரின் அணுகுமுறை சரியான முறையில் இருந்தால் எமது எதிர்பார்ப்புக்களுக்கான எந்தவொரு முடிவுகளையும் எளிதாக ஜீரணிக்க முடியும். அத்தோடு நமது சக்தி, அறிவு வழிமுறைகள் அனைத்தும் ஓர் எல்லைக் குட்பட்டதுதான். அதற்கேற்றவாறே வாழ்வில் வெற்றியும் தோல்வியும்.

ஆனால், மனிதன் முன்னேறுவதற்கு தோல்வியே பல விடயங்களை கற்றுக்கொடுக்கிறது. கோபம், துயரம், சோகம் இவை யாரும் விரும் பப்படுவதால் ஏற்படுவதில்லை. தேவையற்ற எதையோ சிந்திக்கும் பொழுதே இவை எமக்கு ஏற்படுகின்றன.



ஆகையால் தேவையற்ற சிந்தனைகளை தவிர்த்தல் மூலம் கோபத்தை அழித்து விடலாம். நித்திரை செய்யும் பொழுது யாருக்கும் கோபமும், துயரமும், சோகமும் ஏற்படுவதில்லை ஏன் தெரியுமா? நித்திரையில் நாம் சிந்திக்க முடியாது. இதிலிருந்து நாம் ஒன்றை தெரிந்து கொள்ளலாம். யோசனையற்ற நேரம் இவை ஏற்படுவ தில்லை.

சில சூழ்நிலைகளில் இயந்திரத்தன்மை செயற்பாடுகளில் ஈடுபடும்போது கோபம் ஏற்படுகிறது. இப்படி கோபப்படுவதால் நாம் [illegible]ர்வாகிக்கும் ஓர் தன் மையும், மற்றவர்களின் மரியாதையையும் வெற்றியையும் இழக்கிறோம்.

# குமரகுரு பரிசு வழங்கல்

**குமரகுரு பரிசுப் போட்டியில் பங்குபற்றி பரிசு பெற்ற கீழ் வருவோர் எதிர் வரும் 20.03.2005 காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி கலாச்சார மண்டபத் தில் நடைபெறும் நிகழ்வில் தங்களுக்கான பரிசில் களை பெற்றுக்கொள்ளவும்.**

*பரிசுத்திட்டம் – 01*
*N. ஜெயவதனி,*
*மன்னார்.*

*பரிசுத்திட்டம் – 02*
*வி.தவமலர்,*
*யாழ்ப்பாணம்.*

*பரிசுத்திட்டம் – 03*
*க.யசோதா,*
*வட்டக்கச்சி.*

*பரிசுத்திட்டம் – 04*
*s.றமேஸ்வரி,*
*நெடுங்கேணி.*

*பரிசுத்திட்டம் – 05*
*ஜெ.நளாயினி,*
*வட்டக்கச்சி.*

*பரிசுத்திட்டம் – 06*
*சி.சிவமலர்,*
*கிளிநொச்சி.*

*பரிசுத்திட்டம் – 07*
*ஆ.யோகராணி,*
*முல்லைத்தீவு.*

*பரிசுத்திட்டம் – 08*
*திருமதி அரவிந்தன்,*
*வவுனியா.*

*பரிசுத்திட்டம் – 09*
*கே.நதிவதனி,*
*மன்னார்.*

*பரிசுத்திட்டம் – 10*
*ரூ.ஆனந்தசர்வினி,*
*புதுக்குடியிருப்பு.*

*பரிசுத்திட்டம் – 11*
*அ.கனிஎழில்*
*கிளிநொச்சி.*

*பரிசுத்திட்டம் – 12*
*இ.அபிராமி,*
*யாழ்ப்பாணம்.*

*பரிசுத்திட்டம் – 13*
*தி.தாமரைச்செல்வி,*
*சுன்னாகம்.*

*பரிசுத்திட்டம் – 14*
*ஜெ.அமலினி,*
*மல்லாவி.*

*பரிசுத்திட்டம் – 15*
*த.சுமதி,*
*புதுக்குடியிருப்பு.*

*பரிசுத்திட்டம் – 16*
*அரியரத்தினம் வாகினி,*
*மல்லாவி.*

*பரிசுத்திட்டம் – 17*
*இ.சைலஜா,*
*வேலணை.*

*பரிசுத்திட்டம் – 18*
*ம.அஜந்தா,*
*உடையார்கட்டு.*

*பரிசுத்திட்டம் – 19*
*ஆ.கார்த்தியாயினி,*
*நட்டாங்கண்டல்.*

*பரிசுத்திட்டம் – 20*
*எஸ்.சுகந்தினி,*
*கிளிநொச்சி.*

*பரிசுத்திட்டம் – 21*
*கி.ஜெயலெட்சுமி*
*(வேந்தனா),*
*கிளிநொச்சி.*

*பரிசுத்திட்டம் – 22*
*லோ.விஜிதா,*
*முல்லைத்தீவு.*

*பரிசுத்திட்டம் – 23*
*சுஜாதா சுந்தரேஸ்வரன்,*
*சாவகச்சேரி.*

*பரிசுத்திட்டம் – 24*
*பு.மகிழ்மணி,*
*மல்லாவி.*

*பரிசுத்திட்டம் – 25*
*இ.பவானந்தன் தர்சிகா,*
*யாழ்ப்பாணம்.*

*பரிசுத்திட்டம் – 26*
*பஞ்சமலர் ஆனந்தசிறி,*
*நட்டாங்கண்டல்.*

*பரிசுத்திட்டம் – 27*
*சி.குணமலர்,*
*மாங்குளம்.*

*பரிசுத்திட்டம் – 28*
*அருள் ஞானசீலன்*
*யசிதா,*
*சாவகச்சேரி.*

*பரிசுத்திட்டம் – 29*
*மா.தேன்மொழி,*
*கிளிநொச்சி.*

*பரிசுத்திட்டம் – 30*
*ஆறுமுகம் நிறோசா,*
*முல்லைத்தீவு.*

*பரிசுத்திட்டம் – 31*
*த.கமலாவதி,*
*வவுனிக்குளம்.*

*பரிசுத்திட்டம் – 32*
*தி.தாமரைச் செல்வி,*
*யாழ்ப்பாணம்.*

*பரிசுத்திட்டம் – 33*
*ஆறுமுகம் தர்சினி,*
*வல்வெட்டித்துறை.*

*[illegible]சுத்திட்டம – 34*
*[illegible]நிர்மலா,*
*கிளிநொச்சி.*

*பரிசுத்திட்டம் – 35*
*லீலா இராமச்சந்திரன்,*
*தருமபுரம்.*

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்க ங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

**வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.**
**நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.**


**குமரகுரு பரிசுத்திட்டம்—39**

பெயர்:........................................................

முகவரி:........................................................

........................................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

## மரக்கறிச் சூப்




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| கரட் | -50 கிராம் |
| கோவா | -50 கிராம் |
| போஞ்சி | -50 கிராம் |
| லீக்ஸ் | -50 கிராம் |
| முள்ளங்கி | -50 கிராம் |
| துவரம்பருப்பு | -1 மேசைக்கரண்டி |
| வெங்காயம் | -5 |
| வெள்ளைப்பூடு | -4பல்லு |
| மிளகு | -1/4 தேக் கரண்டி |
| நற்சீரகம் | -1/2 தேக் கரண்டி |
| உப்பு | -அளவாக |
| எலுமிச்சம் புளி | -1 தேக்கரண்டி |
| கோன்பிளவர் | -1 தேக்கரண்டி |
| தண்ணீர் | -6 டம்ளர் |

செய்முறை:-

காய்கறிகளை கழுவிச் சுத்தஞ் செய்து சிறிய துண்டுகளாக வெட்டவும்.

வெட்டிய காய்கறி, துவரம்பருப்பு, வெங்காயம், வெள்ளைப்பூடு இவற்றைத் தண்ணீரிலிட்டு அவியவிடவும்.

நற்சீரகம், மிளகு, இரண்டையும் சுத்தமான வெள்ளைத் துணியிலிட்டுத் தளர்ந்த பொட்டளமாகக் கட்டிக் காய்கறிகளுடன் சேர்ந்து அவியவிடவும்.

காய் கறிகள் நன்கு மசிய வெந்ததும் கோன்பிளவரைச் சிறிது நீரிலிட்டுக் கரைத்துச் சேர்த்து நன்கு கடைந்து இறக்கவும்.

பின் வடித்து உப்பும் எலுமிச்சம்புளியும் சேர்த்துப் பயன் படுத்தவும்.

## வீட்டுத்தோட்டம்

அரிசி, பருப்பு களைந்த தண்ணீரை வீணாக்காமல் செடிகளுக்கு ஊற்றுங்கள். இது செடிகளுக்கு நல்ல சத்துணவாகும்.

முட்டை வேக வைத்த நீரை ஆறிய பின் செடிகளுக்கு ஊற்றினால் செடிகள் தளதளவென்று வளரும்.

முட்டை ஓடுகளைப் பொடித்து சட்டி மண்ணுடன் கலந்து விடவும் இவை செடிகளுக்கு உரமாகும்.


ரோஜாப் பாத்திகள் அல்லது சட்டிகளில் சில வெங்காயங்களை நட்டு வைக்கவும் ரோஜாச் செடியை பூச்சி அண்டாது.

'க்ரோட்டன்ஸ்' செடிகளின் நுனிக் குருத்தை அவ்வப்போது கிள்ளி விடுங்கள்.

செடிகப்பும், கிளையுமாக, அடர்த்தியாக வளரும்.

## முகப்பருவுக்கு

தினம் முகத்தை குளிர்ந்த நீரினால் மூன்று நான்கு முறை கழுவ வேண்டும். சாக்லெட், ஐஸ்கிரீம். எண்ணெய் உப்பு ஆகியவற்றை குறைக்க வேண்டும். ஒரு கைப்பிடி துளசி, வேப்பிலை ஆகிய வற்றை எடுத்து மைய அரைத்து பேஸ்ட் போல செய்து கொள்ளலாம். இதனை பிரிட்ஜில் வைத்து பாதுகாக்கலாம். தினம் காலை கொஞ்சம் எடுத்து தேனையும்



தயிரையும் கலந்து முகத்தில் பூசிக்கொள்ளவேண்டும்.

முட்டை மஞ்சள் கருவை நன்றாக கலக்கி அடித்து வைத்துக்கொண்டு அத்துடன் விட்டமின் ஒயில் அல்லது அல்மாண்ட் ஒயில் சில சொட்டுகளோடு சில சொட்டு எலுமிச்சை சாறை விட்டு கல்க்கிக்கொள்ளவும். இதனை முகத்தில் தடவி பதினைந்து - இருபது நிமிடங்களுக்கு பின்பு கழுவி விடலாம்.

# தகவல் தொழில்நுட்பம் கண்ணயர்ந்தால் காவு கொண்டு விடும்



அமெரிக்காவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின படி 6-17 வயதுடையவர்களில் 70 வீதமானவர்கள் கணினி மற்றும் இணையத்தையும் பயன் படுத்தி வருகின்றனர். 2000 ஆம் ஆண்டில் இணையத்தை உபயோகித்த சிறுவர்களின் 25 மில்லியனாகவிருந்த தொகை 2005 இல் 42.5 மில்லியனாக அதிகரிக்கும் என கணிப்பிடப் பட்டுள்ளது. இவர்களின் 20 சதவீத மானவர்கள் பாலியல் நோக்கோடு அணுகப்பட்டுள்ளனர். 25 வீத மானவர்களுக்கு நிர்வாணப் படங்களும் உடலுறவு கொள்ளும் காட்சிகளும் இணையத்தின் வழியாக காண்பிக்கப்பட்டுள்ளன என அதிர்ச்சிகரமான தகவல்களை அவ்வாய்வு மேலும் தெரிவித்துள்ளது. 17 சிறுவர்களுக்கு ஒருவர் இணைய மூலமான அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இணைய மூலமான பாலியல் படக்காட்சி பார்த்த சிறுவர்களில் 23 வீதமானவர் மிக மோசமான மனங்குளம்பி கலக்கமடைந்தனர். தகாத படம் பார்த்த சிறுவர்களில் 40 வீதமானவர்கள் அதனை வெளியிடவில்லை என்பதும் இவ் வாய்வின் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன் இதில் 19 வீதமானவர்கள் உளவியல் ரீதியாக மன உளைச்சலுக்கு உட்பட்டுள்ளனர் எனவும் இவ்வாய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கைத் தீவில் கணினி இணைய பாவனையும் அதன் பாதிப்புக்களும் அமெரிக்காவின் அளவுக்கு அதிகமில்லை என அசட்டையீனமாக இருத்தல் இயலாது. வெகு வேகமாக இலங்கையில் கணினி இணைய உபயோகம் அதிகரித்து வரும் நிலையில் அதன் தீய விளைவுகள் அதிகரிக்கும் என நம்பலாம்.

தகவல் தொழில் நுட்பத்தால் ஏற்பட்ட விபரீதங்கள் சிலவற்றைப் பார்ப்போம். அமெரிக்க பள்ளி ஒன்றின் ஆசிரியை ஒருவரின் நிர்வாணப்படம் மாநகர் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன. அவர் அருகே ஆசிரியர் ஒருவரும் அதே கோலத்தோடு நிற்பதாக அச்சுவரொட்டி காணப்பட்டது. இதனால் அந்தநகரமே அதிர்ச்சியில் உறைந்தது. இக் காரியத்தோடு சம்பந்தப்பட்ட சூத்திரதாரியைத் தேடி அமெரிக்கப் பொலிசார் வலை விரித்தனர்.

யார் இக்காரியத்தை செய்திருப்பார்? என பலமான கேள்விகள் சந்தேகங்கள் மத்தியில் பெரும் பிரயத்தனப்பட்டு பொலிசார் குற்றவாளியைக் கைது செய்தனர். அக் குற்றவாளி வேறு யாருமல்ல. அப் பள்ளியில் கல்விகற்கும் 7 வயது மாணவனே அக் குற்றவாளி. முதல் நாள் பள்ளியில் தனக்குத் தண்டனை தந்த ஆசிரியையை பழிவாங்கவே அம்மாணவன் கணினியின் உதவியோடு சுவரொட்டியை தயாரித்து நகரெங்கும் ஒட்டியுள்ளான் என்ற உண்மை பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. அச் சிறுவனுக்கு கணினிக் கல்வி அறிவின் ஊடாக சிறுவயதிலேயே ஆபாசப்படங்களைப் பார்க்கவும் அதனையே தான் எதிரியாகக் கருதுபவர் மீது பிரயோகிக்கவும் வாய்ப்பைக் கொடுத்துள்ள விபரீதமே இது.

தகவல் தொழில் நுட்ப சாதனங்கள் உலகில் மக்களிடையே தற்கொலைகளையும் கொலைகளையும் தூண்டி வருகின்றன. இதற்கு தக்க எடுத்துக்காட்டாக இருப்பது ஜப்பானில் அண்மையில் நடந்த சம்பவமாகும்.

தற்கொலை செய்துகொள்ள விரும்பிய ஒருவர் இணையத்தளம் ஊடாக ஏனையோரை கவரும் வகையில் விளம்பரம் ஒன்றை வெளியிட்டார். இவ் விளம்பரத்தால் ஈர்க்கப்பட்ட பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த நான்கு ஆண்களும் மூன்று பெண்களும் ஏழுபேர் ஒன்றாகக் கூடி திட்டமிட்டு கார் ஒன்றினுள் நச்சு வாயுவை கசிய வைத்து அதற்குள் ஏழு பேரும் தற்கொலை செய்து கொண்டனர். இறந்து கிடந்த ஏழு பேரையும் ஜப்பானிய பொலிஸ் மீட்டெடுத்தது.

ஜப்பானிய பொலிசாரின் தகவல்களின் படி ஜப்பானில் மட்டும் இதுவரை 34 பேர் இணையத் தளம் ஊடாக விளம்பரம் செய்து கூட்டாக தற்கொலை செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தற்கொலை புரிந்தவர்கள் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்கள் வழிப்படுத்துவதற்குப் பதிலாக தங்களை யாரோ வழிப்படுத்த இடமளித்து உன்னதமான உயிர் வாழ்க்கையையே இழக்கத் துணிந்தமை உலகின் எதிர்காலப் போக்கிற்கு ஓர் அபாய அறிகுறியே.

தகவல் தொழில்நுட்பத்தால் உலகிற்கு ஏற்பட்ட நன்மைகள் எல்லாவற்றையும் அழித்தொழித்துவிடும் அளவுக்கு தொழில் நுட்பத்தால் உலகெங்கும் கணத்துக்குக் கணம் நிகழும் மோசமான நிகழ்வுகள் அமைகின்றன. பாலியல் வன்முறைகள், தற்கொலைகள், கொலைகள், ஆபாசப்படங்கள், வன்முறைகள் என்பன தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சி கண்டு குறுகிய காலத்திற்குள்ளேயே மிக அதிகமாகஇடம்பெறத் தொடங்கிவிட்டன. அதிலும் கணினி இணைய வசதிகள் உலகில் பட்டி தொட்டிஎங்கும் இன்னும் முழுமையாகச் சென்றடையாத சூழலிலேயே விபரீதமான நிகழ்வுகளால் உலகம் திணறத் தொடங்கிவிட்டது. எனின் உலகில் எஞ்சிய பகுதிகளுக்கு இவ்வசதிகள் சென்றடையும் போது ஏற்படும் நிலைமையை சிந்திப்பதே கடினமாகும். தகவல்தொழில் நுட்பத்தை ஆள்வோரால் நயவஞ்சகத்தனத்தோடு நடத்தப்படும் இணையத்தளங்களின் கோரப் பிடியிலிருந்து சமூகத்தைக் காப்பது பற்றி சிந்திக்க வேண்டியது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும். இவ்விடயத்தினை பெரிது படுத்தாமல் அலட்சியப் போக்கை கடைப்பிடித்தால் எதிர்கால சமூகத்தை யாராலும் மீட்க முடி யாது போகும்.

இளைஞர்களை அதிலும் குறிப்பாக சிறுவர்களை இவ்விணையத்தளங்களின் வலையில் வீழ்ந்து விடாமல் பாதுகாப்பது கட்டாயம் செய்யவேண்டிய பணியாகிறது. இதனை விடுத்து தன் மகன்/மகள் கணினி கற்கிறான்(ள்) இணையத்தளத்தை நன்கு பயன்படுத்துகிறான் (ள்) தகவல் தொழில்நுட்பத்தில் பெரிய படிப்பெல்லாம் படிக்கிறான் (ள்) /படித்தவன் (ள்) என பெருமை பேசும் பெற்றோர் பின்னாளில் வருந்த வேண்டியும் வரலாம்.

இவ்வாறு அசட்டையீனமாக இருக்கும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தங்களினதோ ஆசிரியர்களினதோ பெரியோர்களினதோ வழிப்படுத்தலிலிருந்து விலகி தகாத இணையத்தளங்கள் நடத்தும் மோசடிக்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடுவதையே சில வேளைகளில் காணவேண்டிவரலாம். பிள்ளை அவர்களின் வழிப்படுத்தலின் கீழ் செயற்படத் தொடங்கியபின்பு நிலைமை கைமீறிச் சென்றுவிட்டதையே பெற்றோர்களால் உணர முடியும்.

கணினி இணையம் எனத் தகவல் தொழில் நுட்பசார் கற்கை நெறிகளை கற்பதற்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோரும் தகவல் தொழில் நுட்ப சாதனங்களை கையாளும் பிள்ளைகளுடைய பெற்றோரும் தம் பிள்ளைகள் மீது கூடிய கவனத்தை செலுத்துவது மிக மிக அவசியமாகும்.

ஏனெனில் கணினிப் பயிற்சி நிலையங்களில் இணையத் தளங்களிலும் இறுவெட்டுகளிலும் ஆபாசப்படங்கள் பார்த்து மாணவர்கள் பொலிஸாரிடம் சிக்கிய சம்பவங்கள் இலங்கைத்தீவில் பல நிகழ்ந்தேறியுள்ளன. காவல்துறையிடம் சிக்காமல் பல நடந்தேறி வருகின்றன. வன்னி பெரு நிலப்பரப்பில் தகவல் தொழில் நுட்பம் முழுமையாகப் பரவி நிலை பெறாத சூழலிலேயே மேற்குறித்த நிகழ்வுகள் ஒன்றிரண்டு முளைவிடத் தொடங்கியுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது.

இந்நிலையில்தான் தம்பிள்கள் கணினியை, இணையத்தளத்தை தனியாக இருந்து பயன்படுத்துகின்றனரா? பிறர் அருகே வரும்போது கணினித்திரையை மாற்றும் பழக்கம் அவர்களிடம் இருக்கிறதா? என கண்காணித்து வரவேண்டும். அத்துடன் பிள்ளைகள் பயன்படுத்தும் கணினித் திரையில் ஆபாசப்படங்கள் காட்சிகள் உள்ளனவா? என்பதை பரிசீலித்துப் பார்ப்பதும் அவசியம். தகவல் தொழில் நுட்ப அறிவில்லாத பெற்றோர், நம்பிக்கையான வரைக் கொண்டும் இதனைப்பரிசீலித்துப் பார்க்கலாம். இதன் மூலம் ஆபாசப்படங்களால் பிள்ளைகள் வழிதவறிச் செல்வதை தடுக்கலாம்.

அத்துடன் தம் பிள்ளைகளுக்கு புதிய தொலைபேசி அழைப்புக்கள் வருகின்றனவா? பிள்ளைகள் புதிதாக யாருடனாவது தொலைபேசியில் உரையாடுகின்றனரா? அவர்களின் முகவரிக்குக் கடிதங்கள் பொதிகள் வருகின்றனவா? பிள்ளை புதியவர்களை சந்திக்கச் செல்கிறதா? என்பவற்றை தொடர்ச்சியாக கண்காணிப்பதன் மூலம் தகாத இணையத்தளங்கள் ஊடாக முறைகேடான நோக்கோடு அணுகுபவர்களின் பிடியிலிருந்து பிள்ளைகளை காப்பாற்றலாம்.

இதனால் சிறுவர் துஷ்பிரயோகம், ஓரினச்சேர்க்கை, பாலியல் படத்தயாரிப்பு, போதைப் பொருள் பாவனை ஆகிய பெருந் தீங்குகளிலிருந்து பிள்ளைகளைக் காப்பாற்றி எதிர்காலச் சந்ததியை நற்பிரஜைகளாக்க முடியும்.

ஒட்டுமொத்தத்தில் உலக மக்களை மன நோயாளராக, மந்தைகளாக மாற்றி அவர்கள் அனைவரையும் தானே மேய்க்கும் மேய்ப்பனாகக் கருதும் தகவல் தொழில் நுட்பத்தை ஆள்வோனின் நோக்கத்தை சிதறடிக்க முடியும். தான் சிந்திப்பது போலவே உலக மக்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும். செயற்பட வேண்டும். அதன் மூலம் உலகையே தான் ஆளவேண்டும் எனும் தகவல் தொழில் நுட்பத்தை ஆள்வோனின் கனவு மெய்ப்பட இடமளிக்கலாமா?

விழிப்போடு இருந்து தகவல் தொழில் நுட்பக் கற்கை நெறிகளைக்கற்று சிறப்புத் தேர்ச்சி பெற்றும் அதனைப் பயன்படுத்தியும் வர வேண்டும். இதன் மூலம் தகவல் தொழில் நுட்பத்தை சமூகநல நோக்கோடு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த முடியும். இதுவே எதிர் காலத்தை ஆரோக்கியமானதாக்கும்.

**தருமை வதனன்**

---

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கே.எம். முத்தையா அவர்கள் எழுதிய "இராமாயணம் ஒரு ஆய்வு" என்னும் நூல் தொடர்பாக மேற்கண்டவாறு சி.ராஜா தெரிவிக்கின்றார்.

ஒரு புத்தகசாலைக்குள் நுழைந்து புத்தகங்களை எடுத்து ஒற்றைகளைப் புரட்டும் போது ஏற்படும் உணர்வினை "புதிய புத்தகம் பேசுது" ஏற்படுத்துகின்றது. அதன் காரணமாக புத்தக ஆர்வலர்களை அது ஈர்க்கின்றது.

"பதிப்புத் தொழில் உலகம்" சஞ்சிகையின் பெப்ரவரி 2005 இதழ் படிக்கக் கிடைத்துள்ளது. "பதிப்பாளர்களின் ஆதரவை நாடிநிற்பதாக" அறைகூவல் கொடுத்தபடி வெளிவந்துள்ளது. ''பதிப்புத் தொழில் உலகம்'' கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக வெளிவரும் இதன் ஆசிரியர் யாழ் சுதாகர் ஆகும். இவர் யாழ் இலக்கிய வட்டத்தினை சேர்ந்து இயக்கி, தி.சண்முகநாதன் அவர்களின் புதல்வர் ஆவார். நீண்ட காலமாக தமிழ் நாட்டில் ஊடகத் துறையில் பணிபுரிந்து வருகிறார்.

இந்தியாவில் பல்வேறு இடங்களிலும் நடக்கும் புத்தகக் கண்காட்சிகள் தொடர்பாகவும் பல்வேறு புத்தகங்கள் தொடர்பான குறிப்புக்களும் இதில் உள்ளன.

தினமணி பத்திரிகையும், காந்தளகம் வெளியீட்டு நிறுவனமும் இணைந்து தமிழகம்- புதுவையில் நடத்தும் புத்தகக் கண்காட்சி தொடர்பாக முழுமையான விபரங்கள் தரப்பட்டுள்ளன.

அத்துடன் ஒப்பு நோக்காளர் (Proof rader) என்போர் பயிற்சி தொடர்பான விபரங்கள் இந்த வெளியீட்டில் முக்கியமாக இடம் பெற்றுள்ளன.

''மெய்ப்பாளர் பயிற்சி'' என்னும் தலைப்பில் "எழுத்தாளர் படியை (பிரதியை) தந்துவிட்டார். தெருவுக்குத் தெரு உள்ள கணினிப் பக்கமாக்கிகளோ அனைத்துப் பக்கங்களையும் உடனுக்குடன் தட்டச்சாக்குவர்- பக்கமாக்குவர் மெய்ப்புப் பார்க்க (Proof) ஏற்றவர் கிடைப்பது அரிதாகவே உள்ளகாலம் இது"

"எழுத்தாளருக்குக் குறைவில்லை. கணினிப்பக்கமாக்கிகள் சந்து பொந்தெங்கும் அச்சகங்கள் தெருவுக்குத் தெரு கட்டாளரும் ஏராளம். தான் வழங்கவோ தாராளம்.

மெய்ப்பாளருக்கு மட்டுமே பற்றாக்குறை உரிய காலத்துள் பணியை முடிக்க வேண்டுமே என்ன செய்வது."

என கேள்வி கேட்கப் படுகிறது. அதன் காரணமாகவே மெய்ப்பாளர் பயிற்சி செயற்றிட்டத்தை மறவன் புலவு க.சச்சிதானந்தன் அவர்கள் பட்டய மெய்ப்பாளர் பயிற்சி என்னும் தலைப்பில் விபரமாக எழுதியுள்ளார்.

# அரசு எதைத் தன்ர பலமெண்டு நினைக்கிதோ; அதுதான் அதின்ர பலவீனமும்!...

உலா 25




எல்லாருக்கும் வணக்கம் ! என்ன அடையாளம் தெரியேல் லையோ என்னை ? ஒருமாதிரிப் பார்க் கிறீங்கள்! ஆ விளங்கிது விளங் கிது.. என்ன இது இவர் இண்டைக்கு வலு கலாதியாய் வெளிக்கிட்டு வந்திருக்கிறாரெண்டு பார்க்கிறீங்கள் போல! யோசிச்சுப் பாருங்கோ.... இண்டைக்கு எனக்கு 25 அல்லோ ! சே! வயசில்லை (அதை ஏன் இப்பை ஞாபகப்படுத்திறீங்கள் !), நான் இப்பிடி உங்களோடை கதைக்கத்தொடங்கி 25ஆவது வாரம், அதுதான் கொஞ்சம் புது கெற்அப்பில வந்தனான். ஆனால் வர்ற பாதையில கடைக்கார குணத் தார் கண்டிட்டு ஒரு நக்கல் சிரிப்பு. என்னண்டு விசாரிச்சால் வழக்கத் துக்கு மாறாய் போனகிழமை பேப்ப ரில சேட்போடாமல் வந்திருந்த என்ர போஸ் தான் தனக்கு நினைவில வருகிதாம். 'சே ! எவ்வளவு நடமாட்ட முள்ள உந்தப்பெரிய ஏ9 இல உப்பிடி மோசமா... சேச்சே !' எண்டு நச்சரிக் கத்தொடங்கீட்டிது மனுசன். ஐயோ உந்தக் கடவுளாணை அதுக்கு நான் போஸ் கொடுக்கேல்லை. ஆரோ எனக்கு அநியாயம் செய்து போட்டி னம். 'என்ன நீரும் திரிஷா மாதிரி, அது குளிச்சது நானில்லை எண்டு கதை அளக்கத்தொடங்கிட்டீர் ?' எனக்கெண்டால் ஒரு ஆக்கினையும் விளங்கேல்லை. அந்த மனுசன் சரி யான ஆர்வமா அடியில இருந்து நுனி வரைக்கும் நடந்ததைச் சொல்லிச் சிது. 'குணத்தார் ! ஒழுங்காய்ப் போய்க்கடை அலுவல்களைப் பாரும். உந்த ஊருலகத்துக்கு உதவாத துகளின்ரை கதையளை விட்டிட்டு, ஒழுங்காய் ஏதன் செய்யப்பாரும் ! எட இஞ்சை ஒரு பக்கத்தால தண்ணி பெருகி அழிவு, மற்றப்பக்கத்தால தண்ணி அருகி அழிவு. அதுகளுக்கு ஏதாவது செய்யிறதை விட்டிட்டு, அவா ஆரோ குளிச்சாவோ இல் லையோ எண்டு பட்டிமன்றம் நடத்திக் கொண்டு ! உந்தக்கூட்டங்கள் கொஞ் சம் காசைக்கூடக்குடுத்தால் எங்கை வேணுமெண்டாலும், எப்பிடியும் குளிச் சிட்டுப்போகும். அப்பிடியானதுகளுக்கு நாங்கள் ஒண்டும் நியாயக்குரல் குடுக்கத்தேவையில்லை. ஆனால் எங்கட நாட்டில குளிக்கிறது உட்பட எல்லாத்துக்குமே பவுசர் தண்ணியை சனங்கள் நம்பியிருக்கிற நிலைமை மாறவேணும், மாத்தவேணும்', எண் டொரு குடு குடுத்திட்டு வந்திட்டன்.

இண்டைக்கு கனக்க கதைக்க வேணுமெண்டு நினைச்சனான். ஆனால் நாட்டு நிலவரங்களைப் பார்க்க கொதிப்பாயெல்லே கிடக்கிது. எட வடிவாய் படிச்சுக்கொண்டிருந்த அந்த சின்னப்பிள்ளையை மோதிச் சாக்காட்டினாங்கள். முதல்லை தற் செயலான விபத்தெண்டு நினைக்க வைச்சாலும், அதுக்குப்பிறகு அவை யள் நடந்துகொண்ட முறையும், காட் டின திமிரும் சமாதான காலத்தில தமிழின அழிப்பைத் தொடரிறதுக்கான மாற்றுவழிகளில ஒண்டுதான் உப்பி டிப்பட்ட விபத்துகளும் எண்டு விளங் கிச்சிது. அதுகும் வாழவேண்டிய சின்னனைக் கொண்டிட்டு தன்ரை வழ மையான திமிரைக் காட்டினால், எங் கட சனமும் சும்மா விடுமே ! அந்த எழுச்சியைக் காணேக்கிள்ளை ஒரு விசயம் தெளிவாய் விளங்கிச்சிது. இத்தனையையும் பொறுத்துக் கொண்டிருக்கிற எங்கட தலைவ ரின்ரை பொறுமைக்குப்பின்னால இருக்கிற பூகம்பம், தன்னை வெளிக் கொண்டு வரேக்கிள்ளை அது காட் டப்போற உக்கிரத்தை, இந்த சகிப்பை வைச்சே நாங்கள் புரிஞ்சு கொள்ளலாம். மற்றது எங்கட உலக நாடுகளின்ர வழமையான 'சகட்டு மேனி கண்டனகாரர்' பாடமாக்கின மாதிரி ஏதேச்சும் சொல்லியிருப்பினம், கேட்டனீங்களோ ? 'நாம் இந்தக் கொலையை கண்டிக்கிறோம். ஆனா லும், சமாதானப்பேச்சுவார்த்தைக ளுக்கு இதனால் எந்தவிதமான பின்னடைவும் ஏற்பட்டுவிடாது' எண்டு தானே கௌசல்யன் தம்பியின்ரை படுகொலைக்கும் சொல்லுப்பட்டது. எட பறிகொடுத்தது நாங்களெல்லே! நாங்களெல்லோ அதைப்பற்றி முடி வெடுக்கோணும். ராணுவத்தோட எந்த வொரு தமிழ் ஆயுதக்குழுவும் இயங்கிறேல்லை எண்டு நோணா சொல்லிறா. அப்பிடியெண்டால் கிழக்கில புளொட் ஆள் ஒண்டு காயம் எண்டவுடன, ஏனாம் ஹெலி மூலம் கொழும்புக்கெல்லாம் ஏத்தி இறக்கி னவை ? இல்லாட்டி பொதுவா எந்த இலங்கைக் குடிமகனுக்கும் சனாதி பதி வழங்கிற அடிப்படை உரிமை யில ஹெலிப்போக்குவரத்தும் ஒண்டோ ? அப்பிடியெண்டால் நானும் தான் போனகிழமை கொதிக்கிற வெய்யிலில கொஞ்சம் கூட யோசனை இல்லாமல், அலுப்பில குந்தில குந்தி விபத்துக்குள்ளாயிட்டன். எவ்வளவு பெரிய இருப்பிடப்பிரச்சினை ! என்னையும் ஹெலியில ஏத்தி இறக்கி இருக்கலாம்! ஆனால் ஒண்டு மட்டும் சொல்லிறன் : அரசாங்கம் எதைத் தங்களின்ரை பலமெண்டு நினைக் கிதோ, அதுதான் அதின்ரை பலவீ னமும்! என்ரை வாக்குப்பலிக்கும், பாருங்கோ!

அப்பிடி நிலவரங்கள் இருக்கு. தெரிஞ்ச சனம் சில கேட்டினம், 'என்ன மார்ச்-8 இற்கெண்டு விசேசமா ஏதாவது எழுதியிருக்கலாமெல்லே' எண்டு. என்னத்தைப் பாருங்கோ எழுதிறது ! நான் ஆம்பிளை. எழுச்சி பொம்பிளையளிட்டை இருந்தெல்லே வரோணும். ஏதோ கொஞ்சப்பேரிட்டை அப்பிடியான விழிப்பு ஏற்பட்டது போல, மிச்ச ஆக்களும் கண்ணைத் திறந்து பார்க்கோணுமெல்லே! அதை விட்டிட்டு நான் இதிலையிருந்து என்னத்தைச் சொல்ல ? சர்வதேச மகளிர் தினத்தையொட்டி தமிழ்நாடு 'நாயுடு ஹோல்' இல சிறப்புத்தள் ளுபடியில சீலையள் விற்குதெண்டு சண்-டிவி அறிவிக்கிது. நானும் சில நேரம் மனம் பொறுக்காமல் உந் தச்சினிமாக்காரரின்ரை பொறுப்பில் லாத நிர்வாணவியாபாரம் பற்றி விமர்சிக்கிறது. தமிழை எவ்வளவு கொச்சைப்படுத்தி, இழிவு படுத்தி சிதைக்கலாமோ, அவ்வளவுக்கு அசிங்கமா எழுதுவாங்கள். அதுகள் சனத்திட்டையும் எடுபடுதுதானே ! என்ன என்னத்தை நினைச்சுக் கொண்டு இதுகளை எழுதிறன் எண் டெல்லாம் 'இதிலை எழுதேலாது. முந்தியொருக்கால் உப்பிடி விமர்சிக் கப்போய் ஆரோ உந்தக் கூட்டத் தின்ரை தீவிர விசுவாசியொராள் 'உம்மால அப்பிடியெல்லாம் ஆடே லாது எண்டிட்டு, சும்மா பொறாமைப் படாதையும் ' எண்டு பதில் தந்திச்சிது. எங்கட ரசனையளுக்குத் தீனி போடிற படைப்புகளுக்கு ஒரு தரம் இருக் கோணுமெண்டு நான் எதிர்பார்த்த துக்கு, எனக்குக் கிடைச்ச பரிசு எண்டு நினைச்சிட்டு கொஞ்சநாளைக்கு அடங்கியிருந்தன். ஆனாலும் போகிற போக்குகள் முழுமையா எனக்குத் தெரியவராட்டியும், கிடைக்கிற கொஞ் சத்தை அறியவே யோசனையாக் கிடக்கிது. பெண்ணுரிமையள், மொழி வளர்ச்சி, பண்பாடு பற்றியெல்லாம் பெரிசு பெரிசா எழுதித்தள்ளிற ஊட கங்களுக்குள்ளையே கெட்டியான தீவிர விஜய்-விசுவாசியும், சிம்ரன் விசுவாசியும் இருக்கத் தக்கதாய் என்னத்தை மாத்திறது ! அண்டைக்கு ஒரு சகோதரி குடும்பவிருப்பம் நிகழ்ச் சியில தன்ரை மகனுக்கு விருப்பமான பாட்டெண்டு 'கட்டினால் இவளைக் கட்டோணும்' எண்டு ஏதோவொண் டைக் கட்டாயம் ஒலிபரப்பச்சொல்லி வானொலியில கேட்டிருந்தா. உதுக்கு மேல நான் உதைப்பற்றி என்னத்தைச் சொல்ல ? இருந்தாலும் ஒண்டு மட்டும் சொல்லிறன் : ஊடகங்கள் தான் அகத்தை ஊடறுத்து, கருத்துலகத் தையும் அதால சமுதாயத்தின்ரை போக்கையும் நிர்ணயிக்கிது. தமிழ் நாட்டில சுனாமியால வீடுவாசலை இழந்திருந்த ஆக்களில கூட சாதிக் கேற்ற மாதிரித்தான் முகாம்களும் பிறிம்பு பிறிம்பா உருவாக்கப்பட்டி ருந்தது. கொல்லப்பட்ட எல்லா மக்க ளின்ரை சடலங்களையும், சாதி ரீதியாக குறைஞ்சவர்களாகச் சொல் லப்படுகிற நகர சுத்திகரிப்புத் தொழி லாளர்கள் வந்து எடுக்கும் வரைக்கும், அப்புறப்படுத்த ஒருத்தரும் முன் வரேல்லை. உந்த திருமலை, எரி மலை, செந்தமிழன், தளபதி, தென் னக புறூஸ்லீ, மாவீரன், புரட்சித் தமிழன், சுக்கிரன், ராகு, கேது எல் லாம் எங்கை கிடந்தவை. இவை யின்ரை கலைப்படைப்புக்கள்(?) எல் லாம் ஆரோக்கியமான கருத்துருவாக் கத்தை சமூகத்தில ஏற்படுத்தாமல், இன்னும் பாழ்படுத்துதெண்டால் அந்தக் குப்பையளைப் பற்றி ஒருசில கேள்வியளை மனசில நாங்கள் கேட்டுக்கொள்ளோணுமெல்லோ ! அங்கை அப்பிடியிருக்க சுனாமி நேரத்திலை எங்கட மக்கள் ஒவ் வொருத்தரும் காட்டின மனிதாபி மானத்தை நினைச்சு, இன்னும் ஆயி ரம் வருசத்துக்கு நாங்கள் பெருமைப் படலாம். அதுதான் எங்கட பலம் பாருங்கோ, ஒருக்காலும் அதை நாங்கள் இழக்கக்கூடாது.

மற்றது இன்னுமொரு விசயம் : நானும் உந்தளவு நாளா ஏதோ எனக் குத் தெரிஞ்ச நாலு விசயங்களை எழுதினனான். நீங்கள் சிலநேரம் நினைச்சிருப்பியள் 'என்ன உந்த ஆள் எப்ப பார்த்தாலும் ஏதாவதொரு குறை பிடிச்சுக்கொண்டு ! அப்பிடி சொல்லிறதுக்கு நல்ல விசயம் ஒண் டுமே எங்களைப்பற்றிஇல்லையோ!' எண்டு. என்ரை குஞ்சுகள் ! அப்பிடி யெல்லாம் தப்பாய் நினைச்சுப் போடாதயங்கோ ! நல்ல விசயங்களைப் பற்றி சுருக்கமா எழுத வெளிக் கிட்டாலும், வெள்ளிநாதத்தின்ரை மிச் சம் 23 பக்கமும் எனக்குத் தேவைப் படும். எங்களிட்டை இருக்கிற நல்ல விசயங்களை மற்ற நாட்டாக்கள் பார்த்து வியக்கோணும், பாராட் டோணும். அதெல்லோ எங்களுக்கு பெருமை. அதை விட்டிட்டு எங்க ளுக்கு நாங்களே பாராட்டு மகுடம் சூட்டி என்ன பிரயோசனம் ! அதால தான் ஆராஇருந்தாலும் (நான் உட்பட) எங்கட செய்கையளை ஒவ்வொருநாளும் சீர்தூக்கிப்பார்த்து, பிழையள் இருக்கேக்கை துணிவோட அதை ஒத்துக்கொண்டு அதைத் திருத்தப்பார்க்கோணும். இல்லாட்டி நட்டம் ஆருக்கு ?எங்களுக்கெல்லே ஒரு விசயம் சொல்லிறன் : அதாவது 2003ஆம் ஆண்டில அப்பிள் பழ இறக்குமதிக்காக இலங்கை 750 மில்லியன் (75 கோடி) ரூபாவும், முந் திரிகைப்பழத்துக்காக 429 மில்லியன் (42.9 கோடி) ரூபாவும் செல விட்டி ருக்கு. இறப்பர்ஏற்றுமதியிலகிடைச்ச லாபத்தில பாதியை இது இரண்டுக் காகவும் செலவளிச்சிட்டோம். உப்பிடியே போனால் சிங்களவர் உருப் படமாட்டினம் எண்டு நினைககா தயங்கோ! உந்தச்செலவளிப்புக் குள்ளை நாங்களும் தான் அடக்கம். ஒரு அப்பிள் பழத்துக்கு ஒரு நெல்லிக் காய் சமன் எண்டு சின்னனிலை படிச் சனாங்கள். ஆனாலும், வளவுக் குள்ளை நிக்கிற நெல்லியைக் காய விட்டிட்டு, அவுஸ்திரேலியாவில இருந்து அப்பிள் இறக்குமதி செய் யிறம். எங்கட குளிர்-ஊற்றுகளிலை கூட அப்பிள் யூஸும், ஒறேஞ்ச் யூஸும் தானே கிடைக்கிது. பெரிய உணவகங்கள் ஏதாவது பண்ணை யளிலை இருந்து பால் எடுத்துப் பாவிக்கினமோ ? இல்லையே இறக் குமதி செய்யிற ரின்பாலும், பவுடரும் மட்டும் தானே பாவிபடுது. நெஸ்லே நிறுவனத்தின்ரை வருச வருமானம் எவ்வளவெண்டு நினைக்கிறீங்கள் ? 10 பில்லியன் US $ (10 000 000 000 எண்டேக்கிளை இலங்கையில இருக்கிற எல்லாரும் பிரிச்சால் கூட ஆளுக்கு 500 டொலருக்கு குறை யாமல் கிடைக்கும்). பத்தாக்குறைக்கு 82 நாடுகளில 520 தொழிற்சாலை யளை நிறுவி அந்த சுவிஸ் நிறு வனம் இரண்டரை லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பும் குடுத்திருக்கிது. அவங்கள் உருப்படத்தெரிஞ் சவங்கள் !

உந்தப் பத்திரிகையளிலை விவ சாயத்துறை, கடலியல், இன்னும் ஏதோதோ கற்கைநெறியள் எல்லாம் அறிமுகப்படுத்தி விளம்பரம் செய் யினம். அச்சாப்பிள்ளையளெல்லே நிலைமையைப் புரிஞ்சு கொண்டு போய் அதுகளை விடாமல் படியுங்கோ ஏதோ வசதியா அங்கைங்க சில தொழிற்பயிற்சி நிறுவனங்கள் உப்பி டியான விசயங்களைப் படிப்பிக்கிற நேரம் கவனிக்காமல் விட்டால், காலா காலத்துக்கும் நாங்கள், எங்களுக்குப் பின்னால வாற ஆக்களெண்டு எல்லாருமே அடுத்த நாடுகளில தான் தங்கியிருக்க வேண்டி வந்திடும். இண்டைக்கு பாலம் கட்டிறதுக்கு நாங்கள் சிங்கள இஞ்சினியர்மாரைத் தான் நம்பியிருக்க வேண்டியிருக்கு. வீடுகள் கட்டிறதுக்கும் ஆட்கள் மட்டுமட்டாத்தானிருக்கினம். சுதும லையில பள்ளிக்கூடக் கட்டடம் திருத் தப்படாமல் பொறிஞ்சு கொட்டிண்டு 13 படிக்கிற சின்னனுகள் காயப் பட்டிட்டினம். O/L எடுத்த பிள்ளை யளும் போதிய ஆசிரியர் இல்லை, பல்கலைக்கழகம் போற அளவுக்கு படிக்கிறது கஷ்ரம் எண்டு ஒவ்வொரு காரணங்களைக் காட்டிக்கொண்டு, maths, science தெரிவு செய்யி றதை கைவிடுகினம். உப்பிடியே போனால் நாளைக்கு தேவையான கன பாடங்களுக்கும், பணியளுக்கும் துண்டற ஆக்கள் கிடைக்காம லெல்லே போயிடும். ஆகவே எங்கை யாவது 3-6 மாசத்துக்கு முறை சாராக் கற்கைநெறியள் போதிக்கப் பட்டால் விடாமல் அதுகளைப் படியுங்கோ !

இப்பை பல்கலைக்கழக மட்டத்தி லையும் விவசாயம்-மீன்பிடி எண்டு 1 வருச டிப்ளோமா பாடத்திட்டங் களை அறிமுகப்படுத்தியிருக்கினம். டிசம்பர்-26ஆம் திகதி அழிச்ச எங்கட 20ஆயிரம் பேருக்கு மேற்பட்ட சனங் களை நினைச்சுக்கொண்டு, தேவை யான வெவ்வேறு துறையளையும் படிச்சு பாவிக்கோணும் எண்டொரு வெறியோட, படிக்கப் பாருங்கோ! எங்கடசமூகத்திலை தொய்வு நிலை இருக்கிறதுக்குக் காரணம் நாங்கள் ஒவ்வொருத்தரும் தான்! அத்தியாவசியமா இருந்தாலும், ஒரு சில தொழிலுகளை, அதுக ளுக்கான படிப்புகளை மட்டமாக நினைக்கிறது. பேந்து அந்தத் துறையில ஆக்கள் குறைஞ்சாப்பிறகு அதால பாதிக்கப் படிறதும் நர்ங்கள் தான் ! இந்த நிலமையை மாத்தி, ஒரு புரட்சி செய்யிறதுக்கு சில நேரங்களில எனக்கு சில குறுக்கு வழியள் ஐடி யாக்களா தோன்றும். என்னண்டால் அந்தக்காலத்தில பாருங்கோ சுயம் வரம் எண்டொரு விசயம் இருந்தது. சீதையைக்கூட ராமன் வில்லை முறிச்சுத்தான் மணம் முடிச்சவர். எட உருப்படியாக் கிடந்ததை என்னத் துக்கு அந்தாள் நாச மாக்கினது எண்டெனக்கு தெரியாது. ஏதோ ஒரு அவசரத்தில தலைகால் தெரியாமல் கட்ஸைக் காட்டுவோம் எண்டு சிவ தனுசை முறிச்சது உங்களுக்கெல் லாருக்கும் தெரிஞ்ச விசயம் தானே ! அதே விசயத்தை நல்ல நோக்கங் களுக்காகவும் பாவிக்கலா மல்லோ! ஐடியாவைக்கேளுங்கோ! உந்த முன்னாலையும், பின்னாலையும் திரி யிற ஆக்களுக்கு சொல்லலாம் : படகுக்கட்டுமானத்தை, கடல் அனர்த தவியலை, நவீன விவசாயம் எண்டு ஒண்டைப் படிச்சுக்கொண்டு வாரு மெண்டு சொன்னால், பொழுது போக்கோ, உண்மையான நேசமோ எண்டும் அறியலாம் : கூடவே சமுதா யத்துக்கும் பிரயோசனம். என்னவோ பாருங்கோ துறைசார் நிபுணத்துவத்தை வளர்க்கிறதுக்கான என்ரை அறிவுக் கெட்டின அவசர ஐடியா உதுதான். ஆனால் அந்தக்காலத்து வில்லன் வீரப்பா மாதிரி கன பொடியளின்ரை நிணைப்பில மண்ணைப்போடிற என்ரை இந்த ஐடியா பரவலாக பிரதியிடப் படோணும். அதுகும் ஊருலகத்தில இருக்கிற சாவித்திரி, சரோஜாதேவி ...சேச்சே. . என்ரை காலத்திலையே நிக்கிறன்...சிம்ரன், சிநேகாக்கள் இந்தத்திட்டத்துக்கு ஆதரவு தந்தால் தான் சரிப்படும். உந்த சுனாமியால வேற கிட்டத்தட்ட 73 ஆயிரம் மீனவக குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின் றன.. கரையோரத்தை அண்டிய விவ சாய நிலங்களும் உவர்நீர் புகுந்து அறியா யமாப்போச்சிது. எல்லாத்தை யும் கொஞ்சம் யோசிச்சுசெயற்படுங்கோ!

(18 ஆம் பக்கம் பார்க்க..)

# கவிதை குறித்த கதையாடல்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இதிகாசங்களும் புராணங்களும் இன்று கட்டுடைக்கப்படுகின்றன. அவை இப்போது மறு வாசிப்புக்குள்ளாகும் நிலை பிறந்துள்ளது. இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? நம்பிக்கைகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதைத்தானே. அன்றைய நம்பிக்கை அந்தப் படைப்புகளை மனங்களில் நிலை நிறுத்தியது. இன்றைய கேள்விகள் அவற்றை மறு வாசிப்புக்கும் மறு பார்வைக்கும் தூண்டுகின்றன. இங்கே நிகழ்ந்திருப்பது அறிவியல் வளர்ச்சி. சிந்தனை விரிய விரிய புதிய கண்ணோட்டங்களும் நிலைப்பாடுகளும் பிறக்கும். அதுவிதி. நமது கவிதையும் வாழ்க்கையும் மதிப்பீடுகளும் எண்ணங்களும் கருத்தும் இன்று கொள்கிற அழுத்தமளவுக்கு பின்னாளில் இருக்குமென்றில்லையே.

இன்றைய வாழ்க்கை இப்போது முக்கியமானதொன்று அவ்வளவுதான். அது இப்போதையும் கடந்து பிறபோதுகளுக்குரியதாக விரிந்திருக்கவேண்டும். இந்த விரிவில்தான் சரித்திரம் பலம்பெறுகிறது. வரலாறு நகர்கிறது. காலம் முகம் கொள்கிறது.

சகல விரிவுக்கும் மனதில் இடம் வேணும். பிரபஞ்சத்தையும் விட மனம் பெரியது. அது எவ்வளவுக்கும் விரியக்கூடியவாறான நெகிழ்ச்சியுடையது.

இந்த நெகிழ்ச்சியும் விரிவும் இணைந்த கலவையாக வாழ்க்கை இருக்கவேணுமென்பதே படைப்பு.

படைப்பினுள் சூழ்ச்சிகளும், குரோதங்களும் இருத்தலாகாது. இன்று கட்டுடைப்புச் செய்யப்படும் புராணங்களினுள்ளிருப்பவை குரோதங்களும், சூழ்ச்சிகளும், வன்மமும்,புறக்கணிப்பும், ஒடுக்குதல்களுமே. பதவக்கீதை இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

ஜெயமோகனின் 'பத்ம வியூகம்' என்ற குறுநாவல் மகாபாரதத்தையும், கீதையையும் விசாரணை செய்கிறது. பத்ம வியூகம் எழுப்புகிற கேள்விகள் முக்கியமானவை. பத்ம வியூகத்தின் பரப்பெல்லை சிறியதாயினும் மகாபாரதத்தின் ஒரு முக்கியமான பகுதியின் மீதும் கீதையின் அடிப்படையின் மேலும் தூக்கலான எதிர்வினைகளை வைத்துள்ளது என்பது கவனத்திற்குரியது.

ஆனந்த்தின் 'நான்காவது அணி' குறுநாவல் கிறிஸ்துவின் வரலாற்றையும் படிமத்தையும் வேறு விதமாகப் புரட்டிப்போடுகிறது. அது படிமங்களும் நம்பிக்கைகளும் உருவாக்கி வைத்திருந்த வாழ்க்கையை நெருக்குதலுக்குள்ளாக்குகிறது. இந்த மாதிரியான சிந்திப்பு ஒரு வகையில் பண்பாட்டு நெருக்கடியையும் ஏற்படுத்தும். வாழ்வின் முகத்தையும் மாற்றும். அதற்கே சிந்தனையும் படைப்பும்.

அகலிகையை புதுமைப்பித்தனும், ஞானியும், சம்பந்தனும் ராமன் அப்துல்லாவும் இன்னும் பிறரும் பார்த்த விதங்கள் வேறு வேறானவை.

இப்படிப்பல நிகழ்ச்சிகள் இப்போது தொடருகின்றன.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததாக ஒரு தரப்புக் கூறுகிறது. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்க முதலே அங்கே அமெரிக்கா இருந்தது என்று சொல்லி அந்தக்கண்டுபிடிப்பை இன்னொரு தரப்பு மறுக்கிறது.

எங்கே பிரச்சினை நிகழ்த்திருக்கிறது என்று பார்த்தால் இரண்டு தரப்பிலும்தான். உண்மையில் கொலம்பஸ்ஸின் நோக்கம் எதுவோ அதுவே ஏற்படுத்திய விளைவுகள் ஆயின. விளைவுகளைப் பார்த்தால் பிரச்சினை கொலம்பஸ்ஸிலும் அவரது தரப்பிலும்தான் என்பது தெரியும்.

ஒன்றின் விளைவு எதிர்மறையாகவும் வளர்முகமாகவும் இருக்கும். அது அதன் நோக்கத்தைப் பொறுத்தது.




என்னுடைய கவிதைகள் அடிப்படையில் எந்தத்தன்மையில் இருக்கின்றன என்று முடிவற்று விவாதிக்கிறார்கள் என் றால் அவரவர் தத்தமது நோக்கு நிலையிலிருந்தே அவற்றைப் பார்க்கிறார்கள் என்றே நினைக்கிறேன்.

இப்போது சற்று ஓய்வெடுத்து தண்ணீரைக் குடித்துவிட்டு வெளியே போய் ஒரு சுற்றாக முற்றத்தில் உலாத்திவிட்டு மீண்டும் பேச்சைத் தொடங்கினார். கந்தன் டேவிற்கலா. அவர் நடந்தபடியே கதைக்கிறார். அது சிறு நடை.மெல்லிய உலாத்தல், மெதுமையான மஞ்சள் வெயில், மர நிழல்கள் காலிலும் மேலிலும்.

பேச்சு இடையறாமல் தொடர்கிறது. ஜெயமோகன் விஷ்ணுபுரம் நாவ லில் வாசிப்பாளரை நோக்கிக் கேட் டது இங்கே கவனிக்கத்தக்கது. படைப்பை வாசிப்பாளர் தம்மை நோக்கிச் சுருக்கிவிடாமல் படைப்பு விரிந்து செல்லும் வழிகள் தோறும் நீங்கள் பயணம் செய்யுங்கள் என்ற இறைஞ்சுதலுரை அது.

படைப்பின் வழி பயணம் செய்யும் வாசகமுறை நம்மிடையே குறைவு. தத்தமது அளவுகோல்கள், நிலைப்பாடுகளின்படி நின்றே படைப்பை அணுகும்போக்கு வளர்ந்திருக்கிறது.

இது படைப்பை இயல்போடும் சரியாகவும் அணுகவிடாது.

இவ்வாறு பிடிவாதத்தனமாக நின்று தம்மை நோக்கிப் படைப்பைப் பார்க்கும் போக்கு ஒரு வகையில் அதிகாரமும் குருட்டுத்தனமும் உள்ளது. அதிகாரம் என்பதே குருட்டுத்தனம்தான்.

தத்தமது நோக்கம், தேவை, புரிதல், ஈடுபாடு என்பவற்றை அடிப்படையாக வைத்தே விஷ்ணுபுரத்தை மட்டுமல்ல சகல படைப்புக்களையும் அணுகியிருக்கிறார்கள் பலரும்.

மாக்ஸை புரிந்து கொண்டிருப்பதும் அறிந்து வைத்திருப்பதும் கூட இப்படித்தான் என்றொரு நண்பன் சொன்னது இங்கே ஞாபகத்திற்கு வருகிறது.

பெரியாரைப் பலரும் விளங்கி வைத்திருப்பதும் கூட இப்படித்தான். இதில் குறிப்பாக திராவிடக்கட்சிகளின் கொச்சைத்தனமான அணுகுமுறைகளை கவனித்துப் பார்க்க வேணும்.

எல்லாவற்றுக்கும் அடிப்படையில் அரசியல் இருக்கிறது. அரசியல் வாழ்க்கை முறையிலிருந்து விலகியபோதே அது நெடிலடிக்கத் தொடங்கிவிட்டது.

வாழ்வை ஒழுங்குபடுத்து வதற்கான ஒரு வழிமுறையே அரசியல். அது வாழ்வை ஒழுங்குபடுத்துகிறது என்பதை விடவும் பண்படுத்துகிறது எனலாம். ஆனால் இன்று நடைமுறை வாழ்க்கையின் மதிப்பீட்டில் அரசியல் என்ற சொல் உணர்த்துகிற பொருள் அருவருப்பூட்டுமளவுக்கு கேவலப் படுத்தப்பட்டுள்ளது.

வாழ்க்கையைத் தோற்கடிப்பதற்கான ஒரு மூலக்கருவியாக அரசியல் இன்று மாற்றப்பட்டுள்ளது. விதிவிலக்காக இதைமாற்றி வாழ்வை மீட்பதற்கான ஒரு கருவியாக அரசியலை பயன்படுத்தும் இன்னொரு நோக்கிருக்கிறது. சிறு அளவிலேனும் அதுவே ஆறுதலளிக்கிறது. ஆனால் இது மெல்லியது; மின்னல் போன்றது.

இப்படிப்பல நிகழ்ச்சிகள் தொடருகின்றன. பார்வைகள், எண்ணங்கள், அபிப்பிராயங்கள், எல்லாம் எல்லாவற்றையும் புதுப்பிக்கின்றன. இந்தப்புதுப்பித்தலில் எழுச்சியுமுண்டு, வீழ்ச்சியுமுண்டு.

ஆனால் ஒன்று, படிமங்களின் மீது கேள்விகள் எழுந்துள்ளன என்பது கவனிக்கவேண்டிய உண்மை.

மதிப்பீடுகள் நெருக்கடிக்குள்ளாகி வருகின்றன. மதிப்பீடுகளை உருவாக்கியதும் மனிதன். அதை நெருக்கடிக்குள்ளாக்குவதும் மனிதனே.

ஒரு அனுபவம் மதிப்பீட்டையும் படிமங்களையும் நம்பிக்கையும் உருவாக்குகிறது. இன்னொரு அனுபவம் அவற்றை குலைத்துப் போடுகிறது. ஒரு காலகட்டத்தின் நம்பிக்கை அல்லது நேற்றைய மதிப்பீடுகள் இன்று துருப்பிடித்து உதிர்கின்றன.

வாழ்க்கையின் நெருக்கடியும் அறிவின் விரிவும் எல்லாவற் றையும் விசாரணை செய்யத் தூண்டுகின்றது. இது அறிவின் யுகம். அறிய விரும்

**கருணாகரன்**

பாதர் எந்தப் புள்ளியில் இருந்தாலும் எந்தப் பீடத்திலிருந்தாலும் தூக்கியெறியப்பட்ட சருகாகி விடுவர் என்பதால்தான் அறியும் முனைப்பு எங்கும் பரவியுள்ளது.

எல்லாவற்றையும் அறியும் ஆவலோடு இருக்கிற மனிதன் மனங்களை அறியாமல் போய்விடுகிறான். அவன் மனங்களை அறிவதைப் பற்றிபெரிதாகக் கவனம் கொள்ளவும் இல்லை. மனங்களை அறிந்தவர் சொன்னமெய்களை உணரவும் இல்லை. நான் இங்கே குறிப்பிடுவது பொதுநிலை சம்பந்தப்பட்டது. வாழ்நிலையுடன் தொடர்புடையது.

கவிதைகள் பற்றிப்பேச முற்பட்ட நீங்கள் இப்படிப் பலவிடயங்களைப் பற்றியும் பேசிக்கொண்டு போகிறீர்களே என்று இடையில் மறித்துக் கந்தன் டேவிட் கலாவிடம் கேட்டேன்.

கவிதை என்றால்என்ன? படைப்பின் அடிப்படைஎன்ன? எதையோ பேசுதல்,வெளிப்படுத்தல், புரிந்து கொள்ளக் கோருதல், கவனப்படுத்தல் என்பதுதானே!

கவிதை எதனிலிருந்து பிறக்கிறது? வாழ்க்கையிலிருந்து அல்லவா! வாழ்க்கை எவற்றிலெல்லாம் வேர்கொண்டிருக்கின்றதோ அவற்றையெல்லாம் இங்கே பேசுவது தவிர்க்க முடியாதது.

இது ஒன்றை-கவிதையை நேரடியாக விளங்கிக்கொள்வதற்குப் பிரச்சினையாக இருக்குமே என்ற போது கந்தன் டேவிற்கலா அதனைப் பற்றிச் சொல்கிறார் இப்படி.

அடிப்படைகளையும், உண்மைகளையும் அறியவிரும்பாத போக்கு இன்று பெருகிவிட்டது. இப்போது எல்லாவற்றிலும் லாப நோக்கு என்றாகிவிட்டது. அதனால் எது தேவையோ அதைமட்டும் அப்போது-அந்தத் தருணத்துக்குரிய அளவுக்கு எடுத்துக்கொள்வோம். பயன்படுத்துவோம் என்ற கொள்கை மலிந்துள்ளது.

இதனால் ஆழமாகவும் விரிவாகவும் எதனையும் தேட யாருக்கும் விருப்பமில்லை.

நேரிடை என்பது குறுகலான வழி. லாபத்தை மட்டும் நோக்கிய பாதை. இதேவேளை இதை உறவுத் தளத்தில் வெளிப்படையாக பயன்படுத்துவதில்லை யாரும். வாழ்க்கையின் தரிசனம், சிந்தனையின் விரிவு, அனுபவத்தின் திரட்சி பற்றிய கரிசனைகள் மங்கிவருகின்றன.

இங்கேதான் பிரதானமான கேள்விகள் படைப்பாளிகளுக்கும் சிந்தனையாளர்களுக்கும் எழுகின்றன.

அறிவு என்பது என்ன என்ற முக்கியமான கேள்விக்கு இன்னும் எவரிடமும் சரியான பதில் இருப்பதாக இல்லை.

தன்னை முன்னிலைப்படுத்தாத இதற்கு சரியான - உண்மையான நேரடிப்பதில் உண்டா?

இல்லையே. விளக்கங்கள் வேண்டுமானால் இருக்கலாம். விளக்கங்கள் எப்போதும் இட்டுக்கட்டும் நியாயங்களே. உண்மை எப்போதும் வெளிப்படையாக இருக்கும். அது தெளிவானது. நிறமற்ற சொல் அது. பூக்களையும் விட மிருதுவானது அதன் உணர்த்துகை. ஆனால் உண்மை கசப்பானதாகவும், ஆபத்தானதாகவும் அபாயமானதாகவும் முள்ளானதாகவும் பாரமானதாகவும் மாறியது எவ்விதம்?

இதுதான் புரியாத மிகப்பெரிய புதிர்.

அறிவு வளர்ந்திருக்குமென்றால், மனிதனுக்கு அறிவியல் வளர்ச்சி சிந்தித்திருக்குமென்றால் அவனிடம் அன்பும் கருணையும், இரக்கமும், நீதியும், நேசமும், உதவும் மனமும், புரிந்துணர்வும் பிறந்திருக்குமே.

அறிவு பெருத்தால் பிரச்சினைகள் குறைந்துவிடும். அன்பாலானதோர் உலகம் இவ்வையகத்தில் கனியுமே. அறிவு எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை எட்டியிருக்குமே. அறிவு எப்போதும் வாழ்க்கையை பண்படுத்தி மேம்படுத்தி இருக்குமே.

ஆனால் இவ்வாறெல்லாம் நிகழ்திருக்கிறதா?

மனிதன் நிம்மதியிழந்து தவிப்பது வரவரக் கூடுகிறது. ஆறுதலும் ஓய்வுமில்லாமல் வீதிகளிலும் பணியிடங்களிலும் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கை நமக்குப் பாவச் சொத்தாகக் கிடைத்துள்ளதே.

இது பேரவலமில்லையா?


## இலக்கியப்போட்டி - 2005

**கப்டன் வானதியின் பதின்னான்காம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கப்டன் வானதி வெளியீட்டகம் நடாத்தும் கவிதை,சிறுகதை,கட்டுரை,குறுநாவல் மற்றும் ஓவியப்போட்டிகள்.**

### போட்டி நிபந்தனைகள்

- படைப்புக்கள் தமிழர் தேசிய விடுதலை சமூகவிடுதலை என்பவற்றை கருப்பொருளாகக் கொண்டமைதல் வேண்டும்.
- கவிதைகள் மரபுக்கவிதைகளாகவோ, புதுக்கவிதைகளாகவோ அமையலாம். கவிதை 60 வரிகளுக்கு மேற்படாமல் அமையவேண்டும்.
- சிறுகதைகள் ஆறு பக்கங்களுக்கு(தட்டச்சுத்தாள்) மேற்படாமல் அமைதல் வேண்டும்.
- குறுநாவல்கள் 60 பக்கங்களுக்கு(தட்டச்சுத்தாள்) மேற்படாமல் அமைதல் வேண்டும்.
- கட்டுரைகள் பத்துப்பக்கங்களுக்கு(தட்டச்சுத்தாள்) மேற்படாமல் அமைவதோடு தரவுகள் உண்மையானதாக இருத்தல் வேண்டும்.
- ஓவியங்கள் தட்டச்சுத்தாளில் மட்டும் வரையப்படுதல்வேண்டும்.
- ஒருவர் எத்தனை படைப்புக்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- படைப்புக்கள் அனைத்தும் தட்டச்சுத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே தெளிவான கையெழுத்திலோ அல்லது தட்டச்சுப் பதித்தோ அனுப்புதல் வேண்டும்.
- அனுப்பும் படைப்புக்கள் வேறு வெளியீடுகளில் வெளிவந்தவையாகவோ வேறு போட்டிகளுக்கு அனுப்பப்பட்டவையாகவோ இருத்தல் கூடாது.
- அனைத்துப்படைப்புக்களையும் தபால் மூலமே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- படைப்பாளிகளின் பெயர் முகவரி என்பவற்றை தெளிவாக தனித்தாளில் எழுதி இணைக்கப்படல் வேண்டும்.
- நாட்டின் எப்பகுதியைச்சேர்ந்தவர்களும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- நிபந்தனைகளுக்கு அமைவாக வந்துசேரும் படைப்புக்களே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- போட்டிகளில் பெண்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
**படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:**
**இலக்கியப்போட்டி - 2005,**
**கப்டன் வானதி வெளியீட்டகம்,**
**இல-61, கனகபுரம்,**
**கிளிநொச்சி.**

பரிசுகளை வெல்ல
இன்றே தயாராகுங்கள்:
போட்டி முடிவுத்திகதி
31-03-2005

(சி-11521)



மாசு அடைந்த நீரை அருந்துவதாலும் ஏனைய சுகாதாரக்குறைபாடுகள் காரணமாகவும் உலகளவில் தினசரி நான்காயிரம் பிள்ளைகள் இறப்பதாக உலக சுகாதார நிபுணர்கள் தெரிவிப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இன்று உலகில் மாத்திரம் அல்ல எமது பகுதியிலும் கூட சுத்தமான நீர் என்பது பிரச்சினைக்குரிய ஒன்றாகவே உள்ளதை யாவரும் அறிவர்.

உண்மையில்

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

மேற்குறித்த நான்காயிரம் பிள்ளைகளுக்குள் எமது பகுதிக்குரியவர்களும் அடங்கியுள்ளார்களா என்பது தெரியவில்லையாயினும் அவ்வாறான ஒரு நிலை எமது பிரதேசத்தில் வரக்கூடாது. வராமல் தடுக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

எங்கள் தாயக மண்ணில் பரிபூரணமான விடுதலைக்கு போராடும் நாங்கள் எங்கள் மண்ணின் வளங்களை பாதுகாத்து மேம்படுத்த வேண்டிய கடமைப்பாட்டுக்கு உரியவர்கள் ஆகின்றோம்.

நீர்வளம் எங்கள் வளங்களில் பிரதானமானது என்பது இந்தப்பகுதியில் பலதடவை சுட்டிக்காட்டுவதன் மூலம்தான் நீங்கள் உணரவேண்டியது அல்ல.

எங்கள் பிரதேசங்களில் கடும் கோடை வந்துவிட்டால் கணிசமான மக்கள் தூய்மையான தண்ணீர் இல்லாமல் படும் அவதியை எல்லோரும் உணர்வர்.

எனினும் அதனை கருத்திற்கொள்ளாமலே எங்களில் பலர் நீரை வீணாக்குவதிலும் நீரை மாசுபடுத்துவதிலும் முன்னணி வகிக்கின்றனர்.

கணிசமானோர் நீர் செல்லும் வாய்க்கால்களையும் சிறிய தளங்களையும் கேணிகளையும் குப்பை கொட்டும் இடங்களாகவும் கழிவுகளைச் சேகரிக்கும் பகுதிகளாகவும் கணித்து செயற்படுத்துகின்றனர்.

இதனால் உண்டாகும் விளைவுகளை நாங்கள் உணர்வதில்லை. அதனாலேயே நீர்வளத்தை நாங்கள் எவ்வளவு தூரம் மாசுபடுத்துகின்றோம் என்பதைக் கூட அறிந்துகொள்வதில்லை.

தூய்மையான நீர் எங்களின் வாழ்வாதாரம் மாத்திரம் அல்ல எங்கள் எதிர்காலத்தை நிச்சயிக்கும் காரணியும் கூட.

# கிராமிய அபிவிருத்தி வங்கி

சிறிலங்கா இராணுவத்தின் கெடுபிடியால் அழிந்து போன எமது பிரதேசத்தில் மக்களின் வாழ்வாதார நிறுவனமாக 14.03.1993 ஆம் ஆண்டு எமது மண்ணிலே கிராமிய அபிவிருத்தி வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வங்கியானது மக்கள் அதிகமாக செறிந்து வாழும் இடங்களில் தமது கிளை நிறுவனங்களை நிறுவி வருகிறது. இதனால் மக்கள் பல வழிகளில் நன்மை பெற்று வருகின்றனர்.

கிராமிய மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் முகமாக பல இடங்களில் தனது கிளைகளை நிறுவி அம்மாவட்டங்களுக்கிடையே சேமிப்புப்பழக்கங்களை ஊக்குவிப்பதற்காக பல சேமிப்பு வைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியதோடு கிராமிய பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்காக அம்மக்களுக்கு சுயதொழில் கடன், விவசாயக்கடன், தொழில்துறை மேம்பாட்டுக்கடன் போன்ற பல்வேறு கடன்களினூடாக அவர்களின் முயற்சிக்கு வலுவூட்டி வருகிறது.

மேலும் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் வங்கி அலுவல்கள் வங்கியின் வெளிக்கள அலுவலர்கள் நேரடியாகச் சென்று மக்கள் மத்தியில் வங்கிப்பழக்கவழக்கங்களை முக்கியப்படுத்துவதற்காக பொது இடங்களில் ஒன்றுகூட வைத்து பல கருத்துக்களை வழங்கி சேமிப்புக் கடன் வழங்கல் போன்ற சேவையினைச் செய்து வருகின்றனர்.

எமது பிரதேசத்திலே கஸ்ரப்பட்ட குடும்பங்களுக்கு அதாவது அன்றாடம் உழைத்து வாழும் மக்களின் சிறுவர்களிடையே 2003 ஆம் ஆண்டு "தளிர்" சேமிப் புக்கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து 18 மாதங்களுக்குள் மக்கள் மத்தியில் மிகப் பெரிய அளவிலான வரவேற்பைப் பெற்று இன்று சிறப்புடன் செயற்பட்டு வருகிறது.

அத்துடன் வங்கிப்பணியாளர்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று மாணவர்கள் மத்தியிலேயே "தளிர்"சேமிப்பால் ஏற்படும் அனுகூலங்களை எடுத்துக்கூறி சேமிப்பை ஊக்கப்படுத்தி வருகின்றார்கள். அத்துடன் சேமிப்பில் இணைந்துள்ள மாணவர்கள் புலமைப்பரிசில்•பரீட்சையில் சித்திபெற்றவுடனும் மற்றும் அதிகூடிய சேமிப்பாளர்களுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்பட்டு வருகிறது. வறுமை நிலையால் கல்வி பாதிக்கப்படும் சில மாணவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் கல்வியைத் தொடர்வதற்காக மாதாந்தம் தலா 200 ரூபா வழங்கப்பட்டு வருவதோடு அறக்கொடை நிறுவனத்தின் உதவியுடன் இம்மாணவர்களுக்குப் பள்ளிச் சீருடையும் வழங்கியிருக்கிறது.

மேலும் இவ்வங்கியானது முள்ளியவளை, பூநகரி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் தனது கிளைகளை நிறுவி உள்ளது. விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் முகமாக உழுபொறி வங்கியால் கொள்வனவு செய்து கட னாக வழங்கப்பட்டது. உழுபொறிகள் வாங்குவதற்கு கடன் உதவியும் வழங்கியுள்ளது. மின்சார வசதியற்ற பிரதேசங்களில் வாழும் மக்களின் நன்மை கருதி வீடுகளுக்கு ஒளியூட்ட சூரியமின்கலத்தொகுதியை கடன் அடிப்படையில் வழங்கியிருக்கிறது.

விவசாயிகளைப் பொறுத்த மட்டில் இவ்வங்கி ஆரம்பித்த காலத்தில் இருந்து விவசாயக் கடனாக 14254 பயனாளிகளுக்கு 141275662 ரூபா கடந்த காலங்களில் வழங்கியுள்ளது. இது மட்டுமல்ல சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு வங்கி ஆரம்பித்த காலத்தில் இருந்து கடந்த காலங்களில் 9898 பயனாளிகளுக்கு 112196114 ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

இந்த வருடம் மக்களின் நலன் கருதி நிதிப் பற்றாக்குறையை நீக்கும் முகமாகவும் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடனும் மக்களுக்கான கடன் வழங்கலை கிராமிய அபிவிருத்தி வங்கி வருடாந்தம் மேற்கொண்டு வருகின்றது. இந்த வகையில் 2005 சனவரி மாதத்தில் 183 குடும்பங்களுக்கு 3629830 ரூபா கடனாக வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் 2004/2005 காலபோக நெற்செய்கை கொடுப்பனவாக 106 பயனாளிகளுக்கு 919955 ரூபாவும் சுயதொழில் கடனாக 53 பயனாளிகளுக்கு 1287500 ரூபாவும் தொழில் துறை மேம்பாட்டுக்கடனாக 8 பயனாளிகளுக்கு 1030000 ரூபாவும் ஏனைய கடனாக 16 பயனாளிகளுக்கு 392375 ரூபாவும் வழங்கப்பட்டது.

**சிவகமலா**

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் அந்தக்காலத்திலை சின்னப்பிள்ளையா யாழ்ப்பாணத்திலை இருக்கேக்கிள்ளை எங்கட மாமா ஒராள் கிளிநொச்சியில இருந்து எங்களைப் பார்க்க வரேக்கிள்ளை மூட்டை நிறைய கஜூ கொண்டு வருவார். அதுக்குப் பிறகு சொல்லவே வேணும். அடுப்புக்குள்ளை சூடாய் தணல் இருந்த நேரமெல்லாம் இரவு-பகலெண்டு கஜூ தான் வெடிச்சுக் கொண்டிருக்கும். அப்பை மனசுக்குள்ளை நினைச்சனான், 'சே! பிறக்கிறதெண்டால் கிளிநொச்சியில பிறக்கோணும். மூட்டை மூட்டையாய் கஜூ சாப்பிடலாம்' எண்டு. ஆனால் இப்பை கடையளில போய் ஒருக்கால் பாருங்கோ ! அந்த கஜூ பக்கற்றைத் தொட்டாலே பேர்ஸ் காலியாகி விடும். ஏனெண்டால் எல்லாம் இறக்குமதி. எங்கட சனத்துக்கென்னவோ வெளிநாட்டு packing தான் பிடிக்குமாம். ஐரோப்பா- கனடாக்காசு, யப்பான் வீட்டுபகரணங்கள், வடஇந்திய நடிகையள் மாதிரி (?) மணப்பெண்கள் எண்டு எங்கட போக்கு உருப்படாமல் உப்பிடியே தொடரலாமோ? நாங்கள் எங்கட சுயத்தோட நாங்களாக வாழவேணுமெண்டு நாங்கள் ஒவ்வொருத்தரும் விரும்போணும் எண்டுதான் பிள்ளையள் விரும்பிறன். உங்களுக்குச் சிலநேரம் கோபம் வரும். இவர் ஆர் மண்ணாங்கட்டியர்? பச்சோந்தியா ஒவ்வொரு நேரமும் ஒவ்வொண்டைக் கதைச்சுக்கொண்டு! எண்டு நீங்கள் கோவப்படிறதுக்கு உங்களுக்கு [illegible] உரிமையுண்டு. ஆனாலும் கோவப்பட்டு முடிச்சாப்பிறகு ஆறு அமர அமைதியா இருந்து, நான் சொல்லிறதிலை இருக்கிற நியாயத்தைப் புரிஞ்சு கொள்ள முயற்சியுங்கோ ! அதைத் தாண்டியும் என்னிலை பிழை இருக்கிறதா நீங்கள் நம்பினீங்களெண்டால், எனக்கு எழுதுங்கோ ! உங்களுக்கு நான் ஒரு கதை சொல்லிறன் . . .

கொஞ்சக்காலத்துக்கு முன்னால எங்கையோ ஒரு இடத்தில ஆரோ ஒரு பொடியன் தனக்கு ஓய்வான நேரத்தில கொஞ்சப்பிள்ளையளுக்கு பாடம் சொல்லிக்கொடுத்திச்சாம். தனக்கெண்டு எந்தவித லாபத்தையும் எதிர்பார்க்காமல், நல்ல விருப்பத்தோட அதைச் செய்திச்சாம். ஒரு சோதனை முடிஞ்சிது. ஒவ்வொருத்தரும் தங்கட தங்கட நிலைக்கேற்ற மாதிரி திருப்திகரமா புள்ளியள் எடுத்திச்சினம். 'எல்லாரும் பிரச்சினையில்லை, நல்லா செய்திருக்கிறீயள். ஆனால் ஒவ்வொருத்தரும் முதலெடுத்த புள்ளியளை விட அடுத்தமுறை அதிகமாக எடுக்கோணும். முதலாவதா வாறதோ, முப்பதாவதா வாறதோ இல்லை இஞ்சை முக்கியம். முதல் நீங்கள் இருந்த நிலையை விட படிப்படியா முன்னேறோணும். விளங்காததை வெட்கப்படாமல் கேளுங்கோ! விளங்கினதை வீட்டில திரும்பப்படியுங்கோ!', எண்டு சொல்லப்பட்டிது. அடுத்த முறையும் சோதனை நடந்திச்சிது. பெரிய அளவிலான பாய்ச்சலைக் காணேலாமல் இருந்திச்சிது. 'மாஸ்ரர்! 75 காணாதோ ? '. 'போனமுறையும் உங்களுக்கு கிட்டத்தட்ட உவ்வளவு தானே ! எனக்கு நீங்கள் 50 எடுத்தாலும் பரவாயில்லை. ஆனால், அடுத்தமுறை 60 எடுக்கோணும். அதைத்தான் நான் எதிர்பார்க்கிறன்'. 'என்ன மாஸ்ரர் ஆகலும் தான் பேராசைப்படிறியள் !'. 'படிப்பு விசயத்திலை இந்த ஆசை நியாயமானது. அண்ணை என்ன சொல்லியிருக்கிறார்: 'திருப்திப்படிறது எங்கட முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையா ஆகிடும்' எண்டெல்லோ !. 'சரி ! தண்டனை தாங்கோ ! கை நீட்டிறம், அடியுங்கோ !'. அடுத்த வகுப்பிலை உங்களுக்கு நான் தண்டனை தாறன்'. அடுத்த வகுப்புநாள் வந்திச்சிது. 'நீங்கள் நல்லாப்படிக்கோணும் எண்டிறதுக்காகத்தான் மினைக்கெட்டு இஞ்சை வந்து போறன். உங்கட ஒவ்வொருத்தற்றை முன்னேற்றத்திலையும் எனக்கு ஆழமான பற்றிருக்கு. எங்கட ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒரு கடமை இருக்கு : தனக்கு அடுத்த தலைமுறைக்குத் தேவையான அடிப்படையளை அமைச்சுக்கொடுத்து, அவையளும் தங்கட கடமையைச் செய்யிறதுக்கு தயார்படுத்தி விடோணும். சத்தியமா நீங்கள் சரிவரச்செய்யாததுக்கு உங்களை அடிச்சு, வலிக்கப்பண்ணிற அளவுக்கு எனக்கு மனம் இல்லை. இருந்தாலும் தண்டனை தாறதுக்குத் தவற மாட்டன் 'எண்டிட்டு, முதல்நாள் இரவு வேணுமெண்டு இதுக்காகவே Hotplate அடுப்பில சுட்டுக்காயப்படுத்தின, கையில இருந்த ஆழமான எரிகாயங்களை அந்த விசர்ப்பொடியன் காட்டிச்சொல்லிச்சிது,' நான் உங்களைப் படிக்கச்சொல்லி நிர்ப்பந்திக்கேல்லை. விருப்பமெண்டால் அடுத்த முறை நீங்கள் பூச்சியமும் எடுக்கலாம். உங்களுக்கு அடிக்க மாட்டன். ஆனால், தண்டனைகள் தொடரும்'. சில ஆக்கள் அழுதிச்சினம், இன்னும் சில ஆக்கள் அடுத்தமுறை தங்களுக்கும் காயம் வைச்சுக்கொண்டு வந்திச்சினம். ஆனால் எல்லாருமே அடுத்த சோதனையில நல்ல முன்னேற்றம் (படிநிலை வளர்ச்சி) கண்டிருந்திச்சினம். (உண்மைச்சம்பவம்) மேல சொன்னதை எல்லா இடத்திலையும் நடைமுறைப்படுத்தினால் வாத்திமார், ரீச்சர்மார் எல்லாம் எரிகாயங்களோடை தான் திரியோணும் எண்டு நீங்கள் முணுமுணுக்கிறதும் எனக்கு கேட்கிது. இருந்தும் ஏன் அதைச் சொன்னனான் எண்டால், கவர்ச்சிகரமா எழுதிற கம்பன், வைரமுத்துவின்ரை சமாச்சாரங்களை எல்லாரும் ரசிச்சுப்புசிப்பினம். அங்கை நடக்கிறது திறமையான வியாபாரம். ஆனால் தான்தான் வாழிற சமுதாயத்திலை நடக்கிற அன்றாடங்களிலை திருத்தம் வேண்டி, தான் விடிற பிழையளையும் ஏற்றுத்திருத்திக்கொண்டு, வேதனையோட எழுதப்படுகிற எழுத்துகளைப் பொறுத்தவரையில (பொதுவாகச்சொல்லிறன்), தன்னோட எழுத்துக்குள்ளை குடியமர்த்துகிற கனவுகளை நேசிச்சு, அதுக்கு மனமறிஞ்சு இரண்டகம் செய்யாமல் எழுதிற நேரம் ஒரு 'தார்மீகத்திமிர்' வரும். அப்பிடியானவற்றை ஒரு உறவோட நோக்கோணும். 'என்ன இவர் எந்தநாள் பார்த்தாலும் நொட்டை சொல்லிக்கொண்டு' எண்டு விதண்டாவாதிக்காமல், உள்ளுக்குள்ளை இருக்கிற நியாயப்பாட்டை விளங்கிக் கொள்ளுங்கோ ! அடுத்த ஆட்களுக்கும் சொல்லுங்கோ ! திரும்பவும் சொல்லிறன் : குறை எழுத ஒரு பக்கம் போதும், நிறை எழுத 23 பக்கங்கள் காணாது. குறையளைத் தவிர்த்து நிறையளால நிறைஞ்சு நிமிர்ந்து நிப்போம்.

என்னும் ஒண்டேயொண்டு: 24 கிழமையா எழுதின விசயங்களுக்கு கருத்துச் சொல்லி ஊக்குவிச்ச ஆக்கள், நான் கேட்டவுடன படங்கள் கீறித்தந்தவை, இடையில விட்டிட்டு இருந்த நேரம் மறக்காமல் விசாரிச்சவை, தெரிஞ்சோ தெரியாமலோ ஊருலகத்தில நடக்கிறதுகளை எனக்கு முன்னால அவிட்டு விட்டவை, வயசு போன காலத்தில என்னால ஏலாத நேரத்திலயும் எனக்காக விசயங்களை உறுதிப்படுத்திச் சொன்னவை, கடைவழியில ஆரெண்டு தெரியாமல் கதைப்பிராக்கில கருத்துச்சொல்லி ஊக்குவிச்சவை எண்டு எல்லாருக்கும் என்னோட நன்றிகள். 'அப்ப விதண்டாவாதங்களோடை குறை சொல்லிற ஒருசிலருக்கு ஒண்டும் சொல்லேலையோ' எண்டு கேட்கப்போறீயள். ஐயோ உங்கட தொந்தரவு தாங்கேலாது. உதுக்குத்தான் சொல்லிறது 'குழந்தைப் பிள்ளையளோடையும், குட்டிநாயளோடையும் சகவாசம் வைக்கக் கூடாது' எண்டு. மற்றவையின்ரை கருத்துகளில இருக்கிற நியாயத்தை மதிச்சு, எங்கட மனச்சாட்சிக்கு அநியாயம் செய்யாமல் தேவையான விசயங்களை எழுதேக்கிள்ளை, போற்றுதல்-தூற்றுதல் பற்றியெல்லாம் யோசிக்கக்கூடாது. யோசிச்சுப் பாருங்கோ ! இண்டைக்கு அப்பு எண்டு அன்பு மழை பொழியிறியள் (சில சனங்கள் ஏரம்பு அண்ணை எண்டும் கூப்பிடினம். அதுதான் பாருங்கோ வயசு போனாலும் தோற்றத்தை இளமையா maintain பண்ணோணும் எண்டு சொல்லிறது). நாளைக்கே நான் மண்டையைப் போட்டிட்டால் 'சே ! பிரேதம் நாறிது, தூக்கிடா ! கெதியாக் கொண்டுபோய் எரிப்போம் ! ஆ . . பிணபாரம் கனக்கிது. அங்கை சவம் நூரப்பார்க்கிது. தலையில கட்டையைப் போட்டு பெற்றோலை ஊத்தடா ! சாம்பல் தான் மிஞ்சோணும்!' எண்டெல்லே நாளைக்குக் கதைப்பினம். புலிக்குப் புல்லாகலாம் அதுக்குப் பிறகு மண்ணுக்கு உரமாகலாம் ஆனால் தலையாக இருக்கோணுமெண்டு, நோய்காவியான எலியை நாடக்கூடாது! இது தான் எழுத்துக்கு நான் வரிச்சுக் கொண்ட வரைவிலக்கணம். சரி செல்லங்கள் ! கனக்க அறுத்திட்டன். வாறகிழமை சந்திப்பம்.

குமுதினி மிதக்கும் ஒஸ்ட்விச்.

என்ன புதியதான சொல் என திகைக்கவேண்டாம்.

ஒஸ்ட்விச் என்பது ஜேர்மனியை ஆண்ட ஹிட்லர் யூதர்களை படுகொலை செய்தவதை முகாம். அந்த வதை முகாமில் நடந்த மாதிரிதான் குமுதினியில் எமது மக்கள் சிங்களப்படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.தாம் கொல்லப்படும் வரை என்ன நடக்கப்போகின்றது எனத்தெரியாமலே குமுதினியில் மக்களின் படுகொலை நடந்தது. குமுதினி படுகொலை நடந்த விதம் எப்படி என்பதை முன்னர் பார்த்தோம்.இப்போது ஒஸ்ட்விச் கொலை பற்றி யூதர்களின் ஆவணம் ஒன்றிலிருந்து எடுத்துப் பார்ப்போம்.

அறுபது ஆண்டுகள் கடந்தோடிவிட்டன. ஆயினும் மனித குலவரலாற்றில் ஆறாத காயமாகவே இந்நிகழ்வு பதிந்துவிட்டது. உலகமே வெட்கித் தலை குனியும் அந்த நாளை பத்திரிகைகள் ,வானொலிகள், தொலைக்காட்சிகள் யாவும் முக்கியத்துவம் அளித்துப் பேசின. வளர்ந்து வரும் இளம் சந்ததியிடம் - மனிதகுல வரலாற்றில் நிகழ்ந்த அந்த அநீதியை மறக்கக்கூடாத ஒரு பாடமாகக் கையளிப்பதற்காகவும்,அவர்களை மனிதநேயம்மிக்கவர்களாக வளர்ப்பதற்காகவும் இந்த நாள் நினைவுகூரப் படுகிறது.இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில்,நாசிப்படையானது பல வதைமுகாங்களை உருவாக்கியுள்ளது. பல லட்சக்கணக்கான மக்களை, குறிப்பாக யூதர்களை உலகத்தின் பார்வையிலிருந்து மறைத்து

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 38




இரகசியமாக சிறையில் அடைக்கவும்,சித்திரவதை செய்யவும், கொல்லவுமாக அமைக்கப்பட்டதே இந்த வதை முகாம்கள்.இவற்றுள் போலந்து நாட்டில், ஜேர்மனியின் எல்லைக்கு அருகிலுள்ள ஒஸ்விச் என்ற நகரத்தில் 1940 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்ட வதைமுகாம் மிகவும் முக்கியமானது. இங்கு 1942 இற்கும் 1945 இற்கும் இடையில், பத்துலட்சத்திற்கும் மேற்பட்ட யூத மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 6 லட்சத்திற்கும் மேற்பட்ட ஏனையோர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் ஒஸ்ட்விச்சினுடைய பெயர் என்றென்றும் மறக்க முடியாததாக இருக்கிறது. அங்கே துன்பங்களும் அதைத் தொடர்ந்த மரணங்களும் பின்னிப் பிணைந்திருக்கின்றன.அம் முகாமில் யூத மக்களை அழிப்பதற்காகவென்றே நச்சுவாயு அறைகளும், இறந்தவர்களது உடல் களை எந்த அடையாளமுமின்றி எரிக்கக்கூடிய மின்சார அடுப்புக்களும் நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன. அந்நேரம் ஒரு ரயில் கூவலின் சத்தம் அந்த அமைதியை கிழித்துக்கொண்டு கேட்கும். அங்கு நாய்களின் சத்தத்தைக் கேட்கமுடியாது. அல்லது அந்த அவலத்துக்குட்பட்ட பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளை பிரிப்பதன் கதறல் ஒலிகளைக் கேட்கமுடியாது.

அமைதி மட்டும்தான் அங்கு குடியிருக்கும். அப்போது பொதுவாக யாருடைய மனக்கண்களிலும்,பல லட்சக்கணக்கான பெண்களையும்,ஆண்களையும் நாசிப்படைகள் மிருகங்களை அடைத்துச் செல்லும் ரயில் பெட்டிகளுக்குள் அனுப்பும் காட்சிகள்தான் விரியும். அப்படி அனுப்பப்பட்ட அம் மக்களுக்கு தாம் எங்கே கொண்டு செல்லப்படுகின்றோம் என்பது தெரியாது.அவர்கள் தங்களது குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்களாக, நிர்வாணமாக்கப்பட்டவர்களாக, தலை மொட்டையடிக்கப்பட்டவர்களாக, அழுதுகொண்டேயிருப்பவர்களாக, தொடர்ச்சியான உடல் வதைக்குட்பட்டவர்களாக, தாங்கள் வாழ்ந்த இடங்களை விட்டு பிரிக்கப்பட்டவர்களாக, பல கொடுமைகளை சுமந்து அந்த வதை முகாம்களுக்குள் அடைக்கப்பட்டார்கள்.

பின்பு அவர்கள் விஷவாயு மூலம் கொல்லப்பட்டார்கள்.

கடைசிவரை தாம் கொல்லப்படப்போகிறோம் என்பது தெரியாது ஒஸ்ட்விச்சில் யூதர்கள் படுகொலையானதைப்போல சில அடி தூரத்துக்குள் தம் சக மக்கள் கொல்லப்படுவது தெரியாது கொல்லப்பட்ட அவலம், 6 மாத குழந்தை பறித்தெடுக்கப்பட்டு குத்திக் கொல்லப்பட்ட கொடுமை குமுதினியில் நிகழ்ந்தது.

யூதமக்களின் படுகொலையை நினைவில் வைத்திருக்க அந்த வதை முகாம் இன்றும் பராமரிக்கப்படுகின்றது. நமது தாயகத்திலும் இன்றும் வாழும் படுகொலை வரலாற்றுச்சின்னம் குமுதினி. அது மிதக்கும் ஒஸ்ட்விச் தானே.குமுதினியை நாம் நமது நினைவுச்சின்னமாகக் காக்க வேண்டும். யாழ் பொது நூலக அழிப்பு மறைக்கப்பட்டது போல விடக்கூடாது. எம் உயிர்களை பலிகொண்ட அந்தக் கொடுமை மறக்கப்படக்கூடாது. எம் மக்கள் படுகொலை செய்யப்பட்ட நினைவுச்சின்னங்கள் வேறு எமக்கு இல்லை.

துருவன்




# இலங்கையின் முது மனிதர்கள்

பெருங்கற்பண்பாடு ஆரம்பமான கி.மு 1000 ஆண்டுதான் தமிழரின் வரலாறா- இல்லை. தமிழரின் வரலாறில் நவீனத்துவம் பெற்ற உயர்ந்த காலம் தான் கி.மு 1000இல் ஆரம்பமானது. அந்த ஆண்டில் அவர்கள் வாழ்வை அறிவியல் மயப்படுத்தி - நவீனமாக்கினர். மட்பாண்டங்களை சில்லுகள் மூலம் செப்பமாக செய்ய ஆரம்பித்தது அக்காலத்தில். இரும்பை கையாளத் தொடங்கியது அக்காலம். நீர்த்தேக்கங்களாக குளங்களை அமைத்து வேளாண்மையை நவீனப்படுத்தியது.

கட்டியெழுப்பியது என்ற சிறப்புகளை சிந்துவெளி என்ற திராவிடரின் நாகரிகம் பெற்றதாகும். இதன் தொன்மை 5300 ஆண்டுகளாகும். ஆனால் இதனை எட்டமுன் இந்த நாகரிக மக்களின் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிந்துவெளியின் பிரதானநகர் ஹரப்பா என பெயரிடப்பட்டுள்ளது.

சிந்துவெளியின் உச்சத்துக்கு முன்பதான மக்கள் வாழ் சுவடுகள் பாகிஸ்தானின் பலுச்சிஸ்தானிலும், சிந்துமா நிலத்திலும் கண்டு பிடிக்கப்பட்டன. வி.ஒ. பயர்சேர்விஸ் பி.த.கார்டி ஜே.எம்.கஸால் ஆகியோர் அகழலாய்வு மூலம் இதனை கண்டுபிடித்தனர். இது ஹரப்பாவின் மூதாதையருடையதாகும். ஆம்ரி என்ற குடியிருப்பில் ஜே.எம்.கஸால் சில்லுகள் இன்றி செய்யப்பட்ட கைகளால் வினையப்பட்ட செப்பனற்ற மட்பாண்டங்களையும், சுடப்படாத மண்கற்களையும் கொண்ட கட்டுமானங்களையும்

இனக்குழு அடையாளப்படுத்தப்பட்டது. இதற்கு முன்பதாக இருந்த முதுமக்களின் குடிகளே மொழியையும் ஒழுங்கமைக்கப்பட்ட பண்பாட்டையும் பெற்றன. வகுத்துக் கொண்டன. ஆகவே எமது மொழி பண்பாட்டு வரையறுப்புகளுக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த எமது முதுமனிதர்கள் உலகின் முழுமையான மனித இனக்குழுக்களின் வடிவமைப்பில் பகுக்கப்பட்டுள்ளனர். இதன் படி திராவிடர்களின் முது மனிதர்கள் முதல்நிலை அவுஸ்திரலொயிட்கள் என்ற இனக்குழுவாக பகுக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தினதும், இலங்கையினதும் முதுமனிதர்கள் அவுஸ்திரலொயிட்கள் ஆவர். இந்த அவுஸ்திரலொயிட்பற்றி முன்பொரு பகுதியில் தந்தோம்.

அதை மீளத் திரும்ப வேறு வழியில் தருகிறோம். இன்று வரை இலங்கைத்தீவில் கண்டெடுக்கப்பட்ட முது மனிதர்கள் இருவராவர். ஆம்

நிரந்தரப்படுத்தியது அக்காலம். இது திடீரென உதித்த ஒன்றல்ல. இதற்கு முன்னரான ஒரு படிமுறைவளர்ச்சிதான் கி.மு 1000 இல் தோன்றிய பெருங்கற்பண்பாடு.

இங்கு சிந்துவெளி நாகரிகம் பற்றிய புதியதகவல்களை தராமல் அது திராவிடர் உலகின் நவீன நகரநாகரிகத்தில் முதலிடம் பெறுகின்றது.

சிந்துவெளி நாகரிகத்தின் தொன்மை கி.மு 3300 என கணிப்பிடப்பட்டுள்ளது. அது இன்றைக்கு 5300 ஆண்டுகட்கு முற்பட்டது. சுட்ட செங்கற்களை கொண்டு கட்டடங்களை மாடிகளாகக் கூட்டி கட்டியது. சில்லுகள் மூலம் செப்பமான மட்பாண்டங்களை செய்ய செப்பு உலோகங்களைப் பயன்படுத்தியது. ஆற்றைத்திருப்பி வேளாண்மை செய்தது. மண்ணினால் சுட்ட சிற்பங்களை செய்தது. ஒழுங்கமைக்கப்பட்ட மிகத்தரமான முதல் நகரத்தை

கண்டுபிடித்தார். ஹரப்பா நகரின் கீழும், ஆம்ரி குடியிருப்பு மட்பாண்டங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த மட்பாண்டங்களின் காலம் கி.மு. 4ஆவது, 3ஆவது ஆயிரமாண்டுகளுக்கு முந்தியதாகும்.

சிந்துவெளி போலவே நீண்ட கால தமிழர் பண்பாட்டின் வளர்ச்சியே பெருங்கற்பண்பாடாகும். அந்த பெருங்கற்பண்பாட்டுக்கள் முந்தியகால சுவடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கண்டுபிடிப்பதற்குரிய அடுத்த அகழாய்வுகள் தமிழகத்திலோ ஈழத்திலோ மேற்கொள்ளப்படவில்லை. வரலாற்றுக்கு முந்திய காலமாக வரையறுக்கப்படும் காலத்தில் இந்த ஈழமண் முழுதிலும் திராவிடர்களின் தொன்மைக் குடிகள் வாழ்ந்துள்ளனர்.

மொழியும் பண்பாடும் வரையறை செய்யப்பட்ட பின்னரே திராவிடர் என்ற மொழிகளினடியிலான

முதுமனிதரின் இரண்டு எலும்புக் கூடுகளே இதுவரை இலங்கையில் கண்டெடுக்கப்பட்டன. அவை இரண்டும் சிங்களதேசத்தின் இரத்தினபுரியில் எடுக்கப்பட்டவை. 37 ஆயிரம் ஆண்டுகள் வரை தொன்மையான இந்த எலும்புக்கூடுகள் அவுஸ்திரலொயிட் இனக்குழுவிற் குரியதாக கண்டுபிடிக்கப்பட்டன.

ஆகவே அவை எம்மினத்தின் முதுமனிதர்களுடையனவே. எமது வேர் இலங்கைத்தீவின் எந்தளவு ஆழத்தில் உள்ளது என்பதை உறுதி செய்துள்ளவை இவை. இதற்குமுன் இலங்கைத்தீவின் முது மனிதர்கள் 1 லட்சத்து லட்சாயிரம் ஆண்டுகளின் முன் வாழ்ந்தார்கள் என்பதை பூநகரிமுதல் ஈழத்தின் தென்முனைவரை கண்டெடுக்கப்பட்ட கற்கால ஆயுதங்கள் உறுதி செய்கின்றன.

# எரிமலைகள் ஏன் ஏற்படுகின்றன

பூமியின் உள்பகுதி நாம் வாழ்கின்ற மேற்பகுதியை போன்றது அல்ல உள்பகுதி . வெப்பமாகக் காணப்படுகிறது. மேலும் பூமியின் மையப்பகுதி கொதிக்கும் குழம்பாகவே இருக்கும் இந்த பாறை குழம்பு சில இடங்களில் தரைக்கு அடியில் 30 கி.மீற்றர் தொலைவில் கூட காணப்படுகின்றது.

இக் குழம்பில் நீராவிகளும் பல வித வாயுக்களும் கலந்திருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் அதிக வெப்பத்தால் இவற்றை மூடியிருக்கின்ற பாறைகள் உருகி விடுகின்றன. அப்போது வாயுக்களின் அழுத்தத்தால் பாறைக்குழம்பு உயர எழும். இந்த நேரத்தில்தான் மென்மையான மேற்பரப்பை கொண்ட தரைப் பகுதிகளில் தரையை பிளந்து கொண்டு வெளியேறுகின்றது. இவ்வாறு வெளிவரும் குழம்பானது வெடிப்பின் வாயைச் சுற்றிலும் வழிந்து கூம்பிய மலைபோல் மாறுகின்றது.

இவ் எரிமலைகள் நிலத்தில் மட்டும் ஏற்படுவதில்லை. கடலிலும் ஏற்படுகின்றன. கடலில் ஏற்பட்டால் பெரிய அலைகளாக உருவெடுத்து பெரும் அழிவையே ஏற்படுத்தி விடுகின்றன என்பது அண்மையில் ஏற்பட்ட சுனாமி மூலம் அனைவருக்கும் தெரிந்ததே.

உலகில் ஏறத்தாழ 500 எரிமலைகள் காணப்படுகின்றன. பசுபிக் சமுத்திரத்தின் அண்டிய பகுதிகளில் தான் அதிகமான எரிமலைகள் காணப்படுகின்றன. இதனை பசுபிக் நெருப்பு வளையம் என அழைக்கின்றார்கள்.

கி.பி 79 இல் வெசூவியஸ் எனும் இடத்தில் ஓர் எரிமலை வெடித்தபோது ஹெர்க்குலேனியம், பாம்பியை ஸ்டேப்யீ எனும் மூன்று இத்தாலிய நகரங்கள் முற்றாக அழிந்துள்ளன என்பது அதன் தாக்கத்தின் தன்மையை தெளிவுபடுத்துகிறது.



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 07**

**பகுதி -39**

"இப்பிடியே புதைத்தபடியே அவர்களை விட்டுட்டுப் போகப்போறீங்களா?" அவன் விரைவாக மணல் பெட்டியிலிருந்து வெளியே பாய்ந்தான். "இங்க நிலத்தில கிடக்கிற சண்டை பிடிக கிற ஆக்களோட நான் விளையாடப் போறன்" என்றான். "நான் அவங்களை ஒழுங்கா வரிசையில நிற்பாட்டப் போறன். பொத்தென்று நிலத்தில் இருந்து கொண்டவன் வீரர்களை ஒழுங்கு செய்தான். பின்பு கையை நீட்டி மணல் பெட்டிக்குள் தான் புதைத்துவிட்ட வீரர்களை வெளியே எடுத்தான். அவர்களை கவனமாக பார்வையிட்டான். அவற்றுள் ஒன்றை என்னை நோக்கி நீட்டினான். "இது அப்பா" என்று அடையாளம் சொன்னான்.

"அப்படியா? அப்ப இது அப்பா... என்ன?" இயல்பான முறையில் நான்கூறினேன்.

"ஓம்." என்றவன் அந்த பொம்மையின் முன்னால் எழுந்து நின்றான். தன் கையைப்பொத்தி அப்பொம்மையை குத்தி வீழ்த்தினான். மீண்டும் அதை நிமிர்த்தி நிறுத்தி விட்டு கையால் குத்தி வீழ்த்தினான். மீண்டும் மீண்டும் பலமுறை இவ்வாறு செய்தான். பின்பு என்னைப் பார்த்தான். "நாலு நிமிசமா இருக்கு?" என்றான். "ஓமோம்" என்று என் கைக் கடிகாரத்தைப் பார்த்தபடிசொன்னேன். "இன்னும் நாலு நிமிசம் இருக்கு." "அதுக்கு பிறகு வீட்ட போறநேரம் வந்துவிடும்" என்றான் டிப்ஸ். "ம்...ம்.....ம்" என்றேன்.

அப்பா போர் வீரனுடன் மீண்டும் விளையாடினான். நிமிர்த்தி நிற்கப்பண்ணி விட்டு குத்தி வீழ்த்திக்கொண்டிருந்தான். மீண்டும் என்னைப் பார்த்தான் இன்னும் மூண்டு நிமிசமா இருக்கு? என்று கேட்டான்.

"ஓமோம்" என்றனான், "அதுக்குப் பிறகு வீட்ட போற நேரம் வந்து விடும்" என்று சேர்த்துச் சொன்னேன். அவனுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்த விடயத்துக்கு அவனது கவனத்தை ஈர்ப்பதற்கென்றில்லாமல் அவன் என்ன பதில் சொல்லுவான் என்று பார்ப்பதற்காகவே அப்படிச் சொன்னேன்.

"ஓமோம்" என்று பதில் சொன்னான் டிப்ஸ். "நான் இங்க இருந்து போவதற்கு விரும்பாவிட்டாலும் போறதுக்கான நேரம் வந்து விடும்."

"ஓம் டிப்ஸ்" என்றேன் நான் "நீங்க வீட்ட போக விரும்பாட்டியும் வீட்ட போற நேரம் வந்து விடும்."


"ஓமோம்" என்ற டிப்ஸ் நீண்ட பெருமூச்சொன்றை வெளிவிட்டான். ஒரு நிமிடத்துக்கு எதுவுமே பேசாமல் அமர்ந்திருந்தான். அவனுக்கு நேரத்தைப்பற்றிய இயலறிவு கடந்த உணர்வு இருந்தது.

"இன்னும் இரண்டு நிமிசமா?" அவன் கேட்டான். "ஓம்"

"அடுத்த வியாழன் நான் வர வேண்டும்" என்றான். "ஓம் நீங்க வரவேணும்" அவன் சொன்னதை ஒப்புக்கொண்டேன்.

"நாளைக்கு வோஷிங்ரன்ர பிறந்த நாள். அது வெள்ளிக்கிழமை. சனி ஒன்றுமில்லை. ஞாயிறு இருபத்து நாலாம் திகதி அதுக்குப் பிறகு திங்கள். நான் திரும்பவும் பள்ளிக்கூடம் போகவேணும்" என்று டிப்ஸ் அறிவித்தான். அவனுடைய கண்களில் பிரகாசமான, மகிழ்ச்சியான ஒளிர்வு தெரிந்தது..

பள்ளிக்கூடத்தில் டிப்சினுடைய வெளிப்படையான நடத்தைகள் அதனை வெளிக் காட்டாதிருந்தாலும் பள்ளிக்கூடம் என்பது டிப்சுக்கு பெறுமதிவாய்ந்த விடயமாக இருந்தது. அவனது ஆசிரியைகள் அவனைப் பற்றி குழம்பிப்போய், விரக்தியுற்று தோல்வியுணர்ச்சி ஒன்றை பெற்றிருந்தாலும் அவர்கள் டிப்ஸை புரிந்துகொண்டிருந்தார்கள். அங்கே என்ன நடக்கிறது என்பதை அவன் அறிந்திருந்தான். அவன் படித்த அணிவகுப்பு பாடல், பள்ளிக் கூடத்தில் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கப்படுவதாகத்தான் இருக்கவேண்டும். மாஷ்மலோ அவர்களுடைய செல்லப் பிராணி.... இல்லை.... கூட்டில் அடைக்கப்பட்ட பிராணி. ஆனால் பள்ளிக்கூடப் பட்டறிவின் ஒரு பகுதியாகவும் மாஷ்மலோ இருந்தது. பள்ளிக் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் என் நினைவுக்கு வந்தது. காந்தக் கவர்ச்சிக் கோட்பாடு பற்றி தனக்குத்தானே சொல்லிக் கொண்டது பற்றி மிஸ் ஜேன் கூறியதை நினைவு கூர்ந்தேன். ஆசிரியைகள் உற்சாகம் கொள்ள வேண்டும். நாம் பிள்ளைகளிடம் முன்வைக்கும் விடயங்கள் ஒவ்வொரு பிள்ளையாலும் தனக்குத் தனக்கேயுரிய



தனித்துவமான முறைகளில், எந்தளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்றோ, தங்கள் தங்கள் உலகங்களை எதிர்கொள்ளக் கற்றுக் கொள்வதற்கு, அவர்கள் பயன்படுத்தும் பட்டறிவுகளில் ஒரு பகுதியாக எந்தளவுக்கு அவை ஆகின்றன என்றோ நாங்கள் ஒரு போதும் அறிந்துகொள்ள முடியாது.

"ஆரம்பப்பள்ளி செய்திகள் எங்களுக்கு திங்கள் கிடைக்கும். , பிரகாசமான மஞ்சள், நீல, வெள்ளை வர்ணங்களில் அதன் அட்டை இருக்கும். பதின் மூன்று பக்கங்கள் இருக்கும். மண்டப அறிவித்தல் பலகையில் அது பற்றி எங்களுக்குத் தெரிவிக்கும் அறி வித்தல் இருக்கும். அதுக்குப் பிறகு செவ்வாய், புதன், வியாழன் வரும் வியாழக் கிழமை நான் இங்கே மீண்டும் வருவேன்!" என்றான் டிப்ஸ். அடுத்த வாரம் என்னென்ன விடயம் நடக்கும் என்று உங்களுக்கு ஓரளவுக்கு நல்லாய் தெரியும்... என்ன? வோஷிங்ரன்ர பிறந்தநாள், பள்ளிக்கூடச் செய்தித்தாள், வாரத்தில் இருக்கிற கிழமைகள், இங்க திரும்பிவரப் போறது..." என்றேன். "ஓம்" என்றான் டிப்ஸ்.

உன்னுடைய வயதுக்கு மீறிய அளவுக்கு விரைவாக வாசிக்கவும் உன்னால் முடியும் என்று




எனக்குள்ளேயே எண்ணிக் கொண்டேன். நீ வாசிப்பதை புரிந்து கொள்ளவும் உன்னால் முடியும். அவனது வாசிப்பைப் பற்றி வாய் விட்டு எது வும் சொல்லவில்லை. அவன் அதை இயல்பான விடயமாக எடுத்துக்கொண்டிருந்தான். நானும் அப்படியே எடுத்துக்கொள்ளப் போகிறேன். அவன் சிறந்த ஒரு வாசகன் என்பது வெளிப் படையாகத்தெரிந்தாலும் அவன் ஒட்டுமொத்த அபிவிருத்தியின் பயன்விளைவுத் தன்மைக்கு அது மட்டும் போதுமானதாக இருக்கப்போவதில்லை. "இன்னும் ஒரு நிமிசமா?" அவன் கேட்டான். "ஓம், இன்னும் ஒரு நிமிசம்" நான் பதில் சொன்னேன்.

அவன் 'அப்பா' என்று அடையாளம் சொன்ன பொம்மையை எடுத்து மணல் பெட்டியினுள் வீசினான். "அப்பா இன்றைக்கு என்னைக் கூட்டிப் போக வருவார்" என்று எனக்குச் சொன்னான் "ஓ! அப்பிடியா!" என்று நான் வியப்போடு கேட்டேன். அப்போ, டிப்சின் உலகத்தினுள் அப்பாவும் கொஞ்சம் வெளிப்படத் தொடங்கிவிட்டார்!

"ஓம்" என்றான் டிப்ஸ், அவன் என்னைப் பார்த்தான் நான் அவனைப் பார்த்தேன். எங்களுக்கான நேரம் முடிந்து விட்டது. எங்கள் இருவருக்குமே தெரியும். ஆனால் அது பற்றி ஒரு வார்த்தையும் நாங்கள் கூறவில்லை. டிப்ஸ் எழுந்து நின்றான். "நேரம் முடிந்து விட்டது" என்று ஆழ்ந்த பெருமூச்சோடு சொன்னான்.

"ஓம் அப்படித்தான்" என்று நான் ஒப்புக் கொண்டேன். "நான் படம் கீறப்போறன்" என்றான் டிப்ஸ். "நேரம் முடிந்து விட்டது என்று தெரிந்தாலும் உங்களுக்கு போகவிருப்பம் இல்லையெண்டு சொல்லுறீங்களோ?"

டிப்ஸ் என்னை ஏறிட்டுப்பார்த்தான் புன்னகை கீறொன்று அவன் முகத்தில் தோன்றி மறைந்தது. விரைவாக கீழே கையை நீட்டிய அவன் தான் தரையில் நிறுத்தியிருந்த வீரர்களின் பொம்மைகளை ஒவ்வொன்றாக நகர்த்தினான். என்னைநோக்கி குறிபார்க்கும் விதத்தில் அவற்றை வரிசைப்படுத்தினான். அவன் கதவை நோக்கி நடந்தான். "சுடுதல் என்று வரும்போது துப்பாக்கிகள் மிக பயனுள்ளவைதான்" என்றான். "அது எனக்குத் தெரிகிறது" என்றேன் பதிலாக.

அவன் தன் தொப்பியை எடுத்துக் கொண்டு மண்டபம் நெடுக நடந்து சென்றான். நானும் அவனுடன் நடந்து சென்றேன். நான் 'அப்பா' வைப் பார்க்க விரும்பினேன். "போய் வருகிறேன்" என்று என்னை வெட்டி விடுவதுபோல் டிப்ஸ் கூறினான். போய்வாங்கோ டிப்ஸ், வாற வியாழக்கிழமை உங்களை சந்திக்கிறன்."

'அப்பா' என்னை நோக்கிப் பார்த்தார் உணர்ச்சி எதுவும் இல்லாமலே, "வணக்கம்" என்றார். நானும் பதிலுக்கு "வணக்கம்" என்றேன்.

"அப்பா, இண்டைக்கு சுதந்திர தினம் இல்லையெண்டு உங்களுக்குத் தெரியுமா?" டிப்ஸ் கேட்டான். "கெதியா வா டிப்ஸ். நான் அவசர மாப் போகவேணும்." 'அப்பா' அவசரப் படுத்தினார்.

"யூலை மாதம்தான் அதுவரும்" விடாப்பிடியாகச் சொன்னான் டிப்ஸ். "ஆனா அது ஒரு வியாழக்கிழமை வருகுது. நாலு மாதம் இரண்டு வாரத்துக்குப் பிறகுதான் அது வரும்"

"வா டிட்ஸ்" 'அப்பா' சொன்னார். டிப்சின் உரையாடல் அவரை மிகவும் அசௌகரியப் படுத்தியிருக்கவேண்டும். அவனது கதைகள் அவருக்கு.... அதாவது அவர் அவைகளை கேட்டிருந்தால்....விசர்த்தனமான வையாக இருந்திருக்க வேண்டும்.

"சுதந்திரதினம் வியாழக்கிழமை வருகிறது....." டிப்ஸ் மீண்டும் முயன்றான். "....யூலை மாதம் நாலாம் திகதிதான் அந்த நாள்."

'அப்பா' டிப்சை கதவுக்கு வெளியே தள்ளி யபடியே "இந்த விசர்க் கதைகளை நிப்பாட்ட மாட்டியா?" என்றார் பல்லைக் கடித்தபடி. டிப்ஸ் பெருமூச்சொன்றை வெளி விட்டான். அப்படிய அவன் துவண்டும் போனான். எதுவுமே பேசாமல் அமைதியாக தன் தந்தையு டன் சென்றுவிட்டான். வரவேற்பாளர் பெண் என்னைப் பார்த்தாள். அறையில் வேறு எவரும் இருக்க வில்லை. "கிழட்டுச் சனியன். எல்லாத்தையும் விட்டுப் போட்டுபோய் ஈஸ்ற் நதியில பாயலாமே!" ஆத்திரத்தோடு சொன் னாள். "ஓம்" என்று அவள் கூறியதை ஆமோ தித்த நான் ஏன் அது இன்னும் அதச் செய்யயில்ல?" என்றேன்.

அடுத்து வரப்போகும் இளம் வாடிக்கையாளருக்கென அறையை ஒழுங்கு செய்ய விளையாட்டு அறைக்குச் சென்றேன். அவதானிப்பாளர்களாக இருந்தவர்கள் உதவி செய்யவென உள்ளே வந்தார்கள். நான் பென்சிலைக் கூராக்க வெளியே சென்றிருந்த போது டிப்ஸ் என்ன கூறினான் என்பதை அவர்களில் ஒருவர் எனக்குக் கூறினார். (தொடரும்....)

---

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணெய் சுத்திகரிப்பெண்டு கொஞ்சக் காணிய மடக்கிப்போட்டார். எப்பண்டு விளங்குந்தானே. 1984இல ஆயிரத்தைஞ்நூறு ஏக்கர். எங்க கிடந்தது உந்த நிலமெண்டு கேளாதையடா-இருக்க இடங்குடுத்தா மடத்தைப் புடுங்கினமாதிரி இருந்த தமிழ் சனத்த எழுப்பிக் கலைச்சுப் போட்டுத்தான் குடுத்த வங்கள். பிறகென்ன. குரங்கு அப்பம்பிரிச்சுதே அதேமாதிரி எண்ணெக் கிவ்வளவு, எண்ணெய் ஏத்த இவ்வளவு, எண்டு, துறைமுகத் திற்கிவ்வளவு எண்ணெய்க்குதத்திற்கிவ்வளவு எண்டு துறைமுகத்துக்கும் ஆயிரமேக்கர் குடுத்தினம். சிரங்கு முத்திப் படுவணாக்கின மாதிரி பருப்போல வந்த வினை எங்களுக்குப் பார வினையாச்சுதடா... ம்.இப்ப ஒப்பாரி வைச்சென்ன செய்யிற, பத்தும் பத்தாதுக்கு இப்ப சுனாமியடிச்சதால எழும்பின தமிழற்ற காணி வழிய புதுசா என்ன மாய் மாலஞ் செய்ய வெளிக்கிடுகினமோ தெரியா. என்னவோ சொல்லுவினம் உப்பிட்ட பாண்டமும் உண்மையுள்ள நெஞ்சும் தட்டியுடையாமத்தானா உடையுமாம். எங்க தமிழரை இல்லாமப் பண்ணிப்போட்டு எல்லாத்தையுஞ் சுருட்டி அடிமடிக்கை போடவெண்டு திரியுறவைக்கு இப்ப ஆமியக்காட்டி ஒண்டுஞ் செய்யேலா. அதுக்கு வசதியாத்தானே சுனாமி வந்தது. என்ன என்னவோ சொல்லுவினமே. பாவியார் போறடம் பள்ளமும் திட்டியுமாம். என்னவோடா என்ரவயதுக்கேத்த மாதிரிக் கதைக்கிறனெண்டாப் போல நீங்கள் இடிஞ்சுபோய் இருந்திராதையுங்கோ. கேளாத கடன் வராது. மறந்தசொத்து மக்களுக்குதவாது நல்ல் நினைவில வைச்சிருங்கோ. புத்தர் இஞ்ச பிறக்கவுமில்லை. சிங்களங் கதைக்கவுமில்லை. அவையென்னவாம் பவுத்த சிங்கள நாடாமோ... உதைப்போய்... எங்க நேபாளத்தில சொல்லிப்பாக்கட்டும். எல்லாம் நாங்கள் குடுத்த இளக்காரம்.

---

## 84 ஆம் நாள் நினைவஞ்சலி



நடேசு இராசம்மா
25.03.1946



சசிகரன் சிந்துசன்
11.12.2002



சசிகரன் ஜெகதீஸ்வரி
31.01.1980

**இறப்பு:- 26.12.2004 ஆழிப்பேரலை**

**19.03.2005 சனிக்கிழமை தமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரையும் வேண்டுகிறோம்.**

வத்திராயன்.வடக்கு.

தகவல்:-
குடும்பத்தினர்

பாவலன் பதில்கள் என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.




*பாவலரே!*

*பஸ்ஸில் மனித நேயமின்றி காற்று போகாத அளவுக்கு இருபாலாரையும் அடைத் துத் தள்ளுகின்றார்களே நடத்துனர்கள் இவர்களை என்ன செய்யலாம்.*

*நதியா,*
*வள்ளிபுனம்.*

நவீன இடி அமீன் பட்டம் கொடுத்து கௌரவிக்கலாம்.

*பாவலா!*

*இன்று தலைநகரில் உள்ள பல வியாபார நிலையங்களில் மிகக் குறைந்த வயது சிறுவர்களே வேலை செய்கின்றார்கள் இவர்கள் பற்றி பேசும் அமைப்புகளுக்கு ஏன் இவைகள் தெரிவதில்லை?*

*பிரசாத்,*
*இராமநாதபுரம்.*

அவர்களுக்கு பேச மட்டும் தான் தெரியும்.

*பாவலா!*

*பணம் உள்ளவர்களும், பதவியுள்ளவர்களும் தமது சொந்த உறவுகள் ஏழைகளாக இருந்தால் ஏன் உறவு என்று சொல்ல மறுக்கின்றார்கள்?*

*சுசி,*
*வட்டக்கச்சி..*

பந்தபாசம் பணத்தாலும் பதவியாலும் தான் தீர்மானிக்கப் படுகிறது.தம்பீ...!

*பாவலா!*

*உலக வங்கியின் இலங்கை பிரதிநிதி இனவாதத்தின் முன் நின்றுபிடிப்பாரா? அல்லது துவண்டுபோவாரா?*

*பிருசா*
*வவுனியா.*

ஏற்கனவே துவண்டுமட்டுமல்ல துடித்தும் போயுள்ளார் சிங்கள இனவாதவிஷம்தீண்டியதால்!

*பாவலா!*

*சந்திரிகா எமது பிரச்சினை தொடர்பாக ஓர் உடன்பாட்டிற்கு வருவார் போன்று எனக்குத் தோன்றுகின்றது. உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றது?*

*பிரபா,*
*முள்ளிவாய்க்கால்.*

மாயைத்தோற்றமது மயங்கி விடவேண்டாம்.

*பாவலா!*

*ரெட் டீம், திருப்பாச்சி டீம், கில்லிடீம் என நிறைய அணிகள் இன்று உள்ளன. நானும் நீரும் சேர்ந்து ஓர் அணி அமைப்போமா? (பெயர் நீரே வைத்துக்கொள்ளும்)*

*சுதர்சன்,*
*தேவிபுரம்.*

'டீம் அமைக்க உமக்கு வேறு ஆளே கிடைக்கலியா'.

*பாவலா!*

*தென்னிலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டால் தமிழ் பேசுவதில்லை. தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் ஊமைகளாக மாறிவிடுகின்றனர்? இது எதனைப் புலப்படுத்துகிறது?*

*பத்மசுதந்திரா,*
*உடையார்கட்டு.*

நாகாக்க என்ற வள்ளுவரின் வரிகளின் அர்த்தம் புரிந்தவர்கள் சொல் இழுக்குப்பட்டு சோகாக்க அவர்கள் தயாராக இல்லை...!

*பாவலா!*

*கதிர்காமர் புதிய சனாதிபதியாக வந்தால் தமிழரின் நிலைமை எப்படி இருக்கும்?*

*சாரங்கன்,*
*இரத்தினபுரம்.*

அப்படி ஒரு அவல நிலை தமிழருக்கு வராதிருக்க அந்தக் கதிர்காமக் கந்தனைப் பிரார்த்திப்போமாக.

*பாவலா!*

*சிந்திக்க, சிரிக்க ஒருவரி கூறும் பார்ப்போம்?*

*சதுசா,*
*ஜெயபுரம்.*

மனிதன் மட்டும் சிந்திக்கவும் சிரிக்கவும் தெரிந்த ஒரேயொரு மிருகம்.

*பாவலா!*

*ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்களின் போது இராணுவம் ஊடகவியலாளர்கள் மீது முதலில் கை வைக்கின்றார்கள் ஏன்?*

*யாமினி,*
*ஸ்கந்தபுரம்.*

அவர்கள் கைகளில் கமராவும் பேனாவும் தான் இருக்கும், கல்லோ வேறு ஆயுதமோ இருக்காது என உறுதியாக நம்புவதால்...

*பாவலா!*

*எப்படியானவர்களை காதலிக்கலாம்?*

*ரதி,*
*புதுக்குடியிருப்பு.*

உங்களைக் காதலிப்பவர்களை

*பாவலா!*

*நாகரிக உலகின் நங்கையரின் ஆடைத்தெரிவுக்கு உங்களின் ஆலோசனை?*

*கவிதா,*
*பாரதிபுரம்.*

பத்திரிகைகளின் விளம்பரப் பலகைகளைப் புரட்டிப்பாருங்கள்.

*பாவலரே!*

*சின்னவீடா வரட்டுமா? பெரியவீடா வரட்டுமா? இது போன்ற இன்றைய பாடல்கள் பற்றி?*

*பவானி,*
*யாழ்ப்பாணம்.*

தமிழகத்தின் கலாச்சாரம் எப்படியுள்ளது என்பதைக்காட்டுகிறது.

*பாவலா!*

*இலங்கைத் தீவில் விடுதலைப்புலிகள் அமைப்பு உருவாகாமல் விட்டிருந்தால் நிலைமை?*

*நிதர்சினி,*
*ஜெயந்திநகர்.*

முழுத்தமிழர்களும் அழிந்திருப்பார்கள்... அல்லது புலம் பெயர்ந்துவாழும் அகதிகளாயிருப்பார்கள்.




மச்சான் என்ன மாப்பிளை பகுதி வந்துபோகினம் ஒப்பேறிற்றுதே

ஒப்பேறும்போலதான் கிடக்கு, அண்ணைக்கு ரெலிபோனடிச்ச நான்- காசுகொஞ்சம் தேட வேணும்.

ஏன் சீதனமேதும் கூடவோ தெரியாதே... அக்காவுக்கு ஏழில செவ்வாய் சாதகம் கேட்டவை அதுதான் சாத்திரியாரிட்டப் போவமெண்டு.

விசரா ஏழில செவ்வாயெண்டா ஏன் சாதகத்தைக் குடுக்கிறாய். இஞ்ச கொண்டா எனக்குத் தெரிஞ்சாளொண்டிருக்கு மாத்தி எழுதுவிப்பம்.

ச்சா பிறகு பிரச்சினை வராதே.

சும்மா விடப்பா எங்கட அம்மாவுக்கே அவர்தான் சாதகம் மாத்தி எழுதினவராம். அம்மா நெடுக்கச் சொல்லுவா.

ஏன் உன்ர அம்மாவும் செவ்வாக் குற்றமே.

இல்லையடா அப்பாவுக்குத்தான் அதுக்குத்தோதா அம்மான்ர சாதகத்தையும் மாத்திவிட்டாராம்.


ம்... ஒரு பிரச்சினை சரி... மற்றது... காணி வன்னிக்க வேண்டாமாம். வவுனியாவுக்க வேணுமெண்டு சொல்லுகினம்.

உதுகஷ்டம் வவுனியாவுக்க கையில அள்ளின மண்ணும் விலை காணி என்னெண்டு எடுக்கப்போறாய். ம்... தேடிப்பாப்பம்.

பிறகு தங்கம் விலை இறங்கிப் போச்சாம். பிளாட்டினத்தில செயின் செய்து போடுவியளோ எண்டு கேட்டவை.

ஓகோ.. அப்ப மாப்பிளை பொம்பிளை கேட்டுவரேல்ல சொத்துக் கேட்டுத் தான் வந்திருக்கிறார்போல ●●

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-111



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினை வுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-111

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : ........................................ ஈழநாதம்
முகவரி : ........................................ யாழ்சாலை,
........................................ கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -110



**அ.மதன்,**
**யாழ்மதி உதிரிகள்**
**வாணிபம்,**
**யாழ்சாலை, கிளிநொச்சி.**

## பரிசுக்குரிய வரிகள்

*அன்னை மடி மீது அரண்டு தூங்கவில்லை- நான்*
*வீரத் தமிழ்ப் பரம்பரையின் வித்தல்லவா?*
*போனவற்றை எண்ணி ஏங்கவில்லை - நாளை*
*மலரும் ஈழத்திற்கு என் பங்கென்ன? சிந்திக்கிறேன்.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*அள்ளிச்சென்றது 'சுனாமி' உன் அப்பனை*
*அடக்கமுடியாத சோகத்தில் தளர்ந்து விட்டாள் அன்னை*
*தளர்வுற்ற அன்னைக்கு ஊன்று கோல் நீயடா*
*தகர்த்தெறி சோகம் தனைதாங்கிப் பிடி அன்னையை.*

சிவாஜினி சுரேஸ்குமார்,
புதுக்குடியிருப்பு.

*அம்மா உன்பிள்ளை அருகினில் இருக்க*
*சுனாமி (ஆமி) கொண்டு போன ஐயாவை*
*நினைத்து நினைத்து எத்தனைநாள் இருப்பாய்*
*இது "தலைவன்" காலம் எழுந்திரு, துணிந்திரு.*

சு.செல்வி
பரந்தன்.

*பத்துமாதம் சுமந்து உனை பெற்ற அன்னை*
*பாதையிலே பசியால் வாடிவிட்டாளோ?*
*பாலகனே நீ ஏங்காதே - துணிந்திரு*
*பாசம்மிகு உறவுகள் நம்தேசத்தில் உள்ளனர்.*

திருமதி. ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*அன்று ஊரிழந்து உறவிழந்து*
*ஓடிவந்தோம் "ஆமியால்"*
*இன்று உயிரான என் தாயை இழந்து*
*வாடிநிற்கிறேன் "சுனாமியால்"*

தெய்.சதீஸ்பாபு,
கிளிநொச்சி.

*நீ உறங்கும் மண்ணுனக்குச் சொந்தமில்லை*
*உறங்கி விழித்தால் நீ அடிமைநிலை*
*நான் உறங்க எனக்கு சொந்த மண்வேண்டும்*
*அதுவரையில் உறங்க உன்மடிவேண்டும்.*

திருமதி.சந்தோசம்,
பருத்தித்துறை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிப வாடிக்கையாளர்களுக்கு



குமரகுரு புடைவை
அழகுப்பொருள் வாணிபத்தினரின்
மாபெரும் பரிசளிப்புவிழாவும்
வாடிக்கையாளர்
கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும்
20-03-2005 ஞாயிற்றுக்கிழமை
காலை 10-30 மணிக்கு
கிளிநொச்சி கலாச்சார
மண்டபத்தில்
வெகுசிறப்பாக நடைபெற
உள்ளதால் குமரகுருவின்
அனைத்து
வாடிக்கையாளர்களையும்
தவறாது கலந்து கொண்டு
நிகழ்வினைச்சிறப்பிக்கும்
வண்ணம் வேண்டுகிறோம்.

குமரகுரு உரிமையாளர்,
பணியாளர்கள்.



## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி.

தொ.பே: 021-228 5971


---

செல்வம் செழிக்கக்கூடிய வளமான விளைச்சலுக்கு
இலங்கையில் முன்னணியில் திகழும்

# எட்க்ரோ கிரிவ்ஸ்

MK-12/MK-20

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கிவரக்கூடிய சலுகைகள் ஒரு வருடத்திற்கான உத்தரவாத சான்றிதழ். பலம் மிக்கதும் நீண்ட காலம் உழைக்கக்கூடியதும் அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை. சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்கவல்லது. எரிபொருளை சேமிக்க வல்லது. நாடளாவிய விற்பனைக்குப்பிந்திய சிறந்த சேவை. தேவையான அளவு உதிரிப்பாகங்கள்.



SM Graphics

EDNA® GROUP

## எட்னா அப்ளயன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

160, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-04
தொலைபேசி: 508961-2, 502291-3, 592135-6
தொலைநகல்: 594558, 500909
தொடர்புகளுக்கு: மயூரா-0777 418821 இபுனு-0777 418817

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

## ஆர்க் என்ரப்பிறைசஸ்

(சி-11452)

150, 152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 2052

---

ஓம் சக்தி


குருவடிசரணம் திருவடிசரணம்

மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் - புதுக்குடியிருப்பு நடாத்தும்


# சமூகநல யாகம்

மற்றும் சுனாமியால் இறந்தும் காணாமல் போனவர்களுக்கான

# ஆத்ம சாந்தி கிரிகை







காலம்: 24-03-2005 வியாழக்கிழமை
நேரம்: 8.30 முதல்
இடம்: வழிபாட்டுமன்றம், மற்றும் முல்லை பொக்கணை கடற்கரை.



புதுக்குடியிருப்பு வாரவழிபாட்டு மன்றம்



கலச சக்கரம்



குங்கும அர்ச்சனை



யாககுண்டம்

நமது பண்டைய திராவிட காலத்தில் இருந்த இயற்கையுடன் கூடிய பஞ்சபூத வழிபாடுகள், பின்னர் இடம்பெற்ற ஆரியப்படையெடுப்புக்களால் அழிந்து போனவற்றை இன்று என் சித்த சக்தியால் மீண்டும் வாரி வழங்க வேதமறையாம் தமிழ் மொழியில் மந்திரங்களை நமக்குக்கொடுத்து வழிபட வைக்கும் ஆன்மீக குரு அருள்திரு பங்கார அடிகளாரின் அருள் ஆணைப்படி இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆத்மாக்களின் சாந்திக்கான பூசையில் பங்கு பற்றுவதுடன், சமுதாய மேம்பாட்டிற்காக நடத்தப்படும் யாகத்திலும் அனைவரையும் கலந்து அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றார்கள்.

ஆதிபராசக்தி வாரவழிபாட்டுமன்றம்,
4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

தொ.பேசி உள்ளூர்: 077-6684742, 077-6624542
சர்வதேசம் : 0044-7946511739

குறிப்பு: இவ்யாகத்தில் கலந்து கொள்பவர்களுக்கு சித்தர்பீட முறைப்படி (ஆகுதிப்பொருட்களை இட) அனைவரைக்கும் வாய்ப்புக்கொடுக்கப்படும்

(சி-11562)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது